
THE MANJARI DIGEST MARCH 2004

# ஞ்சரி

நம் நாட்டு மொழிகளில்
நம்பர் 1 டய்ஜெஸ்ட்

2004



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
15 March 2004.
நூலகம்

# கலைமகள் வழங்கும்
# டெல்லி சுற்றுலாச் சிறப்பிதழ்

* கலைமகள் டெல்லிச் சிறப்பிதழ் ஒன்றை வெகுவிரைவில் வெளியிடப் போகிறது.

* டெல்லியில் பார்க்க வேண்டிய இடங்கள், டெல்லியில் உள்ள தமிழ்ப் பிரமுகர்களின் குறிப்புகள் இப்படிப் பல சுவையான தகவல்கள்.

* டெல்லித் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ் நிகழ்ச்சிகள் டெல்லி அரசியல் போக்குகள் இன்னும் படிக்கப் படிக்கச் சுவையான செய்திகள்.

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்
நிறுவனர்: அமரர் என். ராமரத்னம்

மலர் : 57 சுபானு - பங்குனி மார்ச் - 2004 இதழ் : 3

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



# மஞ்சரி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
5 March 2004
நூலகம்

உள்ளே ...

கும்பகோணம் மகாமகம் ..... 2
தென்கச்சி பதில்கள் ..... 9
அணுவிஞ்ஞானி கானின் உண்மையான முகம் ..... 13
பயணக் கட்டுரை ..... 17
ஸ்லோவோகியா சினி கதை ..... 26
புத்தெழுச்சித் தொடர் ..... 34
ஹோலிக் கட்டுரை ..... 41
வலைத் தளத்தில் ..... 46
பாரசீகத்தில் உபநிடதங்கள் ..... 54
பத்மநாபனுக்கு சமர்ப்பணம்
திருவாங்கூர் இளையராஜாவின் எண்ணங்கள் (தொடர்ச்சி) ..... 56
பதவிக் கைதி (சிறுகதை) ..... 65
மரணத்தின் மருத்துவர் ..... 73

*பாபம் போக்கும் மகாமகம்*

## புனித நதிகளின் நிஜமான சங்கமம் நிகழட்டும்!


இந்த ஆண்டின் மகாமகம் வரும் 6 ஆம் தேதி நிகழவிருக்கிறது. குடந்தை வரலாற்றுப்படி, கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரா, ஸரயு ஆகிய புனித நதிகள் ஒன்பதும் தங்கள் பாபங்களைப் போக்கிக் கொள்வதற்காக பரமேச்வரனின் ஆணைப் படி மகாமகக் குளத்தில், மகாமக தினத் தன்று நீராடி, இங்கே சங்கமமாகின்றன.

மேலோட்டமாகப் பார்த்தால் இது கதை/புராணம். இதனுள் இருக்கும் செய்தி - நதிகள் சங்கமம் வடக்கிலிருந்து தெற்கே உள்ள புனிதத்தலத்திற்கு என்பது! உணர்வுகளால், ஆன்மிகச் சிந்தனையால் பழங் காலத்திலேயே கண்ட நதிகள் சங்கமம் என்ற சிந்தனை, இந்த அறிவியல் யுகத்தில் நிஜத்தில் ஏன் நிகழக்கூடாது?

பிரதமரின் தங்க நாற்கரச் சாலைத் திட்டங்களால் நாடு இணைகிறது. அதற்கு அடுத்த அத்தியாவசியத் தேவையான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, நதிகள் இணைப்புக்கு பிரதமர் வாஜ்பாய் முக்கியத் துவம் கொடுத்துள்ளது பாராட்டுக்குரியது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வந்த சுபானு வருட மகாமகத் திருவிழாவின் போதும் இப்போது போன்றே வறட்சியால் நீரின்றி குளம் இருந்ததாக ஒரு அரசுக் குறிப்பு கூறுகிறது. இந்த நிலை மாறி அடுத்த மகாமகத்திற்குள் நதிகள் தேசிய அளவில் இணைக்கப்பட்டு, நிஜத்தில் கங்கையும் யமுனையும் காவிரியில் இணைந்து மகாமகக் குளத்தில் சங்கமமாக வேண்டும். அதில் புனித நீராட வேண்டும்!

மேலட்டை ஓவியம் : குடந்தை மகாமக விளக்கம் - ஓவியர் எஸ். ராஜம்



# கும்பகோணம் மகாமகப் பெருவிழா

**ஜய்ராம்ஜி**

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ் - மாசி எனப்படும் கும்பமாதத்தில், குரு சிம்ம ராசியிலும், சூரியன் கும்பராசியிலும் இருக்கும்போது, பௌர்ணமி திதியுடன் கூடிய மகநட்சத்திரத்தன்று, வடக்கில் நிகழும் மகா கும்பமேளாவுக்கு நிகரான, கும்பகோணம் மகாமகம் நிகழ்கிறது.

குடந்தை நகரில் இரண்டு புனிதக் குளங்கள் உள்ளன. முதலாவது மகாமகக்குளம். அடுத்தது பொற்றாமரைக் குளம்.

புராண ஆதாரப்படி ஒரு சமயம், நவகன்னிகள் எனப்படும் ஒன்பது பெண்கள் முதலாவதாகிய இந்த மகாமகக்குளத்தில் வந்து நீராடி நற்கதி பெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்கள் நீராடிச் சென்ற அந்த தினமே இன்றும் மகாமகப் பெருவிழாவாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அந்தக் குளத்தின் வடகரையில் உள்ள ஸ்ரீகாசிவிசுவநாதர் ஆலயத்தில் அந்த ஒன்பது கன்னிகளுக்கும் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மக்கள் அன்றைய தினம் அவற்றைத் தரிசித்து மகிழ்கிறார்கள்.

பொற்றாமரை புனிதக்குளம் பற்றிய புராணக்கதை ஒன்றும் வழங்கி வருகிறது. அதன் வடகரையில், ஹேமரிஷி என்பவர் பெயரில் ஒரு மண்டபம் உள்ளது. அந்த ரிஷிக்கு ஒரு மகள். கோமளவல்லி என்று பெயர். அவளுக்குத் திருமணப் பருவம் வந்த பிறகும், அந்தமுனிவரால் தகுந்த வரனை அவளுக்குத் தேடித் தர முடியவில்லை. அதை எண்ணி அவர் மிகவும் வேதனைப்பட்டார்.

கடைசியில், ஒரு நல்ல வரன் கிடைக்க அருள் புரியவேண்டிப் பிரார்த்தித்து, அவர் ஸ்ரீசாரங்க





பாணிப் பெருமாளை எண்ணித் தவம் புரிந்தார்.

நீண்ட தவத்துக்குப் பிறகு, ஒரு உத்தராயணத்தில், மகர சங்கராந்தி தினத்தன்று, ஸ்ரீசாரங்கன் அவருக்குக் காட்சி கொடுத்தார். முனிவரும் தமது மனக்குறையை எடுத்துக் கூறி அருள்புரிய வேண்டினார்.

அதைக் கேட்ட பெருமாள் ''கவலை வேண்டாம். உங்கள் மகளை நானே மணந்து கொள்கிறேன்'' - என்று அருள் புரிந்தார். மகிழ்ச்சி அடைந்த ஹேமரிஷி, அவ்வாறே தன்மகள் கோமளவல்லியை ஸ்ரீசாரங்கருக்கு மணம் செய்து வைத்தார் என்று புராணங்கள் விவரிக்கின்றன.

அந்த சாரங்கபாணிப் பெருமாளுக்கு, 'ஆராஅமுதன்' என்ற பெயரும் உண்டு. அதற்கு 'எப்போதும் தன்னிடம் அமிர்தத்தை வைத்துக் கொண்டிருப்பவர்' என்பது பொருள்.

ஒரு பிரளய காலத்தில், சிவபெருமான் அனுப்பிய அமிர்த கலசம் இந்தக் கும்பகோணத்தில் வந்து தங்கியதன் காரணமாகத்தான், அந்த சாரங்கரால் எப்போதும் தன்னிடம் அமுதத்தை வைத்துக் கொண்டிருக்க முடிகிறது என்றும் கூறுவர்.

இந்நிகழ்ச்சியை விளக்கவும் ஒரு புராணக் கதை உண்டு.

பிரளயத்துக்குப் பிறகு, மீண்டும் புது உலகைப் படைப்பதற்காக சிவபெருமான் ஒரு மண் குடத்தில் எல்லா ஜீவராசிகளின் விதைகளையும் வேதங்களையும் இட்டுக் குடத்தில் அமிர்தத்தையும் ஊற்றினார். அக்குடத்தைப் பிரம்மன் மூலம் மகாமேருமலைச் சிகரத்தின் மீது வைத்து விட்டார்.

கடும் மழைக்குப் பிறகு, உயிர்கள் எல்லாம் அழிந்து விட்டன. இப் பூவுலகமும் நீரால் சூழப்பட்டு மூழ்கிவிட்டது. ஆனால், மேருபர்வதச் சிகரத்தில் வைக்கப்பட்ட அமிர்த கலசம் மட்டும் நீரில் மிதக்கத் தொடங்கியது.


அப்போது வீசிய காற்று, அக்குடத்தைத் தெற்கு திசை நோக்கித் தள்ளிக் கொண்டு சென்றது. அந்தக் குடம் தற்போதைய கும்பகோணத்தில் வந்து தங்கியதாகவும் ஐதீகம்.

அதைச் சற்று நகர்த்த சிவன் அதன்மீது பாணம் தொடுக்கவே அக்கும்பத்தின் கோணம் அதாவது மூக்குப் பகுதி (வாய்) உடைந்ததாகக் கூறப்படுகிறது. எனவேதான் அந்த இடம் - அதாவது ஊர் கும்பகோணம் எனப்படுகிறது என்பர்.


குடம் உடைந்த இடம் என்பதால் குடந்தை எனச் சுருக்கமாகப் பெயர் அமைந்தது. வைணவர்கள் இதைத் திருக்குடந்தை என்பர்.

மேலும், சிவனின் பாணம் குடத்தைத் தாக்கிய இடம் இன்று பாணாதுறை என வழங்கப்படுகிறது.

இப்படி நடந்த மேலும் பல நிகழ்வுகளுக்குப் பிறகு, இறுதியாகக் கலசத்து அமிர்தம் இருவேறு திசைகளில் வழிந்தோடி, இரண்டு புனிதக் குளங்களாகத் தேங்கியதாக ஐதீகம்.







அந்த இரு குளங்களும்தான் மகாமகக் குளமும் பொற்றாமரைக் குளமும்! ஆகும்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு மாசி மாதப் பௌர்ணமி சேர்ந்த மகநட்சத்திரத்தன்று, குரு சிம்ம ராசியிலும், சூரியன் கும்பராசியிலும் சஞ்சரிக்கும் போது நிகழ்ந்தன. இந்தக் கிரகச் சேர்க்கை பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் நிகழும். அந்தப் புனித தினமே மகாமகம் என்பதாகும்.

அந்தச் சமயத்தில், இந்தியா முழுவதிலும் இருந்து, பல லட்சம் யாத்திரிகர்கள் கும்பகோணம் வந்து கூடி, அப்புண்ணிய வேளையில், முதலில் மகாமகக் குளத்திலும், அடுத்ததாகப் பொற்றாமரைக் குளத்திலும், பின்னர் வடபுறம் ஓடும் புனிதக் காவிரி நதியிலும் நீராடிப் பலன் பெறுகின்றனர்.

மகாமகம் தவிர, இந்தக் கும்பகோணம் நகருக்கு மேலும் பல தனிச்சிறப்புகள் உண்டு. இந்தியா முழுவதிலும் பிரம்மாவுக்கு இரண்டே இடங்களில்தான் தனிக் கோயில் உண்டு. அவ்விரண்டில் ஒன்று இந்நகரில் உள்ளது.

மேலும், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் இங்குக் கோயில்கள் இருப்பதால், இந்நகரை மும்மூர்த்தித்தலம் - அதாவது மூர்த்தி க்ஷேத்திரம் என்கிறோம்.

தமிழ் ஆண்டுக்கணக்கின் முதலாவது மாதமாகிய சித்திரையில், இங்குள்ள நாகேஸ்வரன் கோயில் சிவலிங்கத்தின் மீது சூரியனின் நேர்க் கிரகணங்கள் விழுவதால், இந்நகருக்குப் பாஸ்கரக்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு. பாஸ்கரன் என்பது சூரியனின் மற்றொரு பெயர்.

இந்த நகரில் சைவ - வைணவ - மாத்வ - ஜைன மடங்களும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

# கொல்கத்தா ஹம்ஸேஸ்வரி கோவில்

புவனா நடராஜன்

மேற்கு வங்காளத்தில் பன்ஸ் பேரியா என்னுமிடத்தில் இருக்கும் ஹம்ஸேஸ்வரி கோவில் அற்புதமும் அழகும் வாய்ந்தது. 70 அடி உயரமும் ஐந்து மாடிகளும் கொண்ட இந்தக் கோவில் தாந்திரிக முறையில் கட்டப்பட்டுள்ளது. கோதிக் கட்டிட அமைப்பு உள்ளதாக இருக்கும் இந்தக் கோயில் சரியாகப் பராமரிக்கப்படாமல் சிறிது சிதைந்த நிலையிலேயே இருக்கிறது. இது பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று சொல்கிறார்கள்.

நடு நாயகமாக இருக்கும் இந்தக் கோவிலில் 13 கோபுரங்கள் உள்ளன. 5 கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், மனம், புத்தி, அகங்காரம் இவற்றைச் சுட்டிக்காட்டும் விதமாக இந்த பதிமூன்று கோபுரங்கள் அமைந்துள்ளன. ஐந்து மாடிகள் தாந்த்ரிக வழிபாட்டுப்படி இடா, பிங்கலா, வஜ்ராக்ஷா, ஸீஸ¬மா, சித்ரிணி என்ற ஐந்து வகைப் பெண்களைக் குறிப்பதாகச் சொல்கிறார்கள்.

இக்கோயிலில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள சலவைக்கற்கள் ‘சுனார்’ என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்று சொல்கிறார்கள். ராஜா ந்ருஸிங்க தேவர் 1799-ம் ஆண்டு காசியிலிருந்து அழைத்து வரப்பட்ட சிற்பிகளைக் கொண்டு இந்தக் கோவிலைக் கட்ட ஆரம்பித்தாராம். அவர் இறந்தபிறகு அவரது மனைவி ராணி சங்கரிதேவி தொடர்ந்து 1814-ம் ஆண்டு கட்டி முடித்தாராம்.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் கோவிலுக்கு வருகை தருகிறார்கள். பக்கத்திலேயே இருக்கும் அனந்த வாசுதேவர் கோவிலிலும் டெர்ரகோட்டா வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தற்போது இந்திய தொல்லியல் துறை ஹம்ஸேஸ்வரி கோவிலையும், அனந்த வாசுதேவர் கோவிலையும், நாகபட்கானா பகுதியையும் நன்கு பராமரித்து வருகிறது. சரித்திர ஆசிரியரான டாக்டர் அதுல் ஸ¬ர் வங்காளத்தின் பதிமூன்று ரத்னங்களில் இது மிக முக்கியமான ரத்





னம் போன்ற கோவிலாகும் என்று வர்ணிக்கிறார்.

இந்த ஹம்ஸேஸ்வரி கோவில், காஜிதர்க்கா (திரிவேணி) பாண்டல் சர்ச், ஹ¬க்ளி இமாம்பரா இவை எல்லாமே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புனிதத்தன்மை வாய்ந்த, இடங்களாகக் கருதப்படுகிறது. இவற்றை நன்றாக பராமரித்தால் டூரிஸ்டுகளின் கவனத்தை ஈர்த்து வங்காளத்திற்கு நிறைய வருமானம் ஈட்டலாம் என்கிறார்கள்.

பாண்டல் (Bandel) பகுதியில் இருந்தும், பன்ஸ்பேரியாவிலிருந்தும் எளிதில் இந்தக் கோயிலைச் சென்றடையலாம். அந்தப்பகுதி மக்களும், கோவில் ட்ரஸ்ட் அங்கத்தினரும் கோவிலைப் பழுது பார்த்து பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்தக் கோவில் தாந்திரிக, Gothic அமைப்பு இரண்டும் கலந்து கட்டப்பட்டதால் இது புதுமையான கோவிலாகவும் சக்தி வழிபாடு நடக்கிறது என்பதால் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. கல்கத்தா வருபவர்கள் இந்தக் கோவிலை அவசியம் பார்க்க வேண்டும். ●

ஹிந்துஸ்தான் டைம்ஸில் இருந்து

## காலம் மாறுகிறது: வேலை தேடி பாரதம் வரும் வெளிநாட்டினர்

பாரதீயர்கள் வேலை தேடி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் காலம் மலையேறப் போகிறது. ஆம் சமீபகாலமாக அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் கணினி மென்பொருள் நிபுணர்கள் வேலை தேடி பாரதம் வருகிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்கிறது மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்.

“கடின உழைப்பு, வேலையில் ஈடுபாடு, குறைந்த சம்பளம் இதனால் கவரப்பட்ட பல வெளிநாட்டு நிறுவனங்கள் பாரதத்தில் தங்கள் கிளைகளை ஆரம்பிக்கின்றன. அதனால் வேலை வாய்ப்பை எதிர்பார்த்து, பல வெளிநாட்டினர் பாரதம் நோக்கி வருகிறார்கள்'' என்கிறார் ஹெட் ஹண்டர்ஸ் (இந்தியா) பி.லிட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கிரீஸ் லக்ஷ்மிகாந்த். வேலை தேடி பாரதம் வரும் வெளிநாட்டினர் வாரத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் உயர்ந்துள்ளது.

இதைத் தவிர வெளிநாடுகளில் பணிபுரிந்து வந்த பாரதீயர்கள் இப்போது தாயகம் திரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம் வெளிநாடுகளில் கிடைத்த சம்பளம் அவர்களுக்கு இப்போது இங்கேயே கிடைத்து விடுகிறது.

*- எகனாமிக் டைம்ஸ்*


**Statement about Ownership and other Particulars about MANJARI**
**FORM IV**

| | |
|---|---|
| 1. Place of Publication | : Chennai |
| 2. Periodicity of Publication | : Monthly |
| 3. Printer's Name | : Rajam Offset Printers |
| Nationality | Indian |
| Address | : 1, Portugese Church St 9th Lane, Chennai-600 001 |
| 4. Publisher's Name | : R.Narayanaswamy |
| Nationality | : Indian |
| Address | : Old No.22, New No.13 North Mada Street Srinagar Colony Saidapet, Chennai-600 015 |
| 5. Editor's Name | : R.Narayanaswamy |
| Nationality | : Indian |
| Address | : Old No.22, New No.13 North Mada Street Srinagar Colony Saidapet, Chennai-600 015 |
| 6. Name and Addresses of individuals who own the Newspaper and Partners or Share Holders holding more than one percent of the total capital | : R.Narayanaswamy Mrs.Malathi Ramaratnam Old No.22, New No.13 North Mada Street Srinagar Colony Saidapet, Chennai-600 015 |

I, R.Narayanaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

R.Narayanaswamy
Signature of Publisher

Date: 1.3.2004





# தென்கச்சி பதில்கள்!



◆ எம்.எஸ்.சேகர்
நீலிக் கோணாம்பாளையம்

★ ஆண்களின் அணுகுமுறைக்கும் பெண்களின் அணுகுமுறைக்கும் என்ன வித்தியாசம்?

● ஓர் ஓட்டலில் விருந்து நடைபெறுகிறது. கணவன் நாலாவது தடவையாக ஐஸ்கிரீம் வாங்கி வந்து சாப்பிடுகிறான்.




மனைவி சொல்கிறாள்: ''திரும்பத் திரும்ப வாங்கிச் சாப்பிடுகிறீர்களே... வெட்கமாக இல்லை...? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?''

கணவன்: ''என்னை யாரும் தப்பா நினைக்க மாட்டார்கள். ஏன்னா... நான் ஒவ்வொரு தடவையும் உனக்குன்னு சொல்லித்தானே ஐஸ்கிரீம் வாங்கி வர்றேன்!''

◆ பொன்னாபுரம் பி.சிவக்குமார்
பிரபு, திருப்பூர்

★ யாரை எளிதில் நம்பக்கூடாது?

● இன்றைய சிறுவர்களை எளிதில் நம்பமுடியவில்லை!

இதைக் கேளுங்கள்...

அப்பா கேட்கிறார் மகனிடம்:

''டேய்... உன்னோட படிக்கிற பையன் ஒருத்தனை நீ கல்லாலே அடிச்சியாமே?''

''அவன் என்கிட்டே வம்பு வளர்த்தான்... அதனாலே அடிச்சேன்!''

''வம்பு வளர்த்தா என்கிட்டே சொல்ல வேண்டியதுதானே...?''

''உன்னாலே குறிதவறாமே அவனை அடிக்க முடியாதே...?''

◆ எம். சம்பத்,
வேலாயுதம்பாளையம்.

★ வளரும் எழுத்தாளருக்கு உங்களின் அறிவுரை என்ன?

● என்னுடைய அறிவுரை இருக்கட்டும்... பாவேந்தர் பாரதிதாசனின் அறிவுரை என்ன என்பதைக் கவனியுங்கள்.

பாவேந்தரிடம் யாராவது ஒருவர் வந்து, 'கவிதைதான் என் தொழில்' என்று சொன்னால், அவர் சொல்லுகிற வார்த்தைகள்: ''நீ உருப்படமாட்டே!'' என்பதுதான்.

என்ன காரணம் தெரியுமா?


எழுத்தையே தொழிலாகக் கொண்டால் சமயத்தில் வளைந்து கொடுத்து வாழவேண்டியிருக்கும். படைப்பாளி என்பவன் தனக்கென்று ஒரு சொந்தத் தொழில் வைத்துக் கொண்டால்தான் அவன் எவனுக்கும் அஞ்சாமல் தன் கருத்தைச் சொல்ல முடியும். அப்படித்தான் பாவேந்தர் வாழ்ந்தார்.

அவர் சொல்கிற அறிவுரை: ''நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் சிந்தியுங்கள். கற்பனையில் மிதக்காதீர்கள்!''

◆ **புலவர்.ந.ஞானசேகரன்.**
**திருலோக்கி**

★ இன்றைய குழந்தைகள் பற்றி...?

● ஓர் ஆசிரியர் மாணவர்களுக்குக் கணக்கு கற்றுக் கொடுக்கிறார். எதிரே மூன்று மாணவர்கள். ஒரு காகிதத்தை கையில் எடுத்துக் கொண்டு, ''மாணவர்களே! இதோ வைத்திருக்கிறேனே காகிதம், இதை ஐஸ்கிரீம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஆளுக்கு ஒன்று தருகிறேன்....''



என்று சொல்லி அதைக் கிழித்து ஆளுக்கு ஒரு துண்டு தருகிறார். பிறகு திருப்பி வாங்குகிறார்...

''இப்போ எண்ணுகிறேன் பாருங்கள்.... ஒன்று... இரண்டு... அடேய்! உன்னுது எங்கே...?''

''சாப்பிட்டுட்டேன் சார்!''

◆ **நெய்வேலி க.தியாகராசன்**
**கொரநாட்டுக் கருப்பூர்**

★ தாமரை இலை மீது உருளும் தண்ணீர் முத்துக்களைப் பார்க்கும் போது என்ன நினைப்பீர்கள்?

● அதுபோல நம்மால் வாழமுடிந்தால் அது எவ்வளவு நன்றாக இருக்கும்!

◆ **எம்.சண்முகம்**
**கொங்கணாபுரம்**

★ நீதி, நேர்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை பற்றி.... உங்கள் கருத்து...?

● இவையெல்லாம் நமக்கிடையே மட்டுமல்ல.... நாடுக



ளுக்கு இடையேயும் இருக்க வேண்டிய பண்புகள். ஆனால் இன்றைக்கு நிலைமை...?

போர்நிறுத்தம் - என்பது கூட சமாதானம் அல்ல. அது சண்டையும் இல்லாமல் சமாதானமும் இல்லாமல் இருக்கிற ஒரு நிலை!

◆ **எஸ்.விஜய்ராகவன்**
**எண்ணமங்களம்**

★ காதல் ஏன் மனதை அதிகமாக பாதிக்கிறது?



● காதல் மனதை பாதிப்பதில்லை. எடுத்துக் கொண்டு விடுகிறது. இரண்டு மனங்கள் இடம்மாறிப் போவதுதான் உண்மையான காதல்.

ஓ ஹென்றியின் கதை ஒன்று ...

ஒரு கணவன் - மனைவி. மிகவும் ஏழை. மனைவிக்குப் பிறந்த நாள் வருகிறது. அவளுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்று கணவன் நினைக்கிறான். அவருக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்று மனைவி நினைக்கிறாள்.

கணவனிடம் ஒரு பழைய கைக்கடிகாரம் இருக்கிறது. அதற்கு 'ஸ்டிராப்' இல்லை. அதை வாங்கிக் கொடுக்கலாம் என்பது மனைவியின் எண்ணம்.

அவளுக்கு அழகான நீண்ட கூந்தல். அதற்கு ஒரு அழகான 'புரூச்' வாங்கிக் கொடுக்கலாம் என்பது கணவனின் எண்ணம்.

இருவர் கையிலும் காசு இல்லை. அன்பு மட்டும் இருக்கிறது.

மறுநாள் - மனைவி கையில் 'ஸ்டிராப்'போடு நிற்கிறாள்.

கணவன் கையில் 'புரூச்.' எப்படி வாங்கினார்கள்?

மனைவி தன் நீளமான கூந்தலை விற்று 'ஸ்டிராப்' வாங்கியிருந்தாள். கணவன் தன் கடிகாரத்தை விற்று 'புரூச்' வாங்கியிருந்தான். இருவரும் சந்திக்கிறார்கள்.


மனைவி கூந்தலையும் கணவன் கடிகாரத்தையும் இழந்து நிற்கிறார்கள். அவர்கள் கையில் இருக்கும் பரிசுப் பொருளுக்கு இப்போது உபயோகமில்லை. அதனாலென்ன? அங்கே அன்பு நிறைந்திருக்கிறது?

இங்கே இடம் மாறிப் போனது பொருள்களா? இல்லை. இல்லை... மனங்கள்!

◆ **ஆடுதுறை கோ.ராமதாஸன்**

★ கடன் வாங்கி கல்யாணம் செய்வது சரியா?

● கடன் வாங்கியாவது கல்யாணம் செய்துவிடுவது தான் நல்லது.



ஏனென்றால் காலத்தில் நடக்கவேண்டிய காரியமல்லவா அது! அதற்குப் பிறகு அந்தக் கடனைத் திரும்பச் செலுத்திவிடுவது அதைவிட நல்லது!

◆ **இராம. பார்த்திபன்,**
**வயலூர்.**

★ மாமன்னன் துஷ்யந்தன் தன் மனைவியின் காலில் வீழ்ந்து வணங்கியதாகக் கூறுகிறாரே காளிதாசர்... அப்படியானால் மனைவியின் காலில் கணவன் வீழ்ந்து வணங்கலாமா?



● துஷ்யந்தன் சகுந்தலையை மனைவியாக ஏற்றுக் கொண்டான். ஆனாலும் குழந்தை பரதனோடு வந்த அவளை உடனே ஏற்றுக் கொண்டால் பின்னால் பரதனுக்குப் பழிவரும் என்று அஞ்சினான். ஏற்க தாமதித்தால் சாபம்வரும். இக்கட்டான சூழ்நிலை.

இப்போது துஷ்யந்தன் கேள்விகளைக் கேட்கிறான்.

*1. பெண்ணே... நீ யார்?*
*2. உன் கணவன் யார்?*
*3. இந்தப் பையன் யார்?*
*4. ஏன் வந்தாய்?*

சகுந்தலை கூறினாள்:

''மகனே! பரதா! உன் தந்தையை வணங்கு!''

அவன் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் ஒரே வரியில் பதில் சொன்னவள் சகுந்தலை. அதனால்தான் பெண்ணறிவு நுண்ணறிவு என்கிறார்கள்.

இது வாரியார் சொல்லக் கேட்டது.

இப்போது என்னுடைய கேள்வி:

நம்மைவிட நுண்ணறிவுள்ள பெண்களை நாம் வணங்குவதில் என்ன தவறு?

◆ **இளங்கதிரவன். கோவை.**

★ **ஆசையின் மூலவேர் எது?**

● **ஆசையே ஒரு மூலவேர்தான். மனிதர்களின் சாதனைகளுக்கும் அதுதான் காரணம். வேதனைகளுக்கும் அதுதான் காரணம்.**



## அணுசக்தி விஞ்ஞானி கான்!



# திருடுவது இவருக்குப் பொழுதுபோக்கு

மிகப் பிரம்மாண்ட அளவில் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் உருவாக்கக் கூடிய அணுசக்தி ஆயுதங்களை அநேக நாடுகள் தயாரித்து வருகின்றன. இந்த ஆபத்தான செயலுக்கு, தற்காப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை என வசதியாக ஒரு வியாக்யானமும் சொல்லி வருகின்றன. இந்த விபரீதமான ராணுவ தொழில் நுணுக்கத்தை, அநேகமாக எல்லா நாடுகளும் ரகசியமாகப் பாதுகாத்து வந்துள்ளன என்பதும், இந்த 'அபாய ஆயுதத்தை', எந்த ஒரு நாடும் தனது எதிரிநாடுகள் மீது ஏவி எந்தவித நாசத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதும், மனித சமுதாயத்திடையே ஓரளவு நிம்மதி அளித்து வந்தது என்பதும் உண்மைதான்.

ஆனால், தற்போதைய செய்தி மூலம் இந்த நம்பிக்கைகள் தளர்ந்து போயுள்ளன.

அணுசக்தி ஆயுதத் தயாரிப்பு தொழில் நுணுக்க ரகசியம், முதல் முறையாக, திருட்டுத்தனமாக, 'போக்கிரி' (Rogue) நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலால் உலக நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன. இத்தகைய ஒரு திருட்டுச் செயலைச் செய்த அணுசக்தி விஞ்ஞானி, பாகிஸ்தானைச் சேர்ந்த அப்துல் காதர் கான். இந்தக் காரியத்தைச் செய்ய, பாகிஸ்தானின் அதிபர், ராணுவ தளபதி உள்பட அனைவரும் உறுதுணையாக இருந்துள்ளனர் என்ற செய்தியைக் கேட்டு அனைவரும் வியப்பால் விழி பிதுங்கி இருக்கின்றனர். இந்த அப்துல் காதர் கானின் பூர்வாசிரம

ஜனகன்

'மகத்துவத்தை'க் கொஞ்சம் பார்ப்போமா...

இந்தியாவில், மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபாலில் 1936 ஆம் ஆண்டு பிறந்த இவர், பாகிஸ்தான் பிரிவினையினால் முஸ்லீம்கள் பெரிய அளவில் இந்தியாவில் கொடுமைப்படுவதாகக் கூறி எல்லை கடந்து பாகிஸ்தானுக்குக் குடியேறினார். பாகிஸ்தானில் கல்வி கற்றார். இந்தியர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு கல்வி கற்றார். அணுசக்தி ஆயுதம் தயாரிக்கத் தேவைப்படும் மிகமுக்கிய மூலப் பொருளை, யுரேனியத்தை, செறிவூட்ட ஆம்ஸ்டர்டாமில், டச்சு, ஜெர்மனி மற்றும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட அப்துல் காதர் கான், பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் நல்லாசியுடன் அந்த ஆய்வுக் கூடத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்த ஆய்வுக் கூடத்தின் செயல்முறை விளக்கம் மிகமிக ரகசியமாகப் பாதுகாக்கப்படும் வகையில் மிகுந்த கவனத்துடன் வைக்கப் பட்டிருந்தது.

இந்த ரகசியத்தை பாகிஸ்தானுக்கு 'திருடிச்' செல்ல அப்துல் காதர் கான் எப்படி திட்டம் தீட்டினார் என்று பாருங்கள்.

தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த, டச்சுப் பெண்மணியின் மீது காதல் வலை வீசினார் காதர் கான். இவளைத் திருமணம் செய்து கொண்டு, ஹாலந்து நாட்டுப் பிரஜையாகவே காலம் பூராவும் வாழப் போவதாக ஒரு சத்தியப்பிரமாணம் செய்தார். (ஆம்ஸ்டர்டாம் ஹாலந்து நாட்டில்தான் உள்ளது) இதனை நம்பிய அந்த ஏமாளி ஆய்வுக் கூடம், ரகசிய ஆய்வுகளைக் கையாள காதர்கானுக்கு சந்தர்ப்பமளித்தது.

ஆய்வுக் கூடப் பாதுகாப்பு கொஞ்சம் 'அசால்டாகி' இருந்த போது ஆய்வுப் பதிவேடுகளைத் திருடிக் கொண்டு பாகிஸ்தான் வந்து சேர்ந்தார் கான்!

பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் நல்லாசியுடன் கஹீதா ரிசர்ச் சென்டர் என்ற அமைப்பை இஸ்லாமாபாத்துக்கு மிக அருகில் நிறுவி, திருடிக் கொண்டு வந்த ஞானத்தை மூலதனமாகக் கொண்டு, ஒரு அணுசக்தி ஆயுதத்தை 1998ல் பரிசோதனை செய்து 'ஏற்றுமதி' செய்திருக்கிறார்.

ஈரான் இந்த வியாபாரத்திற்காக பத்து மில்லியன் டாலர் வழங்கியுள்ளதாக ஒரு தகவல். இது ஆட்சியாளருக்கு என்று தெரிகிறது. அப்துல் காதர் கானுக்கு பிரம்மாண்டமான மாளிகையும், காஸ்பியன் கடல் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையை பரிசாகவும் வழங்கி தனது நன்றியைத் தெரிவித்துள்ளதாக மற்றொரு தகவல் மூலம் தெரிய வருகிறது.



கடந்த ஆண்டு, ஈரானில் சர்வதேச அணுசக்தி ஏஜன்சி ஒரு மாநாடு நடத்தியது. இதனைக் கண்காணித்த அமெரிக்காவின் உளவுப் பிரிவு, பாகிஸ்தானின் இந்தக் களவுக் கதையை, வியாபார அக்கிரமத்தை புலனாய்ந்து கண்டு பிடித்துள்ளது. இதுவரை சரி.

பாகிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த முகமது ஸியா ஹுல் ஹக், சுல்பிகர் அலி புட்டோ, மிர்சா அஸ்லாம் பெக், பெனாசிக் புட்டோ, நவாஸ் ஷெரீப், பெர்வீஸ் முஷாரப் ஆகிய அனைவரும், அப்துல் காதர் கானின் இந்தக் கீழ்த்தரமான செயலுக்கு ஆதரவு காட்டி, ஊக்கப்படுத்தி, சுவிஸ் வங்கியில் தங்கள் கணக்கில் பெருந்தொகையை வரவு வைத்து கொண்டுவிட்டனர் என்று மற்றுமொரு சுவாரஸ்யமான தகவல் வேறு உள்ளது.

அப்துல் காதர் கான், அணுசக்தி ஆயுதத் தயாரிப்பு நுணுக்கத்தை மேலிட ஆசியுடன் விற்பனை செய்துள்ளதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு, பாகிஸ்தானிய மக்களிடம் மன்னிப்பும் கேட்டிருக்கிறார். மன்னிப்பையும் பெருந்தன்மையுடன் வழங்கியிருக்கிறார் பர்வீஸ் முஷாரப். இது ஒரு வகையில் தமாஷ்தானே!

மூன்றாவதாக, ஆப்பசைத்த



குரங்கின் நிலையில் உள்ள அமெரிக்காவின் பரிதாப அசட்டுத்தனமும் வெளிச்சத்திற்கு வந்து விட்டது.

நியூயார்க் நகரில் இரட்டை கோபுரம் தாக்கப்படும் வரை, பயங்கரவாதத்தின் பாதுகாவலாக இருந்த அமெரிக்கா, ரஷ்யாவை ஆப்கானிஸ்தானிலிருந்து விரட்ட பாகிஸ்தானுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்த அமெரிக்கா, இந்தத் திருட்டுத் தகவல் வெளிச்சத்துக்கு வந்தவுடன் விழித்துக் கொண்டு விட்டது. தன்னிடம் எல்லா உதவிகளையும் பெற்று, அல் கொய்தா தீவிரவாத இயக்கத்

**கலைமகள்** மார்ச் - 2004 இதழில்...

★ ஆன்மிகச் சிறப்பிதழ்

★ கும்பகோணம் மகாமகம் சிறப்பு வெளியீடு
- கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்

★ ஸ்ரீ பரத்வாஜ் ஸ்வாமிகளின் சிறப்பு தரிசனம்

★ கோர்ட் வழக்குகளிலிருந்து விடுபட செல்ல வேண்டிய ஆலயம்

★ நேபாளம் பசுபதிநாதர் ஆலயம்

★ கதைகள் கட்டுரைகள் ஏராளம் ★

**தனி இதழ் ரூ..10/- ✪ ஆண்டுச் சந்தா 120/-**
**கலைமகள் அ.பெ.எண். 604, சென்னை - 4**

தையும், ஒசாமா பின் லாடனின் அடாவடி அதிரடி பயங்கரவாதத்தையும் இதுநாள்வரை ஊக்குவித்து வந்துள்ள விபரத்தையும் கப்பென்று புரிந்து கொண்டு விட்டது.

இவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகத்திற்கு மன்னிப்பா? துரோகிக்கு இவ்வளவு ஆதரவா?

அமெரிக்கா யோசிக்கத் துவங்கிவிட்டது.

இந்திய மக்கள் மீது தோன்றிய வெறுப்பும் துவேஷமும், அப்துல் காதர் கான் போன்ற அரசியல் வாதியை எங்குப் போய் நிறுத்தியிருக்கிறது என நாம் யோசிப்போம்.

நம்பிக்கைத் துரோகம் மன்னிக்கக் கூடிய ஒன்றுதானா? ●

லாஸ் ஏஞ்சலஸ் டைம்ஸ் என்ற நாளேட்டில், கதி காவ்னன் என்பவர் எழுதிய கட்டுரையை ஆதாரமாக வைத்து எழுதப் பட்டது



நூலகம்

# 'டம்டம்' முதல் 'டம்டமா' வரை...

எனக்கு திருமணமான புதிதில் என் கணவர் வேலை நிமித்தம் அடிக்கடி 'கல்கத்தா' சென்று வந்ததால் எனக்கும் அந்த நகரை வலம் வர வேண்டும் என 'சின்ன ஆசையாக' துளிர் விட்டது; கடந்த 24 வருடங்களில் அதுவே பேராசையாக வளர்ந்தும், நிராசையானது. 'கோல்கத்தா' என்று பெயர் மாற்றமும் கண்டது!

இடையில் என் கணவர் என்னை சிங்கப்பூர் கூட அழைத்துப் போனார்! எனினும் கோல்கத்தா பயணம் மட்டும் கனவாகவே இருந்தது. எனவே சென்ற டிசம்பர் (02) விடுமுறையில் நானும் என் மகள் மற்றும் மகன் கூட்டமைப்பில் LTC-க்கு 'கோல்கத்தா' தான் செல்வது என தீர்மானமாக இருந்தோம். என் கணவர் இக்குளிர் காலம் எங்கள் பயணத்திற்கு ஏதுவாக இராது என்று தடுத்தும் பயனில்லை.

நால்வரும் ஒரு வாரம் வட்டமாக அமர்ந்து, விமான பயணதடங்களை நன்கு ஆராய்ந்து வாறாக சென்னையிலிருந்து கோல்கத்தா, லக்னோ, காசி சென்று டெல்லி வழியாகத் திரும்புவது என்று முடிவு செய்தோம். காசியிலிருந்து அலகாபாத், கயா சென்று சமய சடங்குகளை நிறைவேற்றவும் என் கணவர் ஏற்பாடு செய்தார். காசியில் புரோகிதர்களை தொடர்பு கொள்கையில் அவர்கள் பழக்கமில்லாத அதிகக் குளிரில் எங்களால் காரியங்கள் செய்ய இயலாது என்றனர். ஆனால் நாங்கள் எதிர்கொள்ளப் போகும் நிகழ்வுகளை கனவிலும் நினைக்கவில்லை.

டிச.21 காலை 8 மணிக்கு பிரயாண. ஏற்பாடுகளை செய்து கொண்டு, மீனம்பாக்கம் சென்றோம். அங்கு விமானநிலையமே பனியில் காணவில்லை! இது ஒரு பனிப்பாறை (ஐஸ்பர்க்)யின் முனை என்பதை நாங்கள் அப்போது உணரவில்லை. அன்று அனைத்து விமானங்களும் தாமதமாகக் கிளம்பியதோடு, எங்கள் விமானத்தில் இயந்திர கோளாறு

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



வேறு - மழைக்காக ஏங்கியிருந்த சென்னை மக்களை ஏமாற்றி விட்டு ஒரிசா நோக்கி நகரும் புயலைப்போல, எங்கள் முதல் பயணமே தாமதமாகி, எங்களை ஏங்க வைத்தது. இந்தியன் ஏர்லைன்ஸ் செலவில் மதிய உணவு! ஒருவாறாக 10 மணி நேர தாமதத்திற்குப் பின் மாற்று விமானத்தில் மாலை 6 மணிக்கு கோல்கத்தாவிற்கு பறந்தோம்!!

'டம்டம்' விமான நிலையத்தில் இறங்கியதும் முதல் இன்ப அதிர்ச்சி! - 'குளிர் அதிகமில்லை'; சந்தோஷத்துடன் எங்கள் கம்பெனி விருந்தினர் மாளிகை உள்ள 'பார்க் மேன்சன்' வந்து இரவு ஓய்வெடுத்தோம். காலையில் எழுந்தவுடன் குழந்தைகள் இருவருக்கும் தொண்டைப் புண், ஜுரம்; மருந்து வகைகளை மொத்தமாக (Whole Sale) சமாளித்தோம்.

பார்க் மேன்சனில் ஆங்கிலேயர் வடிவமைத்த லிப்ட் கம்பீரத்துடன் இயங்காமல் காட்சி அளித்தது! விருந்தினர் அறைகள் குளிர்சாதன வசதியுடன் சௌகரியமாக அமைக்கப்பட்டிருந்தன. வெளியே வந்து பார்த்தால் அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது! அனைத்து வீடுகளும் ஆங்கிலேயர் கட்டிய அமைப்பில் புனரமைப்புகள் இல்லாமல் பழமையாக இருந்தன. இருநாட்கள் சென்ற பின்தான் எங்களுக்கு கோல்கத்தா முழுவதுமே இதே நிலைதான் என்று புரிந்தது! சில இடங்கள் மட்டும் புதுப் பொலிவுடன் காட்சி அளித்தன.

ஆறு வித்தியாச படங்கள் போல பழைய டிராம், பஸ் வண்டிகள் ஒருபுறம், கண்ணைப் பறிக்கும் மெட்ரோ ரயில் மறுபுறம், குளிர்சாதன வசதியுடன் பெரிய ஷாப்பிங் காம்பிளக்ஸ், அதிரடி விலையில் அனைத்துப் பொருட்களும் கிடைக்கும் பிளாட்பார கடைகள்



என நகரமே எல்லாவிதங்களில் எதிர்மறையுடன் இருந்தது.


தக்ஷிணேஸ்வர் காளி கோவிலும் சிவன் கோவில்களும் பகவான் ராமகிருஷ்ணரின் நினைவுகளுடன் நெஞ்சை நெகிழ வைத்தன. அருகில் ஓடும் கங்கை பிரவாகமும் பாலமும் பிரமிக்க வைத்தன. ஆங்கிலேயரால் ரயில் பாதையும் கார்கள் செல்ல தனி வழியும் அமைக்கப்பட்டு ஒருங்கே அமைந்திருப்பது இதன் சிறப்பாகும். பேலூர் மடத்தை (பார்வையாளர் நேரம் முடிந்து விட்டதால்) வெளியிலிருந்து பார்வையிட்டோம். காளிகாட் கோவிலில் கூட்டத்தில் சிக்கியதோடு பூசாரியின் பிடியிலிருந்து தப்பி வெளியே வருவதற்குள் திணறி விட்டோம். தசரா சமயம் எப்படி இருக்கும்?

லார்ட் டல்ஹவுசியின் முயற்சியில் ஓங்கி நிற்கும் விக்டோரியா நினைவகம் ஓர் அரிய கலைக்கூடம்; பழம் பெரும் ஓவியங்கள் கலைப் பொருட்களும் சுதந்திரப் போராட்ட வரலாற்று காட்சிகளும் கண்ணுக்கு விருந்தளிக்கும். தலைமைச் செயலகம் அமைந்துள்ள 'ரைட்டர்ஸ் பில்டிங்', 'கவர்னர் மாளிகை', 'ஈடன் கார்டன்', கிரிக்கெட் மைதானம், எஸ்பிளனேட் பகுதியில் உள்ள பழைய 'மெட்ரோ' தியேட்டர், பல்வேறு அருங்காட்சியகங்கள் என பார்த்து ரசிக்க நிறைய இடங்கள் உள்ளன. காலை பனியிலும் 'மைதானி'ல் சுமார் 30 கிரிக்கெட் மேட்சுகள் நடந்து கொண்டிருப்பது கண்கொள்ளாக் காட்சி! இங்கிருந்துதான் கங்கூலியும் உருவானார் போலும்!

கம்பீரமாகக் காட்சியளிக்கும் பழைய ஹவுரா பாலம் அந்த நாளைய கட்டிடகலைக்கு எடுத்துக்காட்டு! புதிதாக முறுக்குக் கம்பிகளால் உருவான ரபீந்திர சேது பாலம் எழிலோடு காட்சி அளிக்கிறது. சூரியாவும் விஜய்யும் டூயட் பாடுவது இதன் பின்னணியில் தான்!

கோல்கத்தாவில் போக்குவரத்து நெரிசல்கள் சர்வ சாதாரணம்! ஹவுரா பாலத்தில் சமயத்தில் 3 மணி நேர நெரிசலில் கூட மாட்டிக் கொள்ள நேரிடும் என என் கணவர் எச்சரித்தார். மூன்று நாட்கள் போனதே தெரியவில்லை. கிருஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி தெருக்களெல்லாம் வண்ண விளக்குகள் அலங்காரங்கள்! இரவில் தெருவெங்கும் பாட்டும் நடனமும் கேளிக்கைகள்தான்.

டிச.25 காலை லக்னோ பயணம்; தனியார் விமானம் - அதிலும் கிறிஸ்துமஸ் இனிப்பு வகைகளுடன் ஏக உபசரிப்பு! சற்று தாமதமானாலும் பனி மூட்டத்தால் பாட்னாவில் இறங்காது மதியம் 2 மணிக்கு லக்னோவை அடைந்தோம். அந்நேரமும் காணப்பட்ட அடர்ந்த பனி மூட்டத்தை வியந்தவாறே ஓய்வு விடுதியை அடைந்தோம். குழந்தைகளின் உடல்நலக் குறை



வால் காசி பயணத்தை ரத்து செய்துவிட்டு முன்னதாகவே டெல்லி செல்ல முடிவு செய்தோம். ஏர்லைன்ஸ் ஆபிஸுக்குச் சென்றால், எங்கள் பயணத்தை மாற்றி அமைக்க 2 மணி நேரம் ஆனது! (இதில் காசியே சென்றிருக்கலாம்!)

மாலை 6 மணிக்கு நடுங்கும் குளிர்; வெளியில் தலைகாட்ட முடியவில்லை; ஆனாலும் விடாப்பிடியாக லக்னோ சிக்கன் வேலைப்பாடு செய்த புடவை வாங்கிய பிறகே தங்குமிடம் திரும்பினோம். மறுநாள் காலை லக்னோவின் புகழ்பெற்ற 'இமாம்பாரா' சென்றோம். ஒரு ராஜா பஞ்சத்தில் வாடும் தன் குடிமக்களுக்கு புகலிடமாக இதைக் கட்டி உணவளித்தாராம். இங்கும் ஒரு தர்கா அமைந்துள்ளது. 80' x 30' அமைப்புள்ள இக்கட்டிடம் நடுவில் தூண்கள் இன்றி அக்காலத்தில் உருவாக்கியிருப்பது இதன் சிறப்பு. இதன் மேற்புறத்தில் மூன்றடுக்குகளாக சுழல் படிக்கட்டுகளுடன் உள்ளது 'பூல்புலயா'. விசேஷ ஒலி வடிவமைப்பு இதன் சிறப்பு அம்சமாகும். அருகில் 30 அடி ஆழத்தில் அழகாக வடிவமைக்கப்பட்ட பொதுக்குளம் மாடங்களுடன் காட்சி தருகிறது.

மதியம் 3 மணிக்கு லக்னோ விமான நிலையத்தில் ஆஜர். அதிகாரிகளின் அனுமதி பெற்று மகளையும் மகனையும் Casualty -ல் தங்க வைத்தோம். இருவரும் ஜெமினி இரட்டையர்கள் போல தொடர்ந்து இருமி அனைவரது கவனத்தையும் ஈர்த்தனர்! 4 மணி நேரம் காத்திருந்தபின் காசியில் பனிமூட்டம் காரணமாக பயணம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.



அதிர்ச்சியடைந்த நாங்கள் அதிர்ஷ்டம் அடித்ததை பிறகுதான் உணர்ந்தோம்! அன்று இரவு அனைத்து பயணிகளும் 'தாஜ்' ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டார்கள். கிறிஸ்துமஸ் அலங்காரங்களுடன் எங்களை 'தாஜ்' வரவேற்று 'தங்க' அறைகள் தரப்பட்டு 5 Star அந்தஸ்தில் 'புஃபே'யில் 3 Course உணவு பறிமாறப்பட்டது. எங்கள் பயணத் திட்டத்தில் மறக்க முடியாத அனுபவம் இது!!

அடுத்த நாள் காலை மறு படையெடுப்பு; ஒரு வழியாக மதியம் 3 மணிக்கு டெல்லி வந்தோம். என் தங்கை குடும்பத்தார் வசிக்கும் ஹரி நகர் (பேர்பெற்ற 'திகார் சிறை'க்கு அருகில் உள்ளது) சென்று ஓய்வெடுத்தோம். அவர்களுக்கு எங்கள் பயணம் தாமதமானது ஏமாற்றம்.

நாங்கள் ஏற்கனவே 2, 3 முறை டெல்லி சென்றிருந்ததால் அங்குப் பார்க்க வேண்டிய இடங்களை பார்த்து விட்டோம். எனவே அவர்கள் நாங்கள் பார்த்திராத 'டம்டமா' என்ற ஹரியானா எல்லையில் அமைந்துள்ள ஏரிக்கு அழைத்துச் சென்றனர். மலைகளால் சூழ்ந்து இயற்கை எழில் மிகுந்த 'டம்டமா' ஏரி மிகவும் ரம்யமான காட்சி! படகில் பயணம் செய்தும் கரையில் ஒட்டக சவாரி செய்தும் பொழுதை இனிமையாகக் கழித்தோம்.

டிச.29 காலை இறுதியாக எங்கள் மூட்டை முடிச்சுகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு சென்னை திரும்ப ஆயத்தமானோம். பிரியாவிடை பெற்று 'பாலம்' விமான நிலையம் வந்தோம். எல்லா இடங்களிலும் தவம் கிடந்த எங்களுக்கு அன்று நாங்கள் Checkin செய்வதற்குள் எங்கள் விமானம் புறப்பட தயாராகி விட்டதாகவும் பெங்களூர் வழியாகச் செல்வதாகவும் அறிவிப்பு வந்தது. அவ்வளவுதான்! பதவி பறிபோன அமைச்சர்கள் பதறி ஓடுவதுபோல அதிகாரிகளிடம் ஓடினோம். எங்களுடன் சேர்த்து 10 பயணிகள் நிலை திரிசங்கு சொர்க்கமானது! இறுதியில் நாங்கள் சிறப்பு கட்டண வகுப்பில் அனுமதிக்கப்பட்டோம்!! காண்பது கனவா நனவா என்று புரியாமல் சொகுசு வகுப்பில் பயணம் செய்து பங்களூர் வழியாக சென்னை வந்தடைந்தோம்.

10°C குளிரிலிருந்து 30°C வெய்யிலுக்கு திடீர் மாற்றம்! அணிந்திருந்த கம்பளி ஆடைகளை மூட்டை கட்டிவிட்டு இயல்பு நிலைக்குத் திரும்பினோம். மறக்க முடியாத இந்த விடுமுறை பயணத்தில் நாங்கள் கற்ற பாடம் 'எந்த ஒரு தடங்கலும் நல்ல மாறுதலுக்கு ஒரு முன்னோடி' என்பதாகும். ★

## பக்க எண் பரம்பரை

ஆரம்ப காலங்களில் புத்தகங்களின் பக்க எண்களைக் குறிப்பிடாமல்தான் அச்சடித்தனர். 1470-ல் வெர்னர் ரோல்விங் என்பவர்தாம் முதன்முதலாகப் பக்க எண்களைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டு வந்தார்.

# இயற்கையின் அழகு



# சித்திரத்தில்!

ஓவியர் பி.சந்தானத்தின் பெரும்பான்மையான ஓவியங்கள் இயற்கையின் அழகைச் சொல்கின்றன! தெளிந்த நீரோடைகள், பனித்திரை படர்ந்த சமவெளிகள், மேகங்கள் கவிந்திருக்கும் மலைமுகடுகள் முதலியன எழுது பொருள்களாகின்றன!

நீண்ட சிகை, தாடி, மீசை என்றிருக்கும் சந்தானத்திடம் - ''நீங்கள் ஆழ்நிலை தியானம் செய்வது உண்டா?'' - என்றேன்.

''ஓவியம் தீட்டுவது என்பதே ஆழ்நிலை தியானம்தானே? சித்திரம் தீட்ட ஓவியச் சீலையின் முன்னால் உட்கார்ந்துவிட்டால், மூன்று மணிநேரம், நான்கு மணி நேரம் கூட வெளி உலகை மறந்து பணியில் ஈடுபட்டிருப்பேன்.'' - சொல்லிச் சிரித்தார் சந்தானம்!

கணக்கு டியூஷன் எடுத்த காமாட்சி டீச்சரின் மகள் மாலினிதான் இவர் சென்னை ஓவியக் கல்லூரியில் சேரக் காரணமாம். தங்க இடம் கொடுத்துக் கல்லூரியில் சேர்த்துவிட்டவர் 'ராஸ்வி' - என்ற நண்பர்.

பூக்கள் மலர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் மலர்க் கிண்ணங்களைத் தீட்டுவதில் இவருக்கு ஒரு



அலாதியான மகிழ்ச்சி இருக்கிறது!

கோவில் குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் சந்தானம். மூலவரை விதம்விதமாக அலங்கரித்துப் பார்த்தவர்கள் இவரது பரம்பரையைச் சேர்ந்த அர்ச்சகர்கள். அலங்கரிக்கப்பட்ட ஸ்வாமி சிற்பங்களைப் பார்த்துப் பார்த்துத்தான் சந்தானத்திற்கு ஓவியனாக வேண்டும் என்ற ஆசையே உதித்ததாம்!

அண்மையில் சென்னை 'வின்யாஸா' கலை அரங்கில் இவர் நடத்திய சித்திரக் கண்காட்சியில் கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொள்ளும் விதத்தில் ஒரு பஞ்சமுக விநாயகரைத் தீட்டி வைத்திருந்தார்.

ஓவியக் கல்லூரி மாணவனாக இருந்தபோது முகத்தோற்றங்கள் எழுதுதல் (Portrait) முழு உருவப் படம் வரைதல் (Full Figure) அசையாப் பொருள் சித்திரம் அனைத்திலுமே தன் முழு கவனத்தையும் செலுத்தி நன்றாகப் படமெழுதினார் சந்தானம். இவர் ஓவியக் கல்லூரியில் சேர்ந்த ஆண்டு 1994.

ஓவியக் கல்லூரி ஆசிரியர்கள் அல்போன்சோ, அந்தோணிதாஸ் - இவர்களது ஓவியங்கள் இவருக்குப் பெரும் உந்து சக்தியாக விளங்கின! ரவிவர்மாவின் படங்களைப் பார்த்துவிட்டு அதேபோல் சித்திரமெழுத சந்தானம் துடித்தார்.

இவர் வரைந்துள்ள மானுடர்கள் தங்கள் குணாதிசயங்களோடு வெளிப்படுகிறார்கள். வயதான



ஒரு மூதாட்டியைப் பல கோணங்களில் வரைந்திருக்கும் இவர் வயதின், மூப்பு தெரிவதற்காகப் படமெழுதிய தாளையே ஆங்காங்கு சிதைத்துக் கிழித்து வைத்திருக்கிறார்! இது ஒரு புதுமையான உத்தியாம்!

முத்துமாணிக்கம் என்ற ட்ராயிங் மாஸ்டர்தான் இவரது பள்ளிப் பருவத்தில் இவரை ஊக்குவித்தார். அவரது தூண்டுதலால் 'சுபாஷ் சந்திரபோஸ்' உருவப் படம் ஒன்றை எழுதினார். பொள்ளாச்சி கல்வி மாவட்ட அளவில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டிக்கு அந்தப் படத்தை அனுப்பி வைத்தார். அந்தத் திருஉருவம் முதல் பரிசை வென்றது! அன்றிலிருந்து தேசத் தலைவர்களின் படங்களைத் தீட்டுவதில் சந்தானம் கவனம் செலுத்தி வருகிறார்.

இவர் இயற்கை அழகில் தோயக் காரணம், இளம் பருவத்



துப் பதிவுகளே! கோவை, உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த இவர் - மரங்கள், செடி கொடிகள், மலைகள், நதிகள், ஓடைகள், ஓடு வேயப்பட்ட வீடுகள் இவற்றின் அழகில் மனதைப் பறிகொடுத்தவர். அந்த பால பருவத்துப் பதிவுகள் இன்று படங்களாக விரிந்து, நம்மைப் பரவசப்படுத்தும் காட்சிப் பொருளாகின்றன!

தந்தை ஆர். பாலகிருஷ்ணனும், தாயார் மனோன்மணியும் இவரது கலை வளர்ச்சிக்கு ஆரம்ப முதலே துணையாக இருந்து வருகிறார்கள். இவர் வின்யாஸாவில் நடத்திய ஓவியக் கண்காட்சிக்கு இவரது தாயார் ஒரு பெரிய வாழ்த்துக் கவிதை எழுதி முகப்பில் வைத்திருந்தார்! அது ஒரு அன்புப் பெருக்கு! ஓவியரது துணைவியாரான பரதக் கலைஞர் ஸ்ரீதேவியும் இவருக்கு உந்து சக்தியாகச் செயல்படுகிறார்!

எஸ். குருஸ்வாமி

# குற்றத்திற்கு தண்டனையாக யோகா

அமெரிக்காவில் டோம்பால் என்ற ஊரைச் சேர்ந்த 53 வயது லீ கிராஸ் ஒரு கார் வியாபாரி. இவருடைய மனைவிக்கு குடிப்பழக்கம் இருந்து வந்தது. இதிலிருந்து அவரை மீட்க லீ கிராஸ் பலமுறை முயன்றும் தோல்வியே அடைந்தார். அதனால் வெறுப்புற்ற லீ கிராஸ் கோபத்தில் மனைவியை அடித்துவிட்டார். இதையடுத்து அவருடைய மனைவி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த மாவட்ட குற்றவியல் நீதிமன்ற நீதிபதி லாரிஸ் டாண்ட் ''லீ கிராஸ் ஒரு வருடம் யோகாசனப் பயிற்சி பெற வேண்டும்'' என்று உத்தரவிட்டார். ''யோகா கோபத்தை அடக்கும். சாந்தியைக் கொடுக்கும்'' என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஹூஸ்டன் நகரில், டார்லா மாகீ என்ற யோகா ஆசிரியரிடம் கிராஸ் யோகா கற்று வருகிறார். பாரதத்தின் பெருமைமிக்க யோகாகலை சமீபகாலமாக அமெரிக்கா, ஈராக் என பல உலக நாடுகளிலும் பரவி வருகிறது.

– www.chron.com



# ஹரப்பா குடியிருப்புகள்

ஹரியானா ஃபதேஹாபாத் மாவட்டம், பிர்தானா கிராமத்தில் 5,000 ஆண்டு பழமையான சிந்து சமவெளி நாகரீக குடியிருப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறையினர் கடந்த டிசம்பர் மாதம் தொடங்கிய அகழ்வாராய்ச்சியில் இது கண்டுபிடிக்கப் பட்டது.

ஒரு லாரி நிறைய மண்பாண்ட வகைகள், விலை உயர்ந்த ரத்தினக் கற்களும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன.

''தோண்டப்பட்ட பகுதியில் முக்கியமானதாகக் கருதப்படும்

# ஹரியானாவில் — கண்டுபிடிப்பு

தொல்லியல் துறையினர் குனால், பானாவலி கிராமங்களிலும் இதைப் போன்ற குடியிருப்புகளைக் கண்டுபிடித்துள்ளனர். பிர்தானா கிராமக் குடியிருப்புகளில், ஹரப்பா நாகரீகத்திற்கே உரித்தான செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்கள், மண்பானைகள், கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

''மத்திய அரசின் சரஸ்வதி நதி ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி செய்தபோது, இந்தக் குடியிருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது சரஸ்வதி நதியின் கரையோரத்தில் இருந்த குடியிருப்பு'' என்கிறார் அகழ்வாராய்ச்சி மேற்பார்வையாளர் எல்.எஸ்.ராவ். காலப்போக்கில் சரஸ்வதி நதியின் கரையோரம் விவசாய நிலமாக மாற்றப்பட்டு விட்டது என்கிறார் இவர்.



ஒரு சின்னம், 2.4 மீட்டர் அகலம் உள்ள அரண் சுவர், குடியிருப்பைச் சுற்றிலும் இருந்தது. இந்த அரணுக்கு வெளிப்புறம் புது மண்ணாகவும், உட்புறமெங்கும் கட்டடங்கள் இருந்ததற்கான சுவடுகளும் தென்பட்டன'' என்கிறார் ஒரு ஆராய்ச்சியாளர்.

இந்தக் கண்டுபிடிப்பால் உலக நாகரீகத்திற்கு பாரதமே முதன்மையாக இருந்தது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

த - டிரிப்யூன்

# ஆன்மா மீது மழை பொழிகிறது!

எஸ். குரு

## (THE RAIN IS FALLING ON OUR SOULS)

ஸ்லொவோகியா சினிமாக்கதை [2002]



அந்தச் சிறைக்கூட அறையில் இருந்த கைதிகள் உக்கிரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். ஏற்கனவே பல குற்றங்களைச் செய்துவிட்டு, சிறைக்குள் அடைப்பட்டவர்கள் அவர்கள். எந்த வெறிக்குணம் அவர்களைக் குற்றங்கள் செய்ய வைத்ததோ, அந்த மூர்க்கம் இன்னும் தணிந்து விடவில்லை. குற்றங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை அவர்களைத் திருந்திவிட்டதாகத் தெரியவில்லை. மாறாக வெறிக்குணம் அதிகரித்திருந்தது. வெளி உலகின் இருளில் தவித்துக் கொண்டிருக்கும் அவர்கள், தங்கள் மனப் புழுக்கங்களுக்கு ஒரு வடிகாலாக அந்தச் சண்டையில் ஒருவித மூர்க்கத்துடன் ஈடுபட்டிருந்தார்கள்.

'ஜோ' - ஒரு கத்தியை எடுத்தான். மணிக்கட்டுப் பகுதியில் கத்தியால் ஆழமாகக் கீறிக் கொண்டான். ரத்தம் குபுகுபுவென்று பெருக்கெடுத்தது! ரத்தம் அதிக அளவில் சேதமாகும் என்பது அவனுக்குத் தெரியும். உயிரே போய்விடும் என்பதையும் அவன் அறிவான். இருந்தாலும், தற்கொலைக்குச் சமமான இந்தக் காரியத்தை அவன் துணிந்து செய்துவிட்டான்.

சிறைக் காவலர்கள் அந்த செல்லில் இருந்து கேட்ட காதைத் துளைக்கும் ஓசைகளால் கலவரப்பட்டு, அங்கு ஓடோடி வந்தார்கள். கதவு திறக்கப்பட்டது. சண்டையில் ஈடுபட்டிருந்த கைதிகளுக்கு அடியும் உதையும் கிடைத்தன. சீக்கிரமே ஒழுங்கு நிலைநிறுத்தப்பட்டது!

ஏற்கெனவே ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதால் காயம்பட்டிருந்த கைதிகள், போலீஸிடமும் உதை வாங்கியதால் மேலும் அவஸ்தைக்கு ஆளானார்கள். ஆனால் அவர்கள் வாங்கிக் கொண்ட அடியும் உதையும் அவர்கள் வெறிக்கு வடிகாலாயின. அந்த அடியும் உதையும் உள்காயங்களுக்கு மருந்து பூசிவிட்ட மாதிரி இருந்தது! என்னவென்றே சொல்லத் தெரியாத மனசின் பேயாட்டம், கொஞ்சம் அடங்கின மாதிரி இருந்தது! சோர்வுடன் வலியால் முனகிக் கொண்டே அவர்கள் மூலைக்கொருவராக முடங்கிப் போனார்கள்.



இப்போதுதான் 'ஜோ'வுக்கு நேர்ந்தது அவர்கள் மண்டையில் உறைத்தது. பாவிப்பயல் தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டானே என்ற இரக்கம் ஏற்பட்டது.

போலீஸ் அதிகாரிகள் ஆம்புலன்ஸை வரவழைத்தார்கள். தன்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறார்கள் என்பதை உணர்ந்ததும் வலியிலும் அவனுக்கு மகிழ்ச்சி கூடியது! 'ஜோ' வண்டியில் ஏற்றப்பட்டான். அவன் கண்களை மூடிக்கொண்டு, இனி என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கத் தொடங்கினான். நல்ல கவனிப்பும் உணவும் கிடைக்கும். நல்ல படுக்கைவசதி இருக்கும்.

வண்டி, சாலையில் புயல் வேகத்தில் சென்று மருத்துவமனையை அடைந்தது. அவனை அறுவைச் சிகிச்சை அறைக்கு எடுத்துச் சென்றார்கள். டாக்டர்கள் விரைவாகச் செயல்பட்டு, அறுபட்டிருந்த மணிக்கட்டு தசைக்குத் தையல் போட்டார்கள். 'ஜோ' அபாய கட்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். இனிமேல் பயம் இல்லை. ஒரு வெறியில் அவன்

இயக்குனர் : வால்டோ பால்கோ

செய்துவிட்ட முட்டாள்தனம் இனி அவன் உயிரைக் குடித்துவிடாது!

ஜோவுக்கு விழிப்பு வந்தது. மருத்துவமனையில் ஒரு அறையில் கட்டிலில் படுத்திருப்பதை உணர அவனுக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டது! மணிக்கட்டுப் பகுதியில் பேண்டேஜ் சுற்றப்பட்டிருந்தது. 'விண் விண்' என்ற வலி. எந்த வெறியால், அவன் தன் கையை அறுத்துக் கொண்டானோ, அந்த வெறி இன்னும் அவனுக்குள்ளே கனன்று எரிந்து கொண்டிருந்தது. அவன் மண்டை இன்னும் மூர்க்கத்தனத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. இந்த மருத்துவமனை அறையை, அவன் இன்னொரு சிறையாக நினைத்தான்.

இப்போது அவனுக்கு வேண்டியது விடுதலை. 'சீக்கிரமே தடைகளை உடைத்துக் கொண்டு, வெகு தூரம் கடந்து சென்று, சுதந்திரக் காற்றை சுவாசித்துப் பார்க்க வேண்டும்! கொஞ்ச காலமாவது தன்னிச்சையாக இருக்க வேண்டும். தன்னைக் குற்றவாளி ஆக்கிய கூட்டத்தைவிட்டு, தன்னைச் சிறையில் அடைத்து வேடிக்கை பார்க்கும் கும்பலை விட்டு, வெகு தூரம் சென்றுவிட வேண்டும். இந்த மருத்துவமனையில் இருந்து தப்பித்து ஓட வேண்டும்.'

போலீஸின் பலம் அவனுக்குத் தெரியும். 'என்னதான் கண் காணாத இடத்துக்குத் தப்பி ஓடினாலும், போலீஸ் நாய், மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிடும். வந்தால் வரட்டும். எதற்கும் ஒரு கை பார்க்க வேண்டும். துணிந்தவனுக்குத்தான் வாழ்க்கை. இனியும் செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்க முடியாது. மணிக்கட்டை அறுத்துக் கொண்டதால்தான் சிறையை விட்டு வெளியே வர முடிந்தது. இல்லை என்றால் அந்த நரகத்தில் இன்னும் கிடந்து நாறிக்கொண்டு இருக்க வேண்டும். நரகத்தை விட்டு வெளியே வந்தாயிற்று. இனி சொர்க்கத்திற்கு வழி தேட வேண்டும். சொர்க்க வாசம் அதிக காலம் நீடிக்காமல் போகலாம். ஆனால் கொஞ்ச காலமாவது, அனுபவித்துவிட வேண்டும். தப்பிக்க வேண்டும்.





மருத்துவமனையில் இன்னும் கொஞ்ச காலம் இருந்தால்தான் உடம்பு தேறும். மணிக்கட்டு காயம் ஆறும் - என்று மனதில் ஒரு குரல் ஒலித்தது. ஆனால் 'ஜோ' அந்தக் குரலை அலட்சியம் செய்தான். 'கைக்காயம் ஆறாமலே போகட்டும்'. உயிரே போனாலும் கொஞ்ச காலமாவது தன்னிச்சையாக, சுதந்திரமாக இருந்துவிட வேண்டும் என்று ஒரு உறுதியுடன் அவன் படுக்கையை விட்டு எழுந்தான்.

உடம்பெல்லாம் அசதியாக இருந்தது. மணிக்கட்டு விண்ணென்று வலித்தது. ஆனால் அவனுக்குள் மூண்டு எரிந்து கொண்டிருந்த வெறி அவனுக்குப் புதுத்



தெம்பு அளித்தது.

மெல்ல வெளியில் எழுந்து வந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். திக் திக்கென்று நெஞ்சு துடித்தது. ஆள் அரவமே இல்லை. நிம்மதியாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். வேகமாக ஓடி, மருத்துவமனையின் வாயிலை அடைந்தான்.

அங்கே ஒரு வேன் நின்று கொண்டிருந்தது. ஒரு சிறுமி அதில் அமர்ந்திருந்தாள். பாப்பாவின் முகம் ஒளியுடன் இருந்தது. குட்டி தேவதை மாதிரி இருந்தாள். கண்ணிமைக்கும் நேரத்தில், டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்து, வாகனத்தை இயக்கினான். மருத்துவமனை சிப்பந்தி ஒருவனை அடித்து வீழ்த்த வேண்டியிருந்தது! பச்சாதாபம் பார்த்தால் முடியாது...

வண்டி சீறிக்கொண்டு சென்றது. பாப்பா பயத்தில் அலறத் தொடங்கினாள். 'ஜோ' வைக் கண்டபடி திட்டினாள். அடித்தாள். அழுதாள். ஆர்ப்பாட்டம் செய்தாள். 'ஜோ' சட்டை செய்யவே இல்லை. அவன் கனவு கண்ட அந்த சொர்க்கபுரியை நோக்கி வண்டி சென்று கொண்டிருந்தது!


செக்கோஸ்லொவோகியா எல்லைகளைக் கடந்து ஆஸ்த்ரிய தேசத்துக்குள் நுழைந்துவிட வேண்டும் என்பது அவன் எண்ணம்.

ஏகாந்தமான ஒரு இடத்தில் வண்டி நிறுத்தப்பட்டது! 'ஜோ' என்ற ஜோகோ, சிறுமி கிக்காவிடம் அன்புடன் பேசினான்.

மெல்லப் பாப்பாவின் எரிச்சல் தணிந்தது! இவன் நல்லவன் போலிருக்கிறதே என்று அவள் எண்ணத் தொடங்கினாள். மெல்ல மெல்ல அவனுக்கும் பாப்பாவுக்கும் இடையே ஒரு அன்பு முடிச்சு விழுந்தது!

ஒரு நாடோடிப் பிச்சைக்காரனின் சின்னக் கொட்டடியில் அவர்கள் இருவருக்கும் புகலிடம் கிடைத்தது. பாப்பா கிக்கா, கடவுளிடம் ஜோகோவின் நலனுக்காகப் பிரார்த்திக்கத் தொடங்கினாள். அவள் கற்ற கல்வி, அவளுக்குக் கடவுளைப் பற்றி லேசாகத்தான் சொல்லி இருந்தது. பாப்பா அப்படி ஒன்றும் மதநூல்களைக் கரைத்துக் குடித்தவள் இல்லை. ஆழ்ந்த ஆன்மிக அனுபவங்களைப் பெற்றவளும் இல்லை. ஆனால் அவளுக்குக் கடவுளிடம் ஆழ்ந்த அன்பு இருந்தது. செவிட்டு விலை மாதான தன் தாயை நேசிப்பது போலவே, நேசித்தாள். கடவுள் மிகப் பெரியவர். நம் அனைவர் மீதும் அன்பு செலுத்துபவர், அவரிடம் வேண்டிக் கொண்டால், அவர் அற்புதங்கள் செய்வார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை - பாப்பாவுக்கு இருந்தது!

கடவுளுக்கு அவள் ஒரு கடிதம் எழுதினாள். ஜோகோவுக்கும் தனக்கும் நன்மை செய்யும்படி அந்தக் கடிதத்தில் எழுதி வைத்தாள். பாப்பா, கிக்கா, கடவுளுக்கு இன்னொரு வேண்டுகோளும் வைத்தாள். கடவுள் இருக்கிறார் என்பது



உண்மையானால் - அவர் அந்தக் கடிதம் எழுதப்பட்ட பழுப்புக் காகிதத்தில் எப்படியாவது ஒரு புள்ளி விழ வைக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தாள்.

பாப்பா அதிக நேரம் கழித்துக் கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் புள்ளி ஏதும் இல்லை. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? இருந்தால், அவர் தன் விஷயத்தில் அசட்டையாக இருக்கிறாரா? என்றெல்லாம் தன்னைத்தானே கேட்டுக்கொண்டு பாப்பா தூங்கிப் போனாள்.

பழுப்புக் காகிதத்தில் எழுதப்பட்ட கடிதம் மேஜை மேல் இருந்தது. தேநீர் தூக்கும் பாத்திரத்தை 'ஜோ' மேஜைக்கருகில் தூக்கிச் செல்லும்போது ஒரு துளி தேநீர் பழுப்புக் காகிதத்தில் பட்டு புள்ளி போன்ற ஒருகறை விழுந்தது!

'ஜோ' தேநீரைக் கோப்பையில் ஊற்றிக் குடித்துவிட்டுப் படுத்துவிட்டான். அவனுக்கு மணிக்கட்





டுப் பகுதியில் பயங்கரமான எரிச்சல். நாடோடிப் பிச்சைக்காரன் 'ஜோ'வின் மணிக்கட்டுக் காயம் ஆறுவதற்காக ஒரு எம வைத்தியம் செய்தான். ஆல்கஹாலை காயத்தின் மீது ஊற்றித் தீ வைத்தான். 'ஜோ'வுக்கு வலியில், உயிர் போய் உயிர் வந்தது! அவனுக்குத் தூக்கம் வர நெடு நேரமாயிற்று...

இரவு, கார் கடத்தலின்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில், குறுக்கே போன நாடோடிப் பிச்சைக்காரன், குண்டடிபட்டு உயிர் துறந்தான். 'ஜோ'வுக்கும், பாப்பாவுக்கும் துக்கம் மேலோங்கியது....


பாப்பா, மேஜை அருகே சென்று பார்த்தபோது - பழுப்புக் காகிதத்தில் எழுதின கடிதத்தில் புள்ளி விழுந்திருப்பதைப் பார்த்துக் குதூகலித்தாள். கடவுள் தன் கரிசனத்தை உணர்த்தி விட்டார் என்று பாப்பா கைகொட்டிச் சிரித்தாள். கடவுள் தன் இதய ஒலியைக் கேட்கிறார் என்ற நம்பிக்கை பாப்பாவுக்கு உண்டாயிற்று!

அவள் பிரார்த்தனை செய்தாள்....

பாப்பாவின் தாய், இவர்களது இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு வந்துவிட்டாள். 'ஜோ'வும் பாப்பாவின் தாயும் ஒன்றாகப் படுத்து தேக உறவில் திளைத்து எழுந்தார்கள்.

'ஜோ'வுக்கு விடுதலை உணர்வு உண்டாயிற்று. அவன் ஆசைப்பட்ட கொஞ்சகால சொர்க்கம் அவனுக்குக் கிடைத்திருந்தது. ஆஸ்திரியா தேசத்துக்குத் தப்பிச் சென்றுவிட்டால் அவன் கனவு நனவாகிவிடும். பாப்பா, 'ஜோ'வின் நலனுக்காக மறுபடியும் கடவுளிடம் வேண்டிக் கொண்டாள். வேசியாக இருந்தாலும் பாப்பாவின் தாய் நல்லவள் என்று 'ஜோ' நேசித்தான். அவளிடம் பிரியமாக நடந்துகொண்டான். அவளுடன் அவன் செலவழித்த பொழுதுகள், அவனது வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவங்களாக அமைந்தன. 'ஜோ' தப்பிச் செல்ல உதவுவதாக அவள் சொன்னாள்.

போலீஸ் எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிட்டது. போலீஸ் வசம் சிக்காமல் 'ஜோ' தப்பி ஓடியபோது பாப்பாவும் பாப்பாவின் அன்னையும் ஒரு பாலத்தின் உச்சியில் இருந்தார்கள். 'ஜோ'வும் போலீஸின் துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தப்பி, பாலத்தின் மேல் பகுதிக்கு வந்தான். போலீஸார் சுட்டுக்கொண்டே



இருந்தார்கள்.

பாப்பாவுக்குக் கடவுள் மீது கோபம் வந்தது. 'கடவுளே! ஜோவைக் காப்பாற்றாவிட்டால் உன்னிடம் நம்பிக்கை வைக்க மாட்டேன்' - என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். இனி தப்பிக்க வேறு வழியே இல்லை என்று உணர்ந்தபோது, 'ஜோ' - துணிந்து பாலத்தின் மேலிருந்து கீழே நதியில் குதித்துவிட்டான். அவன் தண்ணீரில் மூழ்கிய இடத்தைக் குறி வைத்து போலீஸார் சுட்டுக் கொண்டே இருந்தார்கள்....

பாப்பா கிக்கா - நடுநடுங்கிப் போனாள். கொஞ்ச நேரம் கழித்து போலீஸார் சலிப்படைந்து அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார்கள். பாப்பாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது!

'கடவுளே! 'ஜோ'வை நதியில் மூழ்கி இறக்க வைத்துவிட்டாயே!' - என்று கடவுளைத் திட்டினாள். நேரம் செல்லச் செல்லப் பாப்பாவின் தாயும் கலவரமடைந்தாள். 'ஜோ'விடம் அவளுக்கு ஆழ்ந்த அன்பு ஏற்பட்டிருந்தது. அநியாயமாக அவன் துர்மரணம் அடைந்து விட்டானே என்று வருத்தப்பட்டாள்.

நதியில் இப்போது ஒரு சின்னக் கப்பல் ஊர்ந்து கொண்டிருந்தது! பாப்பாவின் கவனம் அந்தக் கப்பல் வசம் சென்றுவிட்டது...

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தண்ணீரின் மேற்பரப்பில் ஒரு கறுப்புப் புள்ளி தெரிந்தது! அப்புறம் புள்ளி பெரிதானது... தண்ணீருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டு இருந்த 'ஜோ' மெல்ல வெளிப்பட்டான். அதைப் பார்த்ததும் பாப்பாவின் மனது குதியாட்டம் போடத் துவங்கியது...

கடவுள் இருக்கிறார்.... கடவுள் இருக்கிறார் என்று பலமுறை சொல்லிக் கொண்டாள்... 'ஜோ'வைக் காப்பாற்றியதற்காகக் கடவுளுக்கு நன்றியும் சொன்னாள்.


'ஜோ' மெல்ல நீந்திச் சென்று கப்பலின் அடிப்பாகத்தை அடைந்தான். அங்கிருந்து சில பிடிமானங்களைப் பற்றிக் கொண்டு, கப்பலின் உச்சியை அடைந்தான். 'ஜோ' இனி பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுவிடுவான் என்று பாப்பா நினைத்தாள். மீண்டும் அவள் கடவுளை நினைத்துக் கொண்டாள்.

இன்னும் எத்தனைக்காலம் 'ஜோ'வின் சுதந்திரம் நீடித்திருக்கும்? இதை பாப்பா 'கிக்கா'வின் மனதில் இருக்கும் அந்தக் கடவுள் தான் சொல்ல வேண்டும்! ★



# மயிலுக்கு அழகு எப்போது வந்தது தெரியுமா?

ஜனார்த்தனன்



இது கந்த புராணம் காட்டும் கதை. சூரபத்மன் இறவா வரம் பெற்றிருந்தான். அவன் முருகனால் வதம் செய்யப்பட்ட போது, அவனது உடல் சேவலாகவும் மயிலாகவும் மாறியது. முருகன் சேவலை தனது கொடியின் சின்னமாகவும் மயிலைத் தனது வாகனமாகவும் ஏற்றுக்கொண்டதால் முருகனுக்கு சிகிவாகனன் என்ற பெயர் வந்தது.

காணுதற்கு அழகான மயில் நம் நாட்டின் தேசியப் பறவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மயிலுக்கு அழகு வந்தது பற்றி உத்தர ராமாயணத்தில் ஒரு குறிப்பு உள்ளது.

ஒரு சமயம் ராவணன் புஷ்பக விமானத்தில் தான் போகும் வழியில் மன்னர்கள் யாரேனும் தவமோ, யாகமோ செய்து கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தவண்ணம் தன்னுடைய ராட்சச சேனையுடன் சென்று கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் மருட்டன் என்ற அரசன் ஒரு ஆசிரமத்தில் மகேச்வர யாகம் செய்து கொண்டிருந்தான். இந்திரன் முதலான தேவர்கள், யாகத்தின் ஹவிர் பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அங்கே கூடியிருந்தனர்.

ராவணன் அங்கே வருவது தெரிந்ததும், அவர்கள் பல மாறு வேடங்களில் கலைந்து ஓடினார்கள். அப்போது ஆயிரம் கண்ணுடைய இந்திரன், அழகிய மயில் வேடத்தில் மாறி நின்றான். அழகிய அந்த மயில் ராவணனுக்கு பிடித்துப் போனது. அதன் அழகில் மயங்கிவாறே ராவணன் அங்கிருந்து சென்றான். அன்று முதல் இந்திரனுக்கு மயில் மீது அலாதி பாசம் ஏற்பட்டது.

அதுவரை நீல வண்ணமாக இருந்த மயிலின் தோகையைப் பல வண்ணங்களில் மாறும் வகையில் செய்தான். அவற்றுக்கு தனது உடலிலிருந்த ஆயிரம் கண்களையும் அளித்து அழகு செய்தான். மயிலுக்கு எந்த வியாதியும் பிடிக்காது என்ற வரம் அளித்து, மயிலைக் கொல்பவர்கள் மிகுந்த பாவம் செய்தவர்கள் ஆவார்கள். அவர்கள் கொடூரமான முறையில் இறப்பார்கள் என்றும் கூறி, மழை வரும் முன்னர் மயில் தனது அழகிய தோகையை விரித்து ஆடட்டும் என்றும் கூறிச் சென்றானாம்.

அன்று முதல் மயில் மிகுந்த அழகுடையதாக மாறி, மழைக்காலத்தில் தனது தோகையை விரித்து ஆடி காண்போரைப் பரவசப் படுத்துகிறது என்பது புராணக் கதை.

ஸ்வாமி

# எதிர்க்காதீர்கள்: ஏற்றுக் கொள்ளுங்கள் 3

## மகான்களுக்கும் சிரமமானது

மும்பைக்கு முதல் தடவையாக நான் சென்றிருந்தபோது தாதரில் இறங்கி இந்தப்பக்கம் கிழக்கு தாதருக்கு (C.R) வர முயன்றேன். பாலத்தில் மேற்குத் தாதருக்குச் (W.R) சென்று கொண்டிருந்த கூட்டம் என்னை எதிர்த்திசையில் தள்ளிக் கொண்டு சென்று வெஸ்டன் தாதர் நிலையத்தில் விட்டுவிட்டது. அதாவது, மக்கள் வெள்ளத்தை எதிர்த்து என்னால் இப்பக்கம் வர முடியவில்லை.

எதிர்காற்றில் முன்னேறுவது எளிதன்று.

எதிர்நீச்சலடிப்பதும் சுலபமன்று. புயல்காற்றில் உடனே வளைந்து கொடுக்கும் நாணல் முறிவதில்லை. விறைத்து நிற்கும் பெரியமரம் கூட விழுந்து விடுகிறது.

பரவிவிட்ட கருத்தில் பழுது இருந்தாலும் அதை எதிர்த்துப் புதிய கருத்தைப் புரியவைப்பது சாமானிய வேலையன்று.

போன வழியிலேயே போகும் ஆடுகளைப் புதிய வழியில் திருப்பி ஓட்டுவது பெரிய மகான்களுக்கும் கூட முடியாததாகும்.

ஆகையால்தான்,

ஏசுபிரான் சிலுவையில் அறையப்பட்டார்.

சாக்ரடீஸ் நஞ்சு கொடுத்துத் தண்டிக்கப்பட்டார்.

தமிழகத்தில் - ஸ்ரீராமானுஜர் மைசூருக்குப் போக வேண்டிவந்தது. அவர் சீடர், கூரத்தாழ்வான் கண்களையும் அவர் குரு பெரிய நம்பி உயிரையும் இழக்க நேர்ந்தது. எதிர்க்கவே பிறந்தவர் எதிர்க்கட்டும். அவர்கள் எல்லாரும் எதையும் தாங்க வல்லவர்கள்.





நாமெல்லாரும் சாமானியர். ஆகவே கூடியவரை எவரையும், எதையும் எதிர்க்காமலிருந்தால் வருவது எதுவானாலும் ஏற்றுக் கொண்டு விட்டால் வாழ்க்கை எளிதாகும். தோல்வியிராது.

அர்ஜுனனை எதிர்த்துப் போரிட ஏவிய கிருஷ்ணரின் கருத்து எதிர்த்துப் போராட வேண்டும் என்பதுதானே?

ஆமாம், அது அவன் செய்தே ஆக வேண்டிய கடமை. அவன் ரஜோ குணமுள்ள அரச குலத்தான். அக்கிரமத்தை எதிர்த்தழிக்க போர்ப்பயிற்சியும், ஆற்றலும், சரியான காரணமும் அவனுக்கிருந்தது. ஆகவே தீயவரை எதிர்ப்பதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்று என்றார். அதாவது 'உன் கடமையை' எதிர்க்காதே; ஏற்றுக்கொள் என்றார்.

நம்மாலும் எத்துணை சிரமத்தையும், எப்படிப்பட்ட வாழ்க்கையையும் ஏற்க முடியுமானால் நாமும் எதிர்த்தே ஆக வேண்டியதை எதிர்க்கலாம்.

நம் நிலை, இடம், பொருள், ஏவல், சக்தி, அறிவு இவற்றுக் கேற்ப எதிர்த்தே ஆகவேண்டிய கடமை இருந்தால் அதை எதிர்ப்பதை ஏற்கலாம்.

### எதிர்க்கவே முடியாதவை:

நம் பிறவி முன்வினைப்படி அமைந்ததை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இதில் ஓர் உடல் வாய்த்துள்ளது. இது அழகோ, கோரமோ ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். கருப்போ, குண்டோ, குட்டையோ, ஒன்றரைக் கண்ணோ, பற்கள் முன் நீண்டவையோ, முடமோ, கூனோ எப்படியிருப்பினும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

இப்படி நாம் அவசியம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டிய கட்டாய நிலையைத்தான், 'அழுதாலும் புரண்டாலும் அவதானே பிள்ளை பெறவேண்டும்?'' என்று கூறி விளக்குவர்.

மனிதன் என்று பிறந்துவிட்டோம். இந்தத் தர்மத்தை ஏற்றே ஆகவேண்டும். நடந்தே போக முடியும். பறக்க முடியாது. இதை எதிர்க்கிறேன் என்று ஆகாயத்தில் மாடியிலிருந்து பாய முடியாது.

இப்படியே அவரவர் வாழ்வில் அவர் அவர் முயற்சியில் வெற்றியும் வரும். தோல்வியும் வரும். ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அப்போதுதான் நீங்கள் வெற்றி பெறும் போது பிறர் அதை ஏற்றுக் கொள்ளுவர்.

## குறையை உணரவும்:

மறைந்த முதல்வர் திரு.எம்.ஜி.ஆர்., தம் வாழ்க்கையின் தொடக்க காலத்தில் சொல்லொணாத் துயரம் தரும் தோல்விகளை அனுபவித்திருக்கிறார். அப்போதெல்லாம் அவர், தம்மிடம் என்ன குறை, எதனால் தோல்வி? என்று ஆராய்ந்து பிறர் மேல் ஆத்திரம் கொள்ளாமல் அமைதியடைந்திருக்கிறார். எதிர்ப்பைக்காட்டாமல் ஏற்றுக்கொண்டு மீண்டும் மீண்டும் முயன்றிருக்கிறார்.

உதாரணமாக, நாடகம், சினிமாவில் அவருக்குக் கிடைக்க வேண்டிய வேஷங்கள் வேறு நபர்களுக்கு அளிக்கப்பட்டு அவர் தம் வருமான வாய்ப்பை இழந்தபோதும், மிகுந்த சிரமதசையில் கூட, 'எனக்குப் பாடத் தெரியாது; அதனால் அந்த வேஷம் பாடத் தெரிந்தவருக்குக் கொடுக்கப் பட்டுவிட்டது. அவர் படித்தவர், ஆங்கிலம் பேசுபவர், அழகான தோற்றம் பொருத்தமாக உடையவர். அதனால் அவரைசிபாரிசு செய்து விட்டனர்' என்றெல்லாம் வேலை கையை விட்டுப் போய் வருத்தமாக வீட்டிற்கு வரும்போதும் நினைத்துப் பார்த்து அமைதி அடைவாராம்.

இதனால் தம் தகுதியை உயர்த்திக் கொள்ளவும், கிடைத்த வாய்ப்பில் சரியாக வேலை செய்யவும் உழைத்திருக்கிறார். இதனால் தானே, மனிதநேயமுள்ளவராக, மிகப்பெரிய நிலையை அடைந்தவராக, பணம், புகழ், பதவி எல்லாம் பெற்ற மனிதராக விளங்க முடிந்தது. ஆகவே நம் குறையை உணர்ந்து அதைப் போக்கித் தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

## எதிர்க்காதீர்:

எவரையும் எதற்காகவும் எதிர்க்காதீர்கள். எதிர்த்தால் உங்களுக்கு நெருங்கியவராக எவருமே உங்களிடம் தங்கமாட்டார். பிறகு நமக்கு உதவிகள் பிறரிடமிருந்து வராது.

சின்னச் சின்ன சங்கதிகளில் எதிர்த்துப் பேசுதல் கூட நாளடைவில் விரோதத்தை உண்டாக்கி வளர்த்துவிடும்.

அனைவருக்கும் அகங்காரம் உண்டு. அதாவது தம்மீது அபிமானம் உண்டு. இதனால், ஏதோ தமக்குத் தெரியும் என்று எண்ணிக் கொண்டிருப்பர். நாம் உண்மையைக் கூறுவதாகவோ, அவருக்குத் தெளிவைத் தர விரும்பியோ, ஒருவர் பேச்சை எதிர்த்து எதிர் கருத்தைக் கூறும்போது அவர் அகங்காரம் அடிக்கப்படுவதாக உணருவார். 'இவனுக்குத்தான் எல்லாம் தெரியுமோ, இவன் என்னை விடப் பெரியவனோ?' என்ற எண்ணம் கொண்டு உரத்த குரலில் மறுத்துப்





பேசுவார். கோபத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் நம்மை உள்ளத்தளவில் ஒதுக்கிவிடுவார். அவரால் வேறு நன்மைகள் விளைவதாக இருக்கும். மேலும் மற்ற வகையில் நல்லவராகவும் அவர் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களை தேவையின்றி எதிர்த்துப் பேசி எதற்காக இழக்க வேண்டும்?

ஆகவே வீணாக எதிர்த்துப் பேசி பிறர் உணர்வைக் காயப்படுத்தி, நண்பர்களை, அவரால் கிடைக்கும் உதவிகளை இழப்பது விழிப்பற்ற தன்மை; வெற்றியை இழக்கச் செய்யும்.

இப்படி பிறரை எதிர்க்காமல் கோடி நன்மை வருவதானாலும் வேண்டாம் என்கிறீரா. சரி; நான் உங்களை ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால் நீங்களும் வாழ்வில் பல தோல்விகளைச் சுமையாக ஏற்கும்படியாகும்.

உலகில் ஒன்றுக்கும் உதவாத அரசியல், சினிமா பத்திரிகைச் செய்திகள், பிரபலமானவர் பற்றிப் பலர் தம்முடைய கருத்துக்களைக் கூறவே செய்வர். சொல்லட்டுமே, நாம் நம் சொந்த வேலைக்கு முக்கியம் தந்தால் அவர்களின் பயனற்ற பேச்சை மறுத்துப் பேசி எதிர்க்க மாட்டோம்.

பிறரை ஜெயிக்க வேண்டும் எனப் பேசி எதிர்க்க வேண்டாம் என்பதே பாடம்.

ஒருவர் உள்ளே நுழைகிறார். நீங்கள் வெளியில் அவரைப் பிடித்துத் தள்ளினால் என்னாகும்? அவர் தம் பலத்தை அதிகம் பிரயோகித்து உங்களைத் தள்ளுவார். அநாவசியங்களுக்கெல்லாம் இப்படி நடக்கும்படி எதிர்க்க வேண்டாமே!

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்று குறளும் இதைக் கூறும். உலகில் எல்லாரும் ஏற்கும் ஒன்றை எதிர்ப்பது துன்பத்திற்கே வழியாகும். தோல்வியே இதன் பரிசாகும். உலக நடைமுறையை ஏற்றே வாழ வேண்டும்.

கடவுட் கொள்கையை அநேகர் ஏற்றுள்ளனர். எதிர்க்கவில்லை.

எவ்வளவுதான் பேய் நம்பிக்கை இல்லாதவராயினும், இருட்டில் அகாலத்தில் தனியே போகும்போது 'ஒருவேளை பேய் உண்மையில் இருந்துவிட்டால்?'

என்று பயம் வரும் என்பதுபோல, எப்பேர்ப்பட்ட நாத்திகருக்கும் கூடக்கடவுள் எதிர்ப்பு பிரச்னையாகவே இருக்கும்.

அப்படியானால் ஆத்திகரால் போட்டியில்லாத ஒரே கடவுளாக ஆட்சிபுரியும் பேரறிவை, ஒரே ஆதாரப்பொருளை எப்படி எதிர்க்க முடியும்? ஆனாலும் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

## வெறுப்பு வரும்

நான் குடியிருக்கும் வீட்டுக்காரர் பெண் ஸ்கூட்டியில் வெளியில் போனாள். ஒரு விபத்து. கால் முறிந்து விழுந்துவிட்டாள். மருத்துவமனையில் அனுமதித்துக் கட்டுப் போட்டனர். குறைந்தது மூணு மாதம் நடக்க முடியாதென்றனர்.

நான் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். அந்தப் பெண்ணுடைய அம்மா என்னைக் கேட்டாள்.

''அடிக்கடி கோயிலுக்குப் போகிறேன். ஸ்வாமியைக் கும்பிடாத நாளே இல்லை. விளக்குப் போடுகிறேன். ஒரு பாவமும் தெரிஞ்சு பண்ணவில்லை. எனக்கேன் இப்படிக் கஷ்டம் வருகிறது? கடவுளுக்குக் கண்ணே இல்லை'' என்றார்.

நான் எதிர்த்துப் பேசவே இல்லை. ''கடவுளே இல்லை'' என்று சொல்லுவது இதனால்தான்'' என்றதோடு விட்டுவிட்டு சங்கடமாக இருந்தேன். ''நீங்க முன்னால் செய்த பாவத்தின் பயனே இது'' என்றால் அது மனிதத் தன்மையாகுமா?

குழந்தை குட்டிகளுடன் குடும்பம் நடத்துவது பெரிய பிரச்னையாக இருக்கும் இந்நாளில், கல்விச் செலவு, விலைவாசி உயர்வு, வீட்டு வாடகை என்று சிரமத்துடன் வாழ்ந்து வரும்போது, திடீர் மருத்துவச் செலவு, விபத்தால் வரும் துன்பம், சண்டை சச்சரவு எனத் துன்பங்கள் சூழ்ந்தால்...?

'இவ்வளவு நாள் கடவுளை வணங்கி வந்து பயனென்ன?' படையல் போட்டென்ன, விளக்கேற்றி கோயிலில் தவறாமல் சென்று கும்பிட்டென்ன? கடவுளுக்குக் கண்ணே இல்லை என்று மக்கள் அலுத்துக் கொள்ளவே செய்வர்.

'நம்பியது நடக்கவில்லையேல், எதிர்பார்த்தது கிடைக்கவில்லையேல் மனம் இடிந்துபோய் இத்தனை காலம் கடவுளைப் பணிந்தும் பயனில்லையே' என்றெண்ணிக் கடவுளையும் உண்மையில் இருக்கிறாரா? என ஐயுறுவது சகஜமே.

## கைவிடாதவர்:


எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாந்து விட்டபோது அடுத்தடுத்துப் பல தோல்விகளை, துன்பத்தைச் சந்தித்தபோது திரு.எம்.ஜி.ஆரும் கும்பிட்ட தெய்வத்தைத் திட்டிவிட்டாராம். அவர் அன்னை அதற்காகப் பலமாக அவரை அடித்துவிட்டுக் கடவுளைப் பழிக்கக் கூடாதென உணர்த்தினாராம்.



கடவுளைக் கும்பிடுவது ஓர் ஆறுதல். 'இதற்குமேலும் எதுவும் துன்பமாகாமல் கடவுளின் கருணையே காத்தது' என சமாதானம் அடையலாம்.

''என்னுடைய பாண்டவர்'' எனக் கடவுளாலேயே குறிப்பிடப் பட்ட ஐவர் அடையாத துன்பமா, தோல்வியா? திரௌபதி அடையாத அவமானமா?

''அப்பாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று சிலுவையில் அறையப்பட்ட ஏசுபிரானே அவருடைய கடவுளைக் கேட்டாரில்லையா?



## புரிந்து கொள்ளுங்கள்:

ஆகவே, கடவுளைக் கும்பிடுவதால் மட்டுமே ஒரு குறையும் இல்லாமல் வாழ்ந்துவிடலாம் என்பது மடமை? அதனால்தானே ''பயனை உனக்கென எதிர்பார்த்து என்னைத் தொழுவது உயர்வில்லை'' என்றான் கண்ணன். பயனை எதிர்பார்க்கும் போதே மனம் இடிந்துபோவதும் கடவுளை வைவதும் உண்டாகும். ஞானிகளுக்கும் கூட முன்வினைப்பயனாகத் துன்பம் உண்டு.

உலகில் துன்பமும் துயரமும் இல்லாமல் உயிர்களை வாழவைக்கும் வல்லமை கடவுளுக்கு இல்லையா? இருக்கிறது. பின் ஏன் பக்தர்களையும் சாதுமக்களையும் கூட சங்கடங்கள் தந்து வதைக்கிறார்? ஓரே பதில்தான் கிடைக்கும்.

தம்மிடம் எல்லா உயிர்களும் வரவேண்டும். நிரந்தரப் பேரின்ப வாழ்வைப் பெற வேண்டும் என்று கடவுள் நினைத்திருக்கிறார் என்பதே அது.

தோல்வி துன்பங்கள் குறைகளெதுவும் இல்லாமல் இந்த உலகத்தில் நம்மை இறைவன் வாழ விட்டால், இந்தத் தற்காலிக சிற்றின்ப வாழ்வைப் பெரிதும் விரும்பி இங்கேயே வாழ உடலுடன் உலகில் இருக்கவே செய்வோம், இறைவனை அவனுலகில் சென்ற

டைந்து நிரந்தர பேரின்ப வாழ்வை அடைய முயலமாட்டோம்.

கடவுளை நம்பினால் என்றேனும் அவர் நல்ல வாழ்க்கை அளிப்பார் என்று எண்ணியிருக்கலாம். நம்மால் முடியாதபோதும் அக்கிரமக்காரரை அவர் தண்டிப்பார் என்று அமைதி பெறலாம். கடவுளை நம்பாவிட்டால் நமக்கு எந்த ஆறுதலும் பாதுகாப்பும் இல்லை.

ஆகவே கடவுளை எதிர்க்காதீர். வாழ்க்கைத் துன்பங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். நாளடைவில் துன்பம் துன்பமாக இராது.

### *சிந்தனை வரும்*

வழக்கம்போல ஒரு கதை:

'செட்டியார் வடை சுட்டு வைத்தார். ஒரு காக்காய் ஒரு வடையைக் கொத்திக் கொண்டு போய் ஒரு மரக் கிளையில் உட்கார்ந்தது. ஒரு நரி அங்கே வந்து அந்த வடைமேல் ஆசைகொண்டு காக்காயைப் பார்த்து,

''அண்ணா, உங்கள் அழகான வாயால் ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்றது. வடையைக் கால்களில் பிடித்தபடி ''கா...கா...'' என்று இரைந்து காக்கை பாடியது. வடையை அது கீழே விடாததால், ''உங்களால் மல்லாந்து படுத்து, இரு கால்களையும் தட்ட முடியுமா?'' என்றது. ''ஓ...'' என்ற காக்கை அலகில் வடையை வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்துக் கை தட்டியது. அப்போதும் வடை கீழே விழாததால் நரியால் அடைய முடியவில்லை.

ஆனால் அதேசமயம் காக்காய் பலமுறை பாடுவதாகக் கரைந்த சத்தம் கேட்டு ஏகப்பட்ட காக்காய்கள் பறந்து வந்து கூடி அந்த நரியை அங்கமெல்லாம் கொத்திக் கிழித்தன.

அது முதல் எந்த நரியும் காக்கை வைத்திருக்கும் வடைக்கு ஆசைப் படுவதே இல்லை.

இதுபோலத்தான் துன்பங்களும், தோல்விகளும் ஏமாற்றங்களும் வாழ்க்கையில் அளிக்கப்படுவதால், உலகின் மேல், உடலின் மேல் வெறுப்புற்று சிந்தனை உண்டாகும். இவற்றிலிருந்து விடுதலை பெற அமைதிபெற நினைப்போம். இதனால் எதையும் ஏற்றுக் கொள்ளுங்கள்; எதிர்க்காதீர்கள்.

(தொடரும்)

**ஹைக்கூ**

மண்ணைக்
கவிஞனாக்கியது
துளிர்க்கும் விதைகள்!



**துளிகள்**

வானுக்கு என்ன சோகம்
குளத்தில் வளையங்கள்
வீசி எறிந்த மழை!

— நாகஷரண்,



# ஹோலிகா

சுதாமகி

இயற்கையின் வண்ணங்கள் பரிமளித்து வசந்தத்தை வரவேற்று நம்மை பரவசப்படுத்துகிறது. பாரதமக்கள் குதூகலத்துடன் ஹோலி பண்டிகையைக் கொண்டாடிக் களிக்கின்றனர். ஹிந்துக்கள் பெருமகிழ்ச்சியுடனும் பேரானந்தக் களிப்புடனும் கொண்டாடும் பண்டிகை, இது. வண்ணப் பொடிகளைத் தூவியும், தண்ணீர் பீச்சியடித்தும் கொண்டாடுவர்.

பாரத நாகரிகம் எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அந்த நாளிலிருந்து ஹோலிப் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த நாட்களில் மக்கள் தன்னிச்சையாகி, தீமைகளைச் செய்தனர். கொடுமைகள் மலிந்திருந்தன. பேய், பிசாசுகள் போன்ற மூடநம்பிக்கைகள் மேலோங்கி மக்கள் துன்பப்பட்டனர். இப்படிப்பட்ட தீமைகள் ஒழிந்து நன்மைகள் பெருகும் காலம் வரும் என்பதற்கு பல புராணக்கதைகள் கூறப்பட்டன. 'நில் மாத' புராணம் கூறும் கதையிது.

அசுர மன்னன் இரணியகசிபு, பரமசிவனிடம் சாகாவரம் பெற்றவன். வரம் பெற்றபின் அகந்தை மேலோங்கி மிகுந்த அட்டூழியங்கள் புரிந்தான். மக்களைத் துன்புறுத்தினான்.

''தானே கடவுள். தன்னையே அனைவரும் வணங்க வேண்டும். அனைவரும் ''ஹிரண்யாய நம:'' என்றுதான் கூறித் துதிக்க வேண்டும். (முழுமுதற் தெய்வமான) நாராயணன் (மகாவிஷ்ணு) பெயர் சொல்



லக்கூடாது. ''ஓம் நமோ நாராயணாய என்று கூறி வணங்கவும் கூடாது'' என்று ஆணையிட்டிருந்தான்.

இந்த ஆணைக்கு நேரெதிராக இருந்தவன், அவனுடைய ஒரே மகன் பிரகலாதன். எப்போதும் நாராயணன் நாமத்தையே உச்சரித்தான். தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. இரணியன் தனது மகன் பிரகலாதனைக் கொன்றுவிடத் தீர்மானித்து, பலவித கொடூரச் செயல்களைக் கையாண்டான். எதுவும் நிறைவேறவில்லை. நாராயணன் நாமத்தையே சொல்லிக் கொண்டிருந்த பிரகலாதனை, ஒவ்வொரு முறையும் எந்தவித இடையூறுமின்றிக் காப்பாற்றினார் பரந்தாமன்.



ஒருச்மயம் இரணியகசிபு தன் மகன் பிரகலாதனைத் தீயினால் எரித்துக் கொன்றுவிட எண்ணினான். இரணியகசிபுவிற்கு ''ஹோலிகா'' என்ற தங்கை இருந்தாள். அவளை அக்னி ஒன்றும் செய்யாது. நெருப்பை விழுங்குவாள். தீயில் குதித்தாலும் அவளுக்கு எந்த வித ஆபத்தும் நேராது. தன்னுடைய சகோதரனைப் போலவே தவம் செய்து அத்தகைய வரத்தைப் பெற்றிருந்தாள்.

பிரகலாதனை அவள் கையில் பிடிக்கச் சொல்லி தீ மூட்டி விட்டான். தீ கொழுந்து விட்டு எரிந்து அணைந்தது. பிரகலாதனுக்கு ஒன்றும் நேரவில்லை. நாராயணன் நாமத்தை பாராயணம் பண்ணியவண்ணம் இருந்தான். ''ஹோலிகா'' மட்டும் தீயினால் சுட்டெரிக்கப்பட்டு பிடி சாம்பலாகி விட்டாள். பிரகலாதனுக்கு வெற்றி. அதாவது... இரணியன் தீயவன். தீமைகளையே செய்தான். மகன் பிரகலாதன் நற்குணம் உடையவன். தீமையை நன்மை வென்றது. ஹோலிகாவை அழித்து வெற்றி கொண்ட நாளே 'ஹோலி' விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இன்னொரு கதை...

ஒருசமயம் பரமசிவன் தவம் செய்து கொண்டிருந்தபோது பார்வதிக்கு காம எண்ணம் உண்டானது.



பரமசிவனை தவத்திலிருந்து எழுப்பப் பலவித உபாயங்களைச் செய்தாள். ஒன்றும் பலிக்கவில்லை. பரமசிவனின் நிஷ்டை கலையவில்லை. என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாத நிலையில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்த போது அதைக் காணச் சகியாத காமன் (மன்மதன்) பார்வதிக்கு உதவி செய்வதாக எண்ணி மலர்க் கணையைத் தொடுக்க, அது பரமசிவன் மீது பாய்ந்தது. தவம் கலைந்து கண்விழித்துப் பார்த்ததும் நடந்ததையறிந்து பெருங்கோபங் கொண்டு தனது நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துவிட்டார். பரமசிவனிடம் பார்வதி மன்னிப்பு கோரி காமனை உயிர் பெறச் செய்தாள். இந்த நாளே ''ஹோலி'' என்னும் காமன் பண்டிகை நாள்.

இதோ மூன்றாவது புராணக் கதை...

கண்ணன் பிறந்த இடம் 'மதுரா'. கண்ணனால் அவன் மாமன் கம்சனுக்கு முடிவு என புராணத்தில் கூறப்பட்டது. எனவே கண்ணன் தன் எதிரி; அவனை தாம் முன்னமேயே கொன்றுவிட வேண்டுமென எண்ணினான். பல இடையூறுகளைச் செய்தபின் பலவிதமான



கொலை முயற்சிகளும் மேற் கொண்டான்.

பூதனை என்னும் அரக்கியை அனுப்பி கண்ணனைக் கொலை செய்யச் சொன்னான். கண்ணன் தான் நாராயணனாயிற்றே. பூதனையைக் கொன்று விட்டான். பூதனை தீயவள் ஆதலாலும், கோர உருவத்தினாலும் அவளுக்கு அந்தப் பெயர்!

அவளுடைய இயற்பெயர் ''ஹோலி''யாம். ஆயர்பாடியில் இருந்த மக்கள் பூதனையின் உருவத்தைச் செய்து கொடும்பாவி கொளுத்தி விழாவாகக் கொண்டாடினர். மதுரா பிருந்தாவனம் பகுதியில் இன்றும் ஆண்டுதோறும் ஹோலி விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.



ஹோலி பண்டிகையைப் பற்றிய விவரங்கள், பழங்கால ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் மூலம் தெரிய வந்துள்ளன. கர்நாடக மாநிலத்திலுள்ளது ஹம்பி நகரம். விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராக சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. அன்று கோலாகலமான திருவிழாக்கள் பல நிகழ்ந்தன. சிற்பக்கலை மிகுந்த கோயில்கள், கோட்டைகள், அரண்கள் எல்லாமும் இருந்தன.

இன்று அவை சிதிலமடைந்த சின்னங்களாக உள்ளன. அங்கே உள்ள கோயில் சிற்பம் ஒன்று ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடும் வண்ணம் காட்சியளிக்கிறது. காதலர் இருவர். அவர்களில் காதலி ஒரு குழல் போன்ற கருவியால் காதலன் மீது நீர் பீச்சுவது போல் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்விருவரைச் சுற்றி சில பெண்கள் அவர்கள்மீது தண்ணீர் பீச்சுகின்றனர்.

இங்குள்ள கோயில், கோட்டை ஓவியங்களிலும் இன்னும் பல குகை ஓவியங்களிலும் ஹோலி விழாக் கொண்டாடும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. முகலாயர்கள் ஆட்சிக் காலத்தின்போது மத வேறுபாடின்றி இந்து முஸ்லீம்கள் ஒன்றிணைந்து ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ந்தனராம்.





இயற்கையின் காலச்சூழலை அநுசரித்தே ஹோலிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. வசந்தத்தின் போது பூக்கும் வண்ண மலர்களின் பிரதிபலிப்பே வண்ணப் பொடிகளும், வண்ணக்கலவை நீரும் தெளிப்பதாகும். மலர்கள், வேர்கள், இலைகள் இவற்றிலிருந்தேதான் வண்ணப்பொடிகள், கலவை நீர்கள் தயாரிப்பார்களாம். உடலுக்கும் உயிருக்கும் எவ்விதத்திலும் ஊறு விளைவிக்காததாயிருக்கும். இன்று எப்படியோ? ஒரே ரஸாயனக் கலவைகள்!

போகிப் பண்டிகையன்று குப்பைகளைக் கொளுத்துவதுபோல், ஹோலிப் பண்டிகை முதல்நாள் இரவு ''ஹோலிகா''வின் நினைவாக உருவக் கொடும்பாவி கொளுத்துகிறார்கள்.

''குஜ்ஜியா'' எனப்படும் இனிப்புப் பண்டங்கள் செய்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுத்து மகிழ்வர்.

ஹோலிப் பண்டிகையை நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமாகக் கொண்டாடினாலும் அதன் பொருள், குறிக்கோள் ஒன்றே. அதுதான்:

''நல்லவை என்றும் தீமைகளை வெற்றி கொள்ளும்.''

தமிழாக்கம்: ஏழ்வரைக்கடியான் ஸ்வாகத்-திலிருந்து

# ஏன் நம்பிக்கை இல்லையா?

அக்பர் பாதுஷாவின் அவையில் புலவர்கள் மிகுந்து காணப்படுவர். பரிசில் பொருட்களை வழங்கியதோடு அவர்கள் எந்த ஊரிலிருந்து வந்தார்கள் என்பதையும் அறிந்து வழிநடைச் செலவும் சேர்த்து வழங்க அரச ஆணையுண்டு.

ஒரு புலவர் சர்ச்சைக்குரியவர் ஆனார்... ஏதோகிடைத்ததை வாங்கிக் கொண்டு போகாமல் தான் வைகுண்டத்திலிருந்து வருவதாக விவரித்து நெடுந்தொலைவிலிருந்து வந்துள்ளதால் பயணச் செலவு கூடுதலாக வேண்டும் என்று வாதிட்டார். உண்மையான தொலைவிடங்களுக்கெல்லாம் உரியதை வழங்கிய அலுவலர்கள் வைகுண்டத்தின் தொலைவு கண்டறிய இயலாமல் திணறி, பீர்பாலின் முடிவுக்கு விட்டனர். அவர் புலவருக்கு வழிச்செலவு ஏதும் உரிமையில்லை; பரிசில்பொருட்கள் மட்டும்தான் என்று முடிவாய்ச் சொல்லிவிட்டார்.

தகவல் அக்பருக்குப் போனது. அவர் பீர்பாலை அழைத்து ''அந்தப் புலவரின் குறையை நிவர்த்திக்க வழியுண்டா பீர்பால்?'' என வினவினார்... பீர்பால் உடனே 'கஜேந்திரமோட்சம்' ஓவியத்தை எடுத்துவரச் செய்தார். யானை முதலையின் பிடியால் துன்பமடைந்த போது ''ஆதிமூலப் பெருமானே!'' என்று பிளிறித்துடித்து அலறியதும், கேட்ட மாத்திரத்தில் கருடன் மீதமர்ந்த பெருமான் முதலையினின்றும் யானையை விடுவித்ததையும் ஓவியம் விளக்கிற்று. எனவே, கூப்பிடு தூரத்தில்தான் வைகுண்டம் உள்ளது என்று நிரூபிக்கவும், புலவர் வழியேதுமின்றி தலைகுனிந்து.... கிடைத்தவற்றுடன் வெளியேறினார்.

இப்போது, அக்பர் ஓவியத்தினைக் கூர்ந்து பார்த்தார். பீர்பாலை அழைத்தார். ''முப்பத்து முக்கோடி தேவர்கள் அருகே இருக்கும் போது அவர்களுள் எவரேனும் ஒருவரைப் பணித்து, யானையை விடு

**கவியோகி வேதம்**





விக்கச் செய்யலாமன்றோ? ஏன்? திருமாலுக்கு அவர்கள் பணியின் மீது திருப்தி இல்லையா பீர்பால்?'' என்று கேட்டார்.

பீர்பால் புன்முறுவலுடன் பதிலளித்தார்... ''மன்னர் பெருமானே! வரும் வெள்ளிக்கிழமையன்று இது பற்றிப் பேசுவோமே, என்ன?'' என்றார். 'சரி' என்றார் அக்பர்.

வெள்ளிக்கிழமை மாலையில் இதுபற்றி அக்பரும் பீர்பாலும் பேசிக் கொண்டே அரண்மனை நந்தவனத்தினூடே மெதுநடையில் வந்துகொண்டிருந்தனர்.

அக்பரின் பேரக்குழந்தையை வண்டியில் அமரச் செய்து தாதி ஒருத்தி அவர்கள் வரும் வழியிலுள்ள சிறு 'செய்தடாகத்'திற்கருகே வந்துகொண்டிருந்தாள். அப்

போது அந்த விபத்து நிகழ்ந்தது... கால் இடறி தாதி கீழே விழவும் கைவண்டியிலிருந்த குழந்தை குடை சாய்ந்த வண்டியிலிருந்து தூக்கி வீசப்பட்டு செய்தடாகத்தின் மத்தியில் பொத்தென்று விழுந்தது. கண்முன்னே நிகழ்ந்த அசம்பாவிதம்! இமைக்கும் நேரத்தில் அக்பர் பாய்ந்துசென்று குழந்தையைத் தூக்கி மேற்துண்டினால் துடைத்தார்.

குழந்தை பேச்சுமூச்சின்றி இருந்தது. அது எப்படி? பேசும் பதுமையாயிற்றே! ஏன்? பதட்டத்தில் அக்பர் தாதியைக் கடிந்துகொண்டார். அவள் அச்சத்தின் மிகுதியால் நிலைகுலைந்து மயக்கமடைய ஆரம்பித்தாள். பிறகே அக்பர் தம் கையிலிருப்பது மெழுகினால் வடிக்கப்பட்ட முழுகுழந்தையளவினதான பொம்மை என்பதை உணர்ந்தார். ''இது என்ன கூத்து? என்ன நடக்கிறது இங்கே? யார் இதற்குப் பொறுப்பு?'' என்று ஆவேசப்பட்டார்.

''மன்னர் பெருமானே! மன்னிக்க வேண்டும். தாதியின் மீது குற்றம் ஏதுமில்லை. நான்தான் இதுபோல ஒரு நாடகத்தினைச் செய்யச்சொன்னேன். முதலில் என்னைப் பொறுத்தருள்க!'' என்று பீர்பால் மிக வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

''வணக்கத்திற்குரிய பேரரசே! சற்று திரும்பிப் பாருங்கள். நாற்புறமும் கையில் ஆயுதம் ஏந்திய வண்ணம் ஆயிரம் சேவகர் நிற்கின்றனர். பேரன்புடன், உயிர்த் தோழமையுடன் உங்களுடன் நானும் வந்துகொண்டிருக்கிறேன். எவரிடமும் பேசாமல், ஆணையிடாமல், தாங்கள் வேகமாய்க் குதித்துக் குழந்தையினைக் கையிலெடுத்துக் காப்பாற்ற விழைந்தது, எங்கள் பேரில் நம்பிக்கையின்மையாலா? உங்களின் உள்ளத்தினுள் பொங்கும் கருணையும், பிறர்நலம் பேணும் தூய்மையான உயர்ந்த நோக்கமும் அன்றோ? இதைத்தான் அன்று திருமால் செய்தார். விலங்கினமாயினும் உயிருக்கு ஆபத்து என்று அறிந்தவுடன், அபயம் என்று சரணாகதி அடைந்த ஜீவனுக்கு உதவிட இறைவன் ஓடோடி வந்தார்!'' என்று பீர்பால் ஒரு போடு போட்டார்.

அக்பர் பீர்பாலை தோளோடு தோளாக அணைத்துக் கொண்டார். அவர் கண்களில் கண்ணீர்!

### வீரர்கள்



வீட்டை சுமந்து
வீடுபேறு அடையும்
வீரர்கள்!
நத்தைகள்....

கவிஞர் சுகுணன்
மணப்பாக்கம்.



வலைத்தளத்தில் ஒரு பார்வை

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# நாடென்பது மனிதர்களன்றி வேறல்ல

## கவிஞர் அல்போஃன்ஸ் தெ லமர்த்தின்

## Alphonse de LAMARTINE (1790 - 1869)

**நாகி**

லமர்த்தின் 19 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற கவிஞர், அரசியல்வாதி, ஆங்கிலக் கவிஞன் பைரன் பிரபுவின் சமகாலத்தவர். அக்டோபர் 21, 1790ல் 'மாக்கோனி'ல் (Macon) பிறந்து பிப்ரவரி 28, 1869ல் பாரீசில் இறந்தவர். லமர்த்தீன் என்ற பெயருக்குப் பின்னே அழகன், வசீகரன், கண்ணில் நீர்சுரக்கக் கவிதை பேசுபவன் என்கின்ற அடைமொழிகளுண்டு.

அவரது கவிதைகள் கற்பனை வளமும், மயக்கும் சௌந்தர்யமும் கொண்டவையெனவும், மனதில் சலனமூட்டக்கூடியவையெனவும் கொள்வோருண்டு. அதற்கு மாறாக, நெகிழ்ச்சியுடன் கூடிய இணக்கமும், பிரவாகமெடுக்கும் உணர்வும், கண்களைக் குளமாக்கும் குணமும் உடையவையெனக் கொண்டாடுவோருமுண்டு. தலைக்குக் கிரீடமோ? கழுத்திற்கு மாலையோ? எதுவென்றால் என்ன? இரண்டிற்குமான தகுதிகள் ஏராளமாக இவரிடம் உள்ளன.

பிரபுக்கள் குடும்ப அடையாளம் பிறப்பிலிருந்ததால் வறுமை அறியா இளமை. இவர் ஆறு தங்கைகளுக்குச் சகோதரன். அன்னையின் முலைப்பாலில் மொழிப்பாலுமிருந்தது. இலக்கியக் கல்வியை இயேசு சபையிடமிருந்து (Jesuites) பெற்றார். பின்னர் முதல் முறையாக இத்தாலிக்குச்

சென்று பாரீசுக்குத் திரும்பியவுடன் அக்காலத்தில் பிரஞ்சு நாடக உலகில் புகழ்பெற்றிருந்த 'தல்மா' என்கின்ற நாடகக் கலைஞருக்காக ஒரு துன்பவியல் நாடகமொன்றை எழுதினார். ஆனால் அந்நாடகம் இறுதி வரை மேடையேறவில்லை. மீண்டும் இத்தாலிக்குச் சென்றபோது, நப்போலித்தேன் நங்கையொருத்தியைச் சந்திக்க நேரிடுகின்றது அவளையே நாயகியாக உருவகித்து 'கிராஸியெல்லா'(Graziella) என்கின்ற காதல் புதினத்தைப் படைக்கின்றார். மத்தியதரைக் கடல்பகுதி மீனவப் பெண் இக்கதையின் நாயகி. கவிஞர்களுக்கேயுரிய நடை... முழுக்க முழுக்கக் கவித்துவமிக்க உரைநடை...

இங்கே பிரான்சில் அரசியல் மாற்றம். முதலாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆங்கிலேயர்களின் உதவியோடு பதவியேற்ற பதினெட்டாம் லூயி தொடக்கக் கால ஆட்சியான 'முதலாவது ஆட்சி சீரமைப்பு' (La Premiers Restauration) காலத்தின்போது இவருக்கு மெய்காப்பாளர் பணி. இலக்கியம் மீண்டும் அவரை ஈர்க்கிறது. மீண்டும் அரசியலுக்குள் நுழையும் முதலாம் நெப்போலியனின் இறுதி நாட்களில் தலைமறைவு வாழ்க்கை...

*1816* செப்டம்பரில் 'நீராவிக் குளியலுக்காக' சென்றவிடத்தில் 'பூர்ழெ ஏரிக்கரையில்' (Le lac du Bourget) சந்திக்க நேர்ந்த ஜூலி சார்ல்ஸ் (Julie Charles) என்கின்ற யணமான பெண்ணிடம் 'லமர்த்தினுக்கு' ஏற்பட்ட நெருக்கமான உறவு, அவளது எதிர்பாராத இறப்பின் காரணமாக முடிவுக்கு வந்துவிடுகிறது. இவரது அனுபவத்தின் வழித்தடமே "I Elvire du Lac" என்கின்ற கவிதை. அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட கவிதைகள் அனைத்துமே 'லமர்த்தினின்' சுய அனுபவங்கள். அப்படைப்புக்களில், கவிஞரின் மனத்துள் எழுந்த கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் அடர்த்தியாய் ஆக்ரமித்துள்ளனர். உணர்வுகள் கவிதைகளுக்கான ஊற்றுக்கண்களாக உடைத்துக் கொண்டு பீறிடுகின்றன.





*1817*ல் எழுதப்பட்ட ''ஏரி'' மற்றும் ''நித்யம்'' (le Lac et l'immortalite) *1818*ல் வெளி வந்த ''ஏகாந்தம்'' (l"Isolement), *1819*ல் எழுதப்பட்ட ''மாலை நேரம்'' (Lesoir), ''ஞாபகம்'' (le Souvenir), ''பள்ளத்தாக்கு'' (le Vallon), இலையுதிர்காலம் (L'automne) ஆகியவை, செறிந்த உணர்வுகளின் ஆழத்தை வெளிப்படுத்தும் அவரது நேர்த்தியான கவிதைகளில் அதிமுக்கியத்துவம் பெற்றவை.

ஆரம்பகாலத்தில், பாரீசிலிருந்த அப்போதைய பிரபல பதிப்பகங்கள் இவரது கவிதைகளைப் பிரசுரிக்க முன்வரவில்லை. பின்னர் *1820*ல் முதலாவது கவிதைத் தொகுப்பான 'தியானம்' (Meditations Poetiques et rellgiuses) பதிப்பிக்கப் படுகிறது. பதிப்பிக்கப்பட்ட நான்காண்டுகளில் *45000* பிரதிகள் விற்றதென்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஓர் இமாலயச் சாதனை. *1820* ஜூன் *5*ல் 'மேரி - ஆன்' என்ற ஆங்கில நங்கையை கவிஞர் மணம் புரிகிறார்.

*1823*ல் 'ஆன்மீகம் மற்றும் கவிதைகள் தியானம்' இரண்டாவது தொகுதி வெளியீடு. பிறகு வெளி வந்த கவிதைகளில் அவரின் முதிர்ச்சியைக் குறிக்கும் ஆன்மீக வெளிப்பாடு. அவற்றுள் 'சாக்ரடீசின் இறப்பு', ஹரோல்டின் புனித யாத்திரை இறுதிப் பாடல் (La Mort de Socrate, Le Dernier Chant du pelerinage de child Harold - இக்கவிதை 'கவிஞர் பைரனுக்கான' அஞ்சலி) முக்கியமானவை. இத்தாலிக்கும், புழுதிமனிதர்களுக்குமான ஒரு நிறுத்தற்குறி (Une apostrophe a i'Italie at a la ""Plussiere humaine") என்கின்ற கவிதையினால் கோபமுண்ட இத்தாலிய தளபதி ஒருவனால் கவிஞர் மோசமாகத் தாக்கப்பட, ஆபத்தான நிலையில் பிரான்சுக்குத் திரும்ப நேரிடுகிறது.

பிரான்சு மன்னனான பத்தாம் சார்லஸ் 'லாமர்த்தினை கௌரவிக்கும் பொருட்டு, படைவீரர்களுக்கு அளிக்கப்படும் மிகப்பெரிய சிலுவைப் பதக்கத்தை (La Croix de la Legion d'honneur) அளிக்கிறான். பிறகு *1829* நவம்பரில் பிரபுவாக தேர்வு செய்யப்பட்டு அரசியல் பிரவேசம்.

இத்தொடர்பு *1848* வரை நீண்டது. தன்னுடைய அரசவை பிரதிநிதித்துவ காலத்தில் இவர் ஆற்றிய உரைகள் பிரசித்தி பெற்றவை. அவற்றுள் குறிப்பாக மரண தண்டனை ஒழிப்பு, கீழ்த்திசை நாடுகள் பிரச்னை, இலக்கியக் கல்வியைப் பாதுகாக்கவேண்டிய அவசியம், சமூக நலன் உதவிகள் ஆகியவற்றுக்கான உரைகள் மெச்சத் தகுந்தவை. *1830*ல் 'இணக்கம்' (Harmonies poetiques et religieuses - 2Volumes) பதிப்பித்து வெளி வருகிறது. இத்தொகுதி 'லமர்த்தினின் கவிதைகளில் உன்னதப் படைப்புகள்.

*1832*ல் தனது மனைவி மற்றும் ஒரே மகளுடன் மேற்கொண்ட பயணத்தில், மகளை இழக்க, கசந்த அனுபவங்கள் எழுத்துகளாகப் பரி

ணமிக்கின்றன. 'கீழ்த்திசைப் பயணம்; ஞாபகங்கள், எண்ணங்கள், நினைவுகள், காட்சிகள்'' (Voyage en Orient: osuvenirs, Impressions, Pensees et paysages - 1835, 4volumes) 1836ல் வெளிவந்த 'ஜோஸ்லன்' இது மிகச் சிறப்பான கவிதைத் தொகுப்பு. இவற்றுள் உள்ள கவிதைகள் எக்காலத்துக்கும், எந்நாட்டவர்க்கும் பொருந்தக் கூடியவை. இவ் வரிசையில் தொடர்ந்து படைக்கப்பட்டதே 'தேவதூதனின் வீழ்ச்சி' (La Chute d'un ange). 1839ல் மீண்டுமொரு கவிதைத் தொகுப்பு... இத்தொகுப்புக்கான முன்னுரையில் கவிஞனின் சமூகக் கடமைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நேரத்தில் அரசியலில் இவரது கவனம் மெல்லமெல்ல பழமைவாதிகளிடமிருந்து மீண்டு சோஷலிஸ்டுகள் பக்கம் திரும்பியது. 1847ல் படைத்த 'கிரோந்தன்களின் வரலாறு' (I'Histories des Girondins) அப்போதைய ஆட்சியை ஆட்டம் காண வைத்தது. அதேசமயம் அடுத்து உருவான புதிய குடியரசு நிர்வாகத்தில் வெளிவிவகார அமைச்சருக்கான பதவி இவரைத் தேடி வருகிறது. எனினும் அடுத்துவந்த அதிபர் தேர்தலில் மிகக்குறைவான வாக்குகள் பெற அவரது அரசியல் வாழ்வு முடிவுக்கு வருகிறது. இந்தச் சூழலில் ஏராளமான கடனும் சேர்ந்துகொள்ள ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருக்கிறது.

மீண்டும் அவரது வாழ்க்கை உணர்வுள்ள கவிதைகளாக வடிவெடுக்கின்றன. 1851ல் 'ஜேன்வியேவ்' (Genevieve - ஓர் எளிய வேலைக்காரனின் தலைவிதி பற்றிய படைப்பு)., கல்லுடைப்பவன் (Le tailleur de pierrd de Saint - Point) அந்த வகையிலடங்கும் சில உதாரணங்கள். இது தவிர ஏராளமான வரலாற்று நூல்களும் இவற்றுள் அடங்கும். ஆனால் இறுதிக்காலத்தில் எழுதியவை அனைத்தும் பணத்தேவைக்காக எழுதப்பட்டவையேயொழிய, மனத்தேவைக்காக எழுதப்பட்டவை அல்ல என்பது இலக்கியவாதிகளின் விமர்சனம்.

1836ல் வெளிவந்த ஜோஸ்லின் (Jocelyn), ஜோஸ்லின் அவனது காதலி லொரன்ஸ் (Laurence) எனச் சுற்றிவரும் காதல் இலக்கியம். 8000 வரிகளைக் கொண்டு ஒன்பது பகுதிகளாலானது... ஆன்மிகத்தையும் காதலையும் உள்ளீடாகக் கொண்ட இக் கவிதைத் தொகுப்பு சமூகநலம் சார்ந்தவை. இத்தகைய பெருமை வாய்ந்த இக்கவிஞரது கவிதைகளில் ஒன்று இங்கே....

நாடோடி மனிதர்கள் (La Caravane humaine)



# நாடோடி மனிதர்கள்

நீண்டு சரிந்த நதிக்கரையை
நெருங்கி நின்ற காடொன்றில்
முகாமிட்டிடும் நாடோடிக் கும்பலொன்று

கருவாலி மரங்கள்
பயணம் தொலைந்த மனிதரை
வாயுவும் ஞாயிறும் வாட்டாமற் காத்திடும்:

கயிற்றைக் கிளைகளிற் பிணைத்து
கட்டியெழுந்த கூடாரங்கள்,
சிற்றூர், பேரூராய் மரத்தடிகளில்
எட்டிப் பெருகிட,
நிழல்தேடி அடர்ந்த புல்வெளிகளில்
அமர்ந்து, உண்டு
அமைதியாய்ப் பேசிடும் மனிதர்.

கணத்தில், சினமென்னும் குன்றேறிநின்று
கோடரி வீசிட காலடிவீழும்
கூடுகள் நிறைந்த கதியற்ற மரங்கள்!
மரவளை தோண்டும் விலங்கும்
மரக்கிளை நீங்கும் பறவையும்
அழிவைக்காண, அச்சம் விழிகளில்...

விளங்காச் செயலை இதயம் சபித்திடும்.
மூட மனிதர்,
அவரழிவைத் தேடும் மனிதர் இருட்டில் மூழ்கிட
வான்வரை அழிப்பர்!
இவர்களது இரவுக்காக மரங்களில்
உறைந்த உயிர்கள் இரக்கம் காட்டின!
இயற்கை நியதியால் அமைதி காத்தன!

ஆழ்குழிமுழுக்க மரங்களையெறிந்து
அழிவுப் பாதை தொடர்ந்திடும் மனிதன்
வீழ்ந்து கிடக்கும் மரங்களினூடு
சூழ்ந்து கடக்கும் நதி....

அமைதியாய்த் தொடர்ந்திடும் நித்தியப்பயணம்...
நாடோடிமனிதர்களின் வெற்றியில்
மற்றுமொரு நதிக்கரை

(Alphones de Lamartine, Jocelyn (Huiteme epoque)

ராயர் காப்பி கிளப் இணையத்திலிருந்து தொகுத்தவர் - கவியோகி வேதம்

கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம்

# பாரசீக மொழியில் பாரத உபநிடதங்கள்

**தா**ரா - ஷாஜஹானின் மூத்த மகன் - உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தான். இது பல பிரதிகள் எடுக்கப்பட்டு, இந்தியாவிலும், மேல்நாடுகளிலும் உள்ள அரச அவைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் அதைப் படிப்பவர் மிகச்சிலரே.

ஷாஜா உத்தௌலாவின் அரசவையில் இருந்த ரெஸிடெண்ட், தாராவின் உபநிடங்களின் மொழியாக்கத்தை வெளியுலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதைப் படித்தவர்கள் வியந்தனர். பலர் மொழியாக்கத்தில் ஈடுபட்டனர். பிரெஞ்சு மொழியிலும், லத்தீன் மொழியிலும் இவை மொழியாக்கம் செய்யப்பட்டன.

ஷாஜஹானின் மகன் தாரா உபநிடதங்களை பாரசீகத்தில் மொழியாக்கம் செய்து மத்திய ஆசியாவிற்கும் - குறிப்பாக ஈரானுக்கும் அனுப்பியது கி.பி.1657-இல். இது பிரெஞ்ச் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர்தான், தாராவின் பாரசீக மொழிபெயர்ப்பை ஈரான் கி.பி.1960-இல் அச்சிட்டு வெளியிட்டது.

காந்தார நாட்டின்மீது படையெடுத்த தாரா பல மாதங்கள் போரிட்டு தோல்வியைத் தழுவினான். அதனால் அவன் மனம் ஆழமாகப் புண்பட்டது. அமைதியை இழந்தான்.

தாராவின் அரசியல் ஆலோசகர் முன்ஷி சந்திரபானு என்பவர்! தாரா சூபி கொள்கையில் ஆழ்ந்த பற்று உடையவன். சந்திரபானு, தாராவை லாகூருக்கு அழைத்துச் சென்று பைராகி சந்த பாபாலாலை அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் ஒரு வாரம் ஆன்மிக விஷயங்களைப் பற்றி விவாதித்தனர். இந்த விவாதங்கள் எல்லாம் பாரசீக மொழியில் எழுதப்பட்டுள்ளன. தாராவின் மனம் அமைதியடைந்தது. அவன் பாரத ஆன்மிக நூல்களைப் படிக்கத் தொடங்கினான். டெல்லிக்குத் திரும்பிய அவன் காசிக்கு தூதுவர்களை அனுப்பி பல சம்ஸ்கிருத புலவர்களை அழைத்துவர ஏற்பாடு செய்தான். உபநிடதங்களையும், பாரதத்தின் ஆன்மிக சாத்திரங்களையும் அந்தப் புலவர்களிடம் இருந்து ஆழமாகப் படித்தறிந்தான்.

தாரா முதலில் பாரசீக மொழியில் ஒரு புத்தகம் எழுதினான். அதன் பெயர் 'மஜ்மா உல் - பஹ்ரைன்' என்பது. 'இரண்டு கடல்களின் சங்கமம்' என்பது இதன் பொருள்.

தாரா இந்தப் புத்தகத்தில் இஸ்லாம், இந்து மதம் இவைகளின் சித்தாந்தங்களை விளக்கி இரு மதங்களினிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அகற்ற முயன்றான். இதில் ஒத்த கருத்துள்ள கலைச் சொற்கள் அதிகமிருந்தன. இரண்டு மதங்களிலும் உள்ள கொள்கைகளின் குறைபாடுகள் - வித்தியாசங்களைக் குறைப்பதற்கு முயன்றான்.



இந்தப் புத்தகத்தால் இஸ்லாமிய பிடிவாதக் கொள்கை உடையவர்கள் வெகுண்டனர். தாராவின் உயிருக்கு விலை பேசப்பட்டது. ஔரங்கசீப் இந்தப் புத்தகத்தைத் தனக்கு ஆயுதமாகக் கொண்டான். எதற்கு? தாராவைக் கொல்வதற்குத்தான்! ஆனால் தனது முயற்சியில் அவன் தோல்வியுற்றான். இது நடந்தது கி.பி. 1655-இல். இரண்டு ஆண்டுகள் பாரத நாட்டின் உபநிடதங்களை ஆழமாகப் படித்த தாரா, அவற்றை பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தான். இந்த மொழியாக்கத் தொகுப்பில் முதன்மை வகிப்பவை 12 உபநிடதங்கள். ஆயினும் அவன் மொழியாக்கம் செய்த உபநிடதங்கள் மொத்தம் 52. உபநிடதங்களைப் பற்றி, பாரசீக மொழியில் 'அல்பகூனி' என்பவர் இதற்கு முன்னரே எழுதியிருந்தார். ஆயினும் அவை முழுமை பெறாதவை.

தாராவின் மொழியாக்கம் தனது மதத்தைச் சார்ந்தவர்களின் மனத்தில் கொள்கை முரண்பாடுகளைக் குறைக்கவும், ஒத்த கருத்தை உண்டாக்கவும் முயன்றது. தாராவின் பாரசீக மொழியாக்கம் மேனாட்டு மத்திய ஆசிய நாட்டு ஆன்மிகத்தினிடையே பாலமாக அமைந்தது. இதன்மூலம் பாரத நாட்டின் ஆன்மிகக் கொள்கைகள் மத்திய ஆசியாவிலும் மேலை நாடுகளிலும் சென்றன.

இதற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் பிரான்ஸ் நாட்டு அறிஞர் ஆகுதீல்து - பைரி என்பவர் பாரத நாட்டிற்கு வந்தார். அவர் பாரசீக மொழியில் நல்ல புலமையுடையவர். பார்சிகளின் புனித நூலான 'ஜிந்த அவேஸ்தா'வைத் தேடி அலைந்தார்.

ஷுஜா உத்தௌலாவின் அரச அவையில் இருந்த பிரிட்டிஷ் ரெசிடெண்ட் (ராஜ தூதன்) இங்குதான் 'ஆகுதில் - து - பைரிக்கு தாராவின் உபநிடத மொழியாக்கத்தைத் தந்தார்.

ஸீதி பாத்ஹிந்திவார இதழிலிருந்து (பூனா)
தமிழில் : தியாகி டி.எஸ். ராஜூ சர்மா



46272

சென்ற இதழ் தொடர்ச்சி

# ஸ்ரீபத்மநாபனுக்கு சமர்ப்பணம்

**தமிழில் செங்கோட்டை ஜனார்த்தனன்**
கட்டுரையும் படங்களும் : மலையாள மனோரமா

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்துதான் மூன்றுவேளையும் உணவருந்துவோம். தரையில் அமர்ந்து உண்பதுதான் வழக்கம். வாழையிலைகளைத்தான் பயன்படுத்துவோம். இரண்டு இட்லி, பகவானுக்குப் படைத்த நைவேத்தியத்தில் ஒருசிறு பகுதி, ஒரு டம்ளர் பால். இவைதாம் எங்கள் காலை உணவு. காலையில் பூஜையுண்டு. பூஜை நைவேத்தியம் போன்றவைக்கு நான்தான் பொறுப்பு. வெள்ளியில் செய்த ஸ்ரீபத்மநாபனின் சிறிய விக்கிரஹமொன்று உண்டு. அதை ஐரோப்பா தவிர வேறு எங்கு சென்றாலும் உடன் கொண்டு செல்வேன். ''இந்தச் சிலை விற்பதற்கா?'' என்றுகூடச் சிலர் என்னிடம் கேட்டதுண்டு. காலையில் பூஜையை முடிக்காமல் தண்ணீர்கூடக் குடிக்கமாட்டேன்.

மாலையில் படிப்பு முடிந்ததும் குதிரைகள் பூட்டிய சாரட்டில் கிளம்பி விடுவேன். திரும்பி வந்ததும் ஃபுட்பால் அல்லது ஹாக்கி விளையாட்டு. கிரிக்கெட் தவிர மற்ற விளையாட்டுக்கள் அனைத்தும் தெரியும். மாலை ஆறுமணி வரை விளையாடுவேன். அதன்பின் ஜெபமும் தியானமும், மகாராஜாவும் நானும் ஒன்றாக அமர்ந்துதான் ஜெபம் செய்வோம்.

அரச குடும்பத்தினர் அரண்மனையில் பணியாற்றும் பணியாளர்களிடம் அன்புடன் பழக வேண்டும் என்பது எங்கள் குடும்பத்தில் எழுதப்படாத ஒரு சட்டமாக இருந்தது. எனக்கு அப்பொழுது பத்து வயது. என் தேவைகளை எல்லாம் கவனிப்பதற்கென ஒரு வேலையாள் இருந்தார். நாராயணன் என்று பெயர். பல ஆண்டுகளாக அரண்மனையில் பணியாற்றி வருபவர். ஒரு நாள் அவர் செய்த ஏதோ ஒரு காரியம் எனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக முன்பின் யோசிக்காமல் அவரை அடித்து விட்டேன். நிலைகுலைந்து போன அவர் எதுவும் பேசாமல் சென்று விட்டார்.



மறுநாள் என் சகோதரர் ஸ்ரீசித்திரைத் திருநாள் மகாராஜா என்னை அழைத்து வரும்படி ஆளனுப்பினார். என் படிப்பைப் பற்றியும் விளையாட்டுகள் பற்றியும் விசாரித்தார். பதிலளித்தேன்.

அதன்பின் என்னை நோக்கிக் கேட்டார்.

''சரி. அதன்பின் என்ன நடந்தது?''

''ஒன்றும் நடக்கவில்லை.''

''ஒன்றுமே நடக்கவில்லையா? யோசித்துப் பார்.''

''எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. நாராயணனை அடித்த செய்தி அவர் காதிற்கு எட்டியிருக்கிறது. மிகுந்த தயக்கத்துடன் கூறினேன்.

''நாராயணனை... அடித்து விட்டேன்.''

மகாராஜா அருகிலிருந்த பெல்லை அழுத்தினார். அரண்மனை நிர்வாகத்தைக் கவனிக்கும் காரியக்காரர் வந்தார்.

''நம் கவடியார் அரண்மனையில் இப்பொழுது எத்தனை வேலையாட்கள் உள்ளனர்?''

''முந்நூறுபேர், மகாராஜா.''

''எல்லோரையும் இங்கு அழைத்து வாரும்.''

அனைவரும் வந்து இரு வரிசைகளாக நின்றனர். எல்லோருக்கும் முன்னால் நாராயணன்!

மகாராஜா என்னை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள அறைக்குள் சென்றார். பின் பேசத் தொடங்கினார்.

''இதோ பார். நீ செய்தது மிகப் பெரிய தவறு. வயதில் மூத்தவரைக் காரணமின்றி அடித்திருக்கிறாய். நேராக நாராயணனிடம் சென்று மன்னிப்புக் கேள்.''

அரண்மனைப் பணியாளர்கள் அனைவர் முன்னிலையிலும் வைத்து நாராயணனிடம் நான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டேன். அதில் எனக்கு எத்தகைய அவமானமும் தோன்றவில்லை. மாறாக, நான் ராஜ குடும்பத்தைச் சார்ந்தவன், இளைய மகாராஜா எனும் அகந்தை என்னிலிருந்து முற்றிலும் நீங்க இந்த நிகழ்ச்சி எனக்கு உதவியது எனலாம்.

என் சகோதரர் ஸ்ரீசித்திரைத் திருநாள் மகாராஜா இயல்பாகவே மிக மென்மையானவர். அவர் கோபப்பட்டு நான் பார்த்ததில்லை. இருப்பினும் வைராக்கியமும் கண்டிப்பும் மிக்கவர். எதைப் பற்றியாவது அவர் ஒரு முடிவிற்கு வந்து விட்டால் பின் எதுவரினும் அதிலிருந்து பின்வாங்க மாட்டார். அவரெடுத்த முடிவை யாராலும் மாற்றவும் முடியாது. நான் அவரிடம் மிக நெருங்கிப் பழகுபவன். தமது பன்னிரெண்டாவது வயதில் ராஜ்யபாரத்தைச் சுமக்கத் தொடங்கியவர் அவர். எனவே வாழ்க்கையிலும் நடையுடை பாவனையிலும் அவர்

ஒரு கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததில் வியப்பொன்றும் இல்லை.

மகாராஜா ஷாப்பிங் போவதில்லை. தனிப்பட்ட முறையில் யாருடைய வீட்டிற்கும் செல்வதில்லை. இத்தகைய சில கட்டுப்பாடுகள் உள்ளன. அதிகாலை 5.30-க்கு எழுந்திருக்க வேண்டும். ஸ்ரீபத்மநாபனை மனதிற்குள் வணங்கியபடி படுக்கையிலிருந்து வலது பக்கமாக எழுந்திருக்க வேண்டும். பின், முதலில் வலது காலை எடுத்து வைக்க வேண்டும். இரு கால்களையும் பூமியில் வைத்ததும், ''பாதஸ்பர்சம் க்ஷமஸ்வமே'' என மனதிற்குள் கூற வேண்டும். காலைக் கடன்களை முடித்து வந்தபின் நின்று கொண்டுதான் காபி குடிக்க வேண்டும். இதன்பின் வழக்கம்போல் மற்ற காரியங்களில் ஈடுபடலாம்.

அந்த நாட்களில் மகாராஜா வெளியே செல்லும்போது பைலட் கார் என எதுவும் முன் செல்வதில்லை. ஒருமுறை மகாராஜா அம்மமகாராணி, சகோதரி, நான் ஆகியோர் சற்று தொலைவிலுள்ள வேளி எனுமிடத்திற்குப் பயணமானோம். மகாராஜாவே காரை ஓட்டினார். அந்த நாளில் வேளி எந்தவித பரபரப்புமின்றி அமைதியாக இருந்தது. அன்றெல்லாம் அங்கு மனித நடமாட்டம் குறைவாக இருக்கும். நாங்கள் அங்குச் சென்ற சிறிது நேரத்தில் அங்குள்ள காய

திருத்தம்

சென்ற மாத ஸ்ரீபத்மநாபனுக்கே சமர்ப்பணம் கட்டுரையில்,

பக்கம் 38 - 4வது பத்தியில்

இதுதான் வணங்கும் கோயில் என்று உள்ளது. அதை இது நான் வணங்கும் கோயில் எனத் திருத்தி வாசிக்கவும்.

பக்கம் 39 இல் கடைசியில்...

I request that I have offended ... என உள்ளது. இவ்வாக்கியத்தின் தொடக்கம் I regret that I have offended... என இருக்க வேண்டும்.

லில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு ஒரு படகு சென்று கொண்டிருந்தது. எனக்கோ அப்படகில் ஏறிப் பயணம் செய்ய வேண்டுமென்ற அடங்காத ஆசை. இதையறிந்த மகாராஜா அந்தப் படகோட்டியைக் கைதட்டி அழைத்தார். படகோட்டி திரும்பிப் பார்த்தான்.

''பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல் தெரிகிறது. அருகில் கார் வேறு நிற்கிறது. சரி. போய்த்தான் பார்ப்போமே!'' என எண்ணியிருப்பான் போல் தெரிகிறது. தயக்கத்துடன் படகை கரைக்குக் கொண்டு வந்தான்.

மகாராஜா அவனிடம் கூறினார்.

''இவன் படகிலேறி சவாரி செய்ய ஆசைப்படுகிறான்.



இவனை ஏற்றிக் கொண்டு இக்காயலில் ஒரு வட்டம் அடிக்கலாமா?''

''நான் சரக்குகளுடன் கொல்லத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நாளைக்குள் நான் அங்குச் சென்று சேராவிட்டால் முதலாளி என் சீட்டைக் கிழித்து விடுவார். நீங்களோ ''குழந்தை ஆசைப்படுகிறான்'' என்கிறீர்கள். குழந்தையின் ஆசையைக் கெடுக்கக்கூடாது என்பார்கள். சரி. ஏறுங்கள்'' என்றான். மகாராஜாவும் நானும் ஏறிக் கொண்டோம்.

படகு நகர்ந்தது. படகுக்காரன் தன் குடும்பப் பிரச்னைகளையும் கஷ்டங்களையும் கூறிக் கொண்டே வந்தான். திடீரென என்ன தோன்றியதோ அவன் கேட்டான்.

''சார் எங்கிருந்து வருகிறீர்கள்?''

''கவடியார் அரண்மனைக்குப் பக்கத்தில்தான் வீடு.''

''அப்படியானால் சாருக்கு மகாராஜாவையெல்லாம் தெரிந்திருக்கும்.''

'தெரியாதென்று சொல்ல முடியாது. கொஞ்சம் பழக்கமுண்டு.''

''சார், எனக்கு ஒரேயொரு ஆசை. சொந்தமா ஒரு படகு வாங்கணும். ரொம்ப நாளா உள்ள ஆசை.''

''அப்படியா, அதற்கு எவ்வளவு ஆகும்?''

''ஒரு முந்நூறு ரூபாய் இருந்தா போதும், சார்!''

மகாராஜா பேசாமலிருந்தார். நாங்கள் போகின்ற இடத்திற்கெல்லாம் பணத்துடன் செல்வதில்லை. உண்மையைச் சொல்வதென்றால் அன்று அந்தப் படகோட்டிக்கு சந்தோஷத்துடன் சன்மானம் கொடுக்க எங்களிடம் ஒரு ரூபாய் கூட இல்லை!

படகை விட்டு இறங்கும் போது மகாராஜா கூறினார். ''நீர் கொல்லத்திற்குப் போய்விட்டுத் திரும்பும்போது அரண்மனைக்கு வாரும். ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்.''

இரண்டு நாட்களுக்குப்பின் மகாராஜா வழக்கம் போல் காலையில் ஸ்ரீபத்மநாபனைத் தரிசனம் செய்யப் புறப்பட்டு வெளியே வந்தபோது படகுக்காரன் அரண்மனைக் காவலாளியிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்.

மகாராஜா, டிரைவரிடம், காரை வாசலிலிருந்து சற்று தள்ளி நிறுத்துமாறு கூறினார். பின் தன் எ.டி.ஸியை அழைத்து, கேட்டிற்கு வெளியே நிற்கும் ஆளை உள்ளே அழைத்துச் சென்று உணவளிக்கும்படி கட்டளையிட்டார். எ.டி.ஸியைக் கண்டு படகோட்டி பயந்தான். வந்திருப்பதோ அரண்மனைக்கு, அழைத்துச் செல்வதோ போலீஸ். அன்று பார்த்த

ஆள் தன்னை வம்பில் மாட்டிவிட்டாரோ என்ற பயம் அவனுக்கு. வேறுவழியின்றி நடுங்கியபடி எ.டி.ஸியுடன் சென்றான்.

மகாராஜா ஆலயத்திற்குச் சென்று திரும்பினார். படகுக்காரனை அழைத்து வரும்படி உத்தரவாயிற்று. அப்பொழுதுதான் அவனுக்கு அன்று தன் படகிலேறியது வேறு யாருமல்ல, மகாராஜாவேதான் எனும் உண்மை தெரிந்தது. நடுங்கிய வண்ணம் தொழுது நின்றான். மகாராஜா அரண்மனைக் காரியக்காரரை அழைத்து அவனுக்கு ஐந்நூறு ரூபாயும் வேஷ்டியும் நேரியலும் கொடுக்கும்படி உத்தரவிட்டார். மதியவுணவு அளித்தபின் அனுப்பினால் போதும் என்றார்.

என்னோடு பழகியவர்கள் மட்டுமல்ல, முன்பின் தெரியாதவர்கள் கூட என்னிடம் காட்டும் அன்பும் பரிவும் பலமுறை என்னை நெகிழச்செய்துள்ளன.

மண்டல பூஜையன்று சபரிமலை சாஸ்தாவைத் தொழ வேண்டுமென்று விரும்பினேன். நான் அவ்வாறு விரும்பியிருக்கக் கூடாது. லட்சக்கணக்கான மக்கள் கூடும் இடத்தில் ராஜ குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குரிய சில தனிப்பட்ட ஆசாரங்களை எதிர்பார்க்க முடியாது; கூடாது. கேரளத்தில், அரச குடும்பத்தினர் ஆலய வழிபாட்டிற்குச் செல்லும்போது குளித்து படுசுத்தமாக யாரையும் தொடாமல் சென்று தொழவேண்டு





மென்பது பண்டுதொட்டே கடைபிடிக்கப்பட்டு வரும் ஒரு வழக்கம்.

நான் மண்டல காலத்தில் சென்றிருந்தபோது ஜோதி தரிசனத்திற்காக லட்சக்கணக்கான மக்கள் அங்குக் குழுமியிருந்தனர். அவர்கள் இருவரிசைகளில் நின்று என்னைத் தொடாமலேயே ஜோதி தரிசனம் செய்தனர். யாரும் அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கவில்லை. இது அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடு. ''அவருடைய ஆசாரமிது. எனவே அவரைத் தொடாமல் மாறி நிற்போம்'' எனக் கூறிக் கொண்டு எனக்கு வழி விட்டனர். அதில் யாருமே குற்றங் காணவில்லை.

1956-ல் நானும் என் மனைவியும் ஐரோப்பா சென்றிருந்தோம். சுவிட்சர்லாந்திலுள்ள ''கோ'' எனுமிடத்தில் எம்.ஆர்.எ. நிறுவனத்தின் தலைமையகம் உள்ளது. 1500 அறைகளுள்ள ஒரு மிகப்பெரிய அரண்மனை. நாங்கள் சென்றபொழுது அசெம்பிளி நடந்து கொண்டிருந்தது. 700 பேர் இருந்தனர். உலகின் பல பகுதிகளிலுமிருந்து வந்தவர்கள். பலமொழிகள் பேசுபவர்கள். பாரசீகத்து ஷாவின் தந்தையுட்பட பலர் வந்திருந்தனர். ஃப்ராங் புக்மேன் என்பவர் உருவாக்கிய மாளிகை அது. பொருட்களை வாங்குவது, சமைப்பது, பரிமாறுவது போன்ற அனைத்தையுமே அங்கிருந்த உறுப்பினர்களே செய்தனர்.

நானோ சுத்த சைவம். காபி, டீ கூட அருந்துவதில்லை. சாப்பிட உட்கார்ந்தபோது பரிமாறுபவரிடம் நான் கேட்டேன் -''நண்பரே! நர்ன் சுத்த சைவம். நான் உண்ணக் கூடாத அயிட்டம் ஏதாவது இதில் உள்ளதா?'' அவரோ பதில் பேசாமல் சிரித்தவாறே பரிமாறிக் கொண்டிருந்தார்.

நான் மீண்டும் என் கேள்வியைத் தொடர்ந்தேன். அவர் கூறினார்:

''நண்பரே! உங்கள் கேள்விக்கு இடமேயில்லை. இன்று இந்தக் கட்டடத்திற்குள் ஒரு முட்டையைக்கூட நாங்கள் உடைக்கவில்லை.''

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். அனேகமாக எல்லோருமே ஐரோப்பியர்.

''இன்று என்ன விசேஷம்? எல்லோரும் சைவத்திற்கு மாறி விட்டீர்கள். ஏதாவது விரதமா?'' - நான் கேட்டேன்.

''இன்று இங்கு ஒரு சிறப்பு விருந்தினர் வந்துள்ளார். அவரைக் கௌரவிப்பதற்காக இன்று எல்லாமே சைவ உணவுதான்!''

''யாரவர்?''

''வேறு யார்? தாங்கள்தான்!''

பிரமித்துப்போன என்னால் பேச முடியவில்லை. எழுநூறு பேர் இங்கு தாங்கள் வழக்கமாக உண்ணும் மாமிச உணவைத்

தவிர்த்து எனக்காக அவர்களுக்கு விருப்பமில்லாத உணவு வகைகளை உண்டனர். என்னால் என்றுமே மறக்க முடியாத நிகழ்ச்சி இது.

நம் வாழ்வில் மிக நெருக்கடியான ஒரு வேளையில் திடீரெனத் தோன்றி நமக்கு மிகப் பெரிய உதவி ஒன்றைச் செய்துவிட்டு, நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல், தான் யாரென்று கூடக் கூறாமல் செல்பவர்களும் உள்ளனர். ஒரு முறை மகாராஜா பங்களூரில் இருந்தார். உடனடியாக பங்களூர் வரும்படி எனக்குச் செய்தி வந்தது. மிகவும் அவசரம் எனத் தெரிவித்திருந்தார். அன்று திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட வேண்டிய விமானத்தில் ஏதோ இயந்திரக் கோளாறால் அந்த விமானம் புறப்படவில்லை. கொச்சி சென்று வேறு விமானத்தைப் பிடிக்க வேண்டும். எனவே காரில் கொச்சிக்குச் சென்று கொண்டிருந்தபோது என் கார் ஒரு லாரியின் மீது மோதியது. என் டிரைவரும் கிளார்க்கும் படுகாயமடைந்தனர். செய்வதறியாமல் நடுரோட்டில் நான் திகைத்து நின்றேன்.

திடீரென முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் ஒரு அம்பாசிடர் காரை என் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார். ''மகாராஜா வண்டியில் ஏறுங்கள்'' என்றார். டிரைவரையும் கிளார்க்கையும் அருகிலிருந்த ஒரு மருத்துவமனையில் சேர்த்தபின் என்னை அங்கிருந்த ஒரு பங்களாவில் தங்க வைத்தார். யார் அந்த நல்ல மனிதர்? தெரியாது. எதையும் கூறாமல் சென்றுவிட்டார். நாங்கள் இப்பொழுது நாட்டை ஆளவில்லை. எந்தப் பதவியிலும் இல்லை. இருந்தும் மக்கள் எங்களை நேசிக்கிறார்கள். இந்த அன்பை, இந்தப் பரிவை நாங்கள் இழந்துவிடக்கூடாது என்பதுதான் இப்பொழுது எங்கள் பிரார்த்தனை.

அரசாட்சி என்பதை மூன்றாகப் பிரிக்கலாம். அரசன், தான் விரும்பிய வண்ணம் யாரிடமும் ஆலோசனை கேட்காமல் ஆட்சி செய்வது முதல் பிரிவு. அமைச்சர் அல்லது திவானிடம் ஆலோசனை நடத்திய பின், தன் முடிவிற்கு ஏற்ப ஆட்சி நடத்துவது இரண்டாவது பிரிவு. அமைச்சர் நாட்டை ஆள அரசன் ரப்பர் ஸ்டாம்பாக இருப்பது மூன்றாவது வகை.

திருவிதாங்கூரைப் பொறுத்தவரை, திவானுடன் ஆலோசனை நடத்தியபின் மகாராஜா எதை நினைத்தாரோ அதை நடைமுறைப்படுத்திய அரசாட்சியாக இருந்தது. இந்நாட்டின் செம்மையான அரசாட்சிக்கு உறுதுணையாக நின்றவர்களுள் முதன்மையானவர் திவான் சுப்பிரமணிய ஐயர். தொடர்ந்து வந்த ஆஸ்டின், ஹபிபுல்லா,



சர்.சி.பி. போன்றவர்களும் மிகச் சிறப்பாகப் பணியாற்றினர்.

திவான் வாரத்தில் இரண்டு நாள்கள் கண்டிப்பாக மகாராஜாவைச் சந்தித்தாக வேண்டும். திவான் வந்து சென்ற மறுநாள் தலைமைச் செயலாளர் வருவார். திவான் கூறிய செய்திகளிலுள்ள உண்மைநிலையை அறிவதற்காக ஏற்பட்டதுதான் இந்த தலைமைச் செயலாளரின் சந்திப்பு.

ராமபிரான் அயோத்தியை ஆண்டபோது, அவர் ஒரு செய்தியை முழுமையாக நம்புவதற்கு முன்பாக அச்செய்தி உண்மையானதா என்பதை ஏழு உளவாளிகள் உறுதி செய்ய வேண்டும். அதன்பின்தான் அது சம்பந்தமாக உத்தரவு பிறப்பிப்பாராம். மக்களின் நன்மைக்காகச் செய்யும் காரியங்களில் எத்தகைய தவறும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்கான முன்னேற்பாடு. இன்றைய மொழியில் கூறுவதென்றால் இம்முறையினை, Constitutional Monarchy எனலாம்.

திருவிதாங்கூரில் அன்று சட்டமன்றம் இருந்தது. முறையான நிர்



வாக அமைப்பு ( Administration) இருந்தது. திவான் பரிந்துரை செய்வார். மன்னர் அதனை ஏற்று உத்தரவு பிறப்பிப்பார். மகாராஜாவின் அனுமதியின்றி திவான் தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது. எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. ஏதாவது ஒரு முக்கிய காரணம் கருதி திவானின் பரிந்துரையை மகாராஜா ஏற்க மறுத்தால் அதன்பின் திவானுக்கு ராஜினாமா செய்வதுதவிர வேறு வழியில்லை. ராஜினாமா செய்துவிட்டு பெட்டி படுக்கையுடன் கிளம்பிவிட வேண்டும் என்பதுதான் அதற்குப் பொருள்.

அசெம்பிளி மெம்பராவதற்கு லட்சாதிபதியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சொந்தமாகச் சிறிதுநிலம், சமுதாயத்தில் ஓரளவு மதிப்பினைப் பெற்றவராக இருக்க வேண்டும். அவ்வளவுதான். நாகரிகமாகப் பேசத் தெரிய வேண்டும். இது முக்கியம். அசெம்பிளியில் இரண்டு விஷயங்களைப் பற்றி விவாதம் செய்யக்கூடாது. ஒன்று ராணுவம். அது அன்று மத்திய சர்க்காரின் கீழ் இருந்தது. மற்றொன்று மகாராஜாவை விமர்சிக்கக் கூடாது. வேறு எதைப்பற்றி வேண்டுமானாலும் விவாதிக்கலாம். இருப்பினும் அதுபற்றி மகாராஜா எடுக்கும் முடிவே இறுதியானது.

பள்ளிவாசல் மின்திட்டத்திற்குத் தேவையான பொருட்களை கே.பி.பி. மேனன் மூலம் அமெரிக்காவிலிருந்து வரவழைத்தனர். மண்ணின் தரத்தைப் பற்றிய தொழில் நுட்ப அறிவு மேம்படாத காலம் அது. ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு பவர்ஹவுஸ் கட்டினார்கள். வேலை பாதி நடந்து கொண்டிருந்தபோதே பாரம் தாங்காமல் கட்டடம் பூமிக்குள் இறங்கியது. ஆறு லட்சம் வரை அரசுக்கு நஷ்டம். அசெம்பிளியில் இது பற்றிக் கேள்வி எழுந்தது. "கே.பி.பி.மேனனை உடனே வீட்டிற்கனுப்புங்கள்" என பலரும் பேசினர்.

கே.பி.பி.மேனன் பொருட்கள் வாங்க அமெரிக்கா சென்றபோது, இயந்திரங்களை விற்ற அமெரிக்கக் கம்பெனி அவருக்கு 1000 டாலர் இனாமாகக் கொடுத்தது. மேனன் அந்தத்தொகையை டிராஃப்டாகப் பெற்றுக் கொண்டார். இங்கு வந்ததும் அந்தத் தொகையை அவர் அரசிடம் ஒப்படைத்து விட்டார். அத்தகைய நேர்மையாளர் மேனன். இவரை வீட்டிற்கனுப்ப வேண்டும் என்றனர் உறுப்பினர்கள்.

இத்தகைய நேர்மையாளரை வீட்டிற்கு அனுப்ப மகாராஜா விரும்பவில்லை. "யாருக்கும் தவறு நேரிடலாம். அது இயற்கை. மேனன் வேண்டுமென்றே செய்த தவறல்ல இது. எனவே, இனிமேல் எதிர்காலத்தில் இத்தகைய தவறு நேரிடாமல் கவனமாக இருக்கும்படி அவரை எச்சரித்தால் போதுமானது" என்று கூறி அப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் மகாராஜா.

● அடுத்த இதழில் முடியும்



# பதவிக் கைதி

டிரான்ஸ்பர் - புதுடெல்லிக்கு. இந்த இடத்திற்கு மாறுதலாகி வந்து மூன்று வருடந்தான் ஆகிறது. இதற்குப் பயந்துதான் சென்ற மாதமே தாயாரின் கான்ஸர் சிகிச்சைக்கான சான்றிதழ்களோடு மனு ஒன்றை அனுப்பி இருந்தான் கௌதமன்.

அந்த ஆர்டரை மடித்து இன்ஸ்பெக்ஷன் பெட்டியில் போட்டான். ஓட்டுநர் வந்து சல்யூட் அடித்துவிட்டு பெட்டியை எடுத்துப் போய் காரில் வைத்தான்.

ஏ.ஸி. காரிலும் வியர்த்தது. அவன் சிறுவனாக இருந்தபோது, அப்பா, கிணற்றில் தவறி விழுந்து பிணமாக மிதந்தார். அந்த அதிர்ச்சி, போலீஸ், போஸ்ட்மார்ட்டம்.... கெடுபிடிகள் அம்மாவை மிகவும் பாதித்தது.

எங்கே தனது ஒரே வாரிசும் அகால மரணமடைந்து விடுவானோ என்று பயந்து, பயந்து வளர்த்தார். அவரது பயத்திற்கு எண்ணெய் வார்த்தாற் போல ஒரு சோதிடனும், "கௌதமனுக்கு வெளி மாநிலத்தில் தான் மரணம்" என்றார்.

இந்த நேரம் பார்த்து கௌதமனுக்கு, மைய அரசில் அதிகாரியாக தேர்வு செய்யப்பட்டு ஆர்டர் வந்தது. டெல்லியில் வேலை என்றதும் அம்மா கண் கலங்கினார்.

டிரைனிங் முடிந்தவுடன் தென்னாட்டிற்கு மாறுதல் பெற்று வர முடியுமென்று விளக்கியதும், சற்று சமாதானமடைந்தார்.

பெட்டி, தோல் பையுடன் ரயில்வே பிளாட்பாரத்து இரைச்சல்,



பூங்குருநல் அசோகன்

ஜன நெரிசல், பரபரப்பைப் பார்த்ததும், ''இந்த வேலை வேண்டாம் கௌதம். டெல்லி போகவே இரண்டு நாள் ஆகுமாம். என்னை விட்டு இவ்வளவு தொலைவு போக வேண்டுமா?'' - என்று அழத் தொடங்கினார்.

அம்மாவைத் தேற்றுவதற்குள் ஸிக்னல் விழுந்து விட்டது. விசிலடித்தபடி கார்டு, டிரைவரை நோக்கி பச்சைக் கொடி ஆட்டினார். அம்மா அழ... கதறிக் கதறி அழ, பதினைந்து ஆண்டுகளுக்கு முன் டெல்லி பயணமானான். அங்குள்ள அதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுத்து, தென்னாட்டிற்கு வந்து பதிமூன்று ஆண்டுகள் ஓடி விட்டன. மீண்டும் டெல்லி - அதுவும் அம்மாவின் ஆயுளுக்கு மருத்துவர்கள் நாட்கள் குறித்துவிட்ட நிலையில்.

இந்த அரசாங்கத்திற்கு நேர்மையானவர்கள் இளிச்சவாயர்கள். லஞ்ச ஒழிப்புத் துறையில் திறமையாக செயலாற்றி ஒன்பது பேரை வீட்டுக்கு அனுப்பி என்ன பிரயோசனம்? மூன்று ரீஜினல் அலுவலகங்களைத் திறந்து, பல நிர்வாகக் கமிட்டிகளில் மாடாய் உழைத்து, ஏற்றுமதியாளர் கருத்தரங்கு - வெளி நாட்டினருடன் தொழில் நுட்ப விளக்கவுரை... என்று ஓடாய்த் தேய்ந்து என்ன பலன்? பெற்ற தாயை உடனிருந்து உயிர் காக்க முடியாத வேலை ஒரு வேலையா?

இன்ஸ்பெக்ஷன் இடம் வந்து விட்டது. கதவைத் திறந்தபடி ஏற்றுமதியாளர் ஜார்ஜ் நின்றிருந்தார்.

''என்ன ஸார் டிரான்ஸ்ஃபராமே!''

தனது மாறுதல் இவருக்கெப்படி... என்று யோசிப்பதற்குள், ''காலையில் மந்திரி வீட்டிலிருந்து போன் வந்தது. அவருடைய மைத்துனர்தான் உங்கள் இடத்திற்கு வருகிறாராம்.''

ஜார்ஜ் - ஒரு மாநில மந்திரியுடைய உறவுக்காரர்.

கௌதமனுக்குப் புரிந்து விட்டது. தனது மாறுதலுக்குப் பின்னாலொரு மாநில மந்திரியே இருந்திருக்கிறார். மந்திரிக்கு முன்னால் நீதியாவது, சாதனையாவது... வேலை முடிந்தவுடன் நேரே ரயில் நிலையத்திற்குப் போய் தனக்கு மட்டும் ஒரு டிக்கெட் பதிவு செய்துவிட்டு வந்தான்.

**வா**சற்படியை பார்த்தபடியே அம்மா படுத்திருந்தாள். அருகே போய் உட்கார்ந்தான் கௌதமன்.

''என்னப்பா வாட்டம்?'' வாஞ்சையுடன் கேட்டார் அம்மா. பதிலேதும் சொல்ல முடியாமல் உட்கார்ந்திருந்தான் கௌதமன்.

தன் தலையை உயர்த்தி, கௌதமனின் மடிமீது வைத்துக் கொண்டு, அவனது வலது கையை இழுத்து தன் இரு கரங்களாலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டார். அம்மாவின் குழந்தைத் தனம் அவனை உலுக்கியது.

''ஆபீசிலே ஏதாவது பிரச்னையா?''



மௌனம் காத்தான் கௌதமன்.

''டிரான்ஸ்ஃபரா...?'' என்று துல்லியமாகக் கேட்டார்.

''ஆமாம் அம்மா. டெல்லி.''

இப்போது அம்மா மௌனமானார்.

''நான் என்ன செய்ய முடியுமம்மா - மத்திய அரசு வேலை.''

அம்மாவின் மௌனம் தொடர்ந்தது. சிறிது நேரத்திற்குள், தனது மடி வெப்பமாவதை உணர்ந்த கௌதமன், அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவரது கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

''அம்மா....'' என்று அலறியபடி அவளது முகத்தை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான்.

சில விநாடிகளில் அம்மாவே பேசினார்.

''என்னை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிட்டுப் போக கொஞ்சம் அவகாசம் கொடுக்க மாட்டார்களா கௌதம்?''

வேதனையின் வெடிப்பில் கதறினான் கௌதமன்.



''உங்க அப்பா போனபோதே நானும் போயிருக்கணும். உனக்காக இத்தனை காலம் இருந்து விட்டேன். எனக்காக, இன்னும் ஒரு சில நாட்கள் - சில நாட்களே இருக்க முடியாதா?'' சற்று நிறுத்திவிட்டு, ''ஏன் கௌதம், எனக்கு கொள்ளி வைக்கவாவது, உன்னுடைய டெல்லி அனுமதிக்காதா?'' என்றார்.

கௌதமனால் தன் அழுகையை அடக்க முடியவில்லை. அன்று இரவு தன்னுடைய சிறந்த சேவைகளுக்காக மேலதிகாரிகள் கொடுத்த சான்றிதழ்களையும், அம்மாவின் உயிர் போராட்டத்திற்கான மருத்துவமனை குறிப்புகளையும் இணைத்து நீண்டதொரு மனுவை தயார் செய்தான்.

மறுநாள், அலுவலகத்திற்குப் போனபோது மந்திரியின் மைத்துனர் ஜீன்சும், கூலிங் கிளாசுமாக - கிளாமராக வந்திருந்தார். பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு, தனது மனுவை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டான் கௌதமன்.

வீட்டிற்கு திரும்பியபோது வீடு பூட்டிக் கிடக்க, பக்கத்து வீட்டு பாட்டி வந்து அம்மா சீரியசாகி விட்டதால், சுகம் மருத்துவமனைக்கு போயிருப்பதாகச் சொன்னார்.

ஆட்டோவைப் பிடித்து 'சுகம்' போனபோது, ICU வார்டில் அம்மா ஆக்சிசன் மாஸ்க்'கோடு உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். பதற்றத்துடன் டாக்டர்களும், நர்சுகளும் மானிட்டரையே பார்த்தபடி ஏதோ செய்து கொண்டிருந்தனர்.

பதினைந்து நாட்களுக்குப் பின், அம்மா தனி அறைக்கு மாற்றப்பட்டார். மருத்துவச் செலவு கழுத்தை நெறிக்க, கௌதமன் மனைவி குந்தவையின் நகைகள் யாவும் செட்டியார்க் கடை தராசிற்கு வந்தன. தராசு முப்பதாயிரம் தரலாமென்றது. அவரோ இருபத்தி ஐயாயிரம்தான் தந்தார்.

தலைமை அலுவலகத்திடமிருந்து பதிவுத் தபால் வந்திருந்தது. அவனது கோரிக்கை மனு, காரணமேதும் குறிப்பிடப் படாமல் நிராகரிக்கப் பட்டதோடு, உடனே டெல்லியில் ரிப்போர்ட் செய்யவில்லையெனில் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை செய்தது.

அன்றிரவே ரெயிலைப் பிடித்து டெல்லி சென்றான். கரோல் பார்க் பகுதியில் ஒரு பழைய லாட்ஜ்ஜில் அறை போட்டுவிட்டு, மந்திரியைப் பார்க்க செயலகத்திற்குப் போனான்.

ஐ.ஏ.எஸ். அடிமையான மந்திரி, செயலரைப் பார்க்கச் சொன்னார். செயலர், கோரிக்கை மனுவைப் படித்ததாகத் தெரியவில்லை. உண்மைப் பிரச்னைகளைக் கேட்கின்ற மனநிலையிலும் இல்லை.

''யூஸீ மிஸ்டர் கௌதம், உங்களுடைய சேவையைப் பற்றியோ, நேர்மையைப் பற்றியோ நாங்கள் குறை கூறவில்லை. நௌ யூ ஆர் அண்டர் ஏ டிரான்ஸ்ஃபர். ஒபே த ஆர்டர்.'' என்று சற்று அழுத்தமாகச் சொன்னார்.

''எனது தாயார் சுகம் மருத்துவமனை ICU பிரிவில் அட்மிட் ஆகி இருக்கிறார்கள். வேண்டுமானால் அந்த மனை தொலை பேசியில் விசாரியுங்கள்''

''என்னைப் பொறுத்தவரை நானொரு பொறுப்புள்ள அதிகாரி. விதிமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவன். தவறான தகவல்களை எப்போதும் கொடுத்ததில்லை'' என்றான் கௌதமன்.

''ஸாரி, மிஸ்டர் கௌதம். ஒபே த ஆர்டர்'' என்றார் இறுதியாக. மறுநாளே டில்லி அலுவலகத்தில் சேர்ந்துவிடுவதாகக் கூறிவிட்டு வெளியே வந்தான் கௌதமன்.

இந்தியா கேட்டைச் சுற்றி கண்ணுக்கெட்டிய தொலைவில் எங்கும் புல்வெளிகள், உயர்ந்த மரங்கள், பரந்த பூங்காக்கள், பளபளப்பான அகன்ற பாதைகள், பல வகைகளில் - வண்ணங்களில் ஃபாரின் கார்கள், டையும் ஷூவுமாக பரபரக்கும் உயர்வகுப்பு மனிதர்கள், சுடிதார் தேவதைகளின் கைகளைக் கோர்த்தபடி காதலர்கள் (அ) கணவர்கள்!

இந்தியா கேட் பாதையின் முடிவில் குடியரசுத் தலைவரின் கட்டிடங்கள், பாராளுமன்றம், உச்ச நீதிமன்றம், மந்திரிகளின் குடியிருப்பு விதிகள்.... எந்த நாட்டிற்கும் குறைவுபடாமல் இந்தியா பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

கோவணமே ஆடையாக, எச்சில் உணவுகளே வாழ்க்கையாக, பாதையோரமே படுக்கையாக, ஏமாளித்தனமே விதியாகிப் போன குடிமக்களைப் பற்றி சிறிதுகூட யோசிக்க நேரமில்லாமல் இந்திய ஜனநாயகம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

செயலகம் எங்கும் கோப்புகள் - அவைகளைப் பணமாக்கிடும் அதிகாரிகள். கோப்புக் கட்டுகளில் மனித உயிர்கள் முனகிக் கிடக்க, இவர்களோ - கோட்டும் சூட்டுமாக, ஏ.சி.யும் - பெப்சியுமாக பிசியாக இருக்கின்றனர்.

நீதியைத் தேட உருவாக்கப் பட்ட சட்டங்களும் விதிமுறைகளும், நிறையப் படித்தவர்களிடம் ஏவல் வேண்டி மனித மனங்களை காலில் போட்டு மிதிக்கின்றன.

கரோல் பாக் பஸ்ஸைப் பிடித்து அறைக்கு வந்ததும் குந்தவைக்கு ஃபோன் செய்து பேசினான். அம்மாவின் உடல்நிலை அப்படியே தான் தொடர்ந்தது. மறுநாள் காலையில் வேலையில் சேர வேண்டிய நிர்ப்பந்தத்தை விளக்கிவிட்டு, தனக்கு விடுப்பு கிடைக்கும் வரை அம்மாவைக் கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டான். அப்படியே தனது அலுவலக ஃபோன் நெம்பரைச் சொன்னான்.

புதுடெல்லி அலுவலகம் மிகவும் பிசியாகத்தான் இருந்தது. கௌதமனுக்கு அன்பான

வரவேற்பும் கிடைத்தது. தனக்கு ஒதுக்கப்பட்ட கேபினில், தனக்குப் பிரியமான பொக்கை வாய்க் காந்தி.

உதவியாளர்கள் அனைவரும் இந்தியிலேயே பேசினார்கள். தனது அரைகுறை ஹிந்தியைக் கொண்டு அவர்களை சமாளித்தான். மதிய உணவிற்கு நான்கு சப்பாத்திகளோடு 'சப்ஜி'யை சாப்பிட்டுவிட்டு கேபினில் நுழைந்தபோது, குந்தவையிடமிருந்து போன் வந்தது.

''அம்மா, நம்மை விட்டுப் போய்விட்டார்'' - என்று சொல்லி முடிப்பதற்குள் குந்தவையின் அழுகை வெடித்தது. மேற்கொண்டு பேச முடியாமல் ஃபோனை வைத்து விட்டாள்.

காந்தியமும், சத்தியமும் தன்னை அனாதையாக்கி விட்டதை உணர்ந்தான் கௌதமன்.

அம்மா கேட்டுக் கொண்டதெல்லாம் ஒன்றுதான். தான் யாருக்காக இத்தனை ஆண்டுகாலம் வாழ்ந்திருந்தாரோ அந்த செல்ல மகனின் மடியில் உயிர் பிரிய வேண்டும். அன்று, குழந்தைத் தனமாக தன் மடியில் தலை வைத்துக் கொண்டு, கையை எடுத்து தன் கைக்குள் இறுக்கிப் பிடித்துக் கொண்டு - தன் சாவிற்கு ஒத்திகை பார்த்தாளே அந்தத் தாயின் நியாயமான விருப்பத்தைக் கூட நிறைவேற்ற முடியாத பாவியாகி விட்டேனே - என்று அவன் மனம் நீதி கேட்டது. நீதியின் அலறல் உடலெங்கும் பரவ, ''அம்மா...'' என்று அலறியபடி, நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தான். ★

## மாடு வளர்க்க வரி!

**பா**ரதம் ஒரு விவசாய நாடு. இங்கு விவசாயிகளுக்கு பல சலுகைகள் அளிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் தெருவிற்கு தெரு குரல் எழுப்பி விவசாயிகளுக்கு ஆதரவாக இருப்பது போல காட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் நிலைமை என்ன தெரியுமா?

அங்கு மாடுகள் வளர்க்க அரசுக்கு வரி செலுத்த வேண்டும். அது மட்டுமின்றி அரசு நிலத்தில் மாடுகளை மேயவிட வரியாக ஆண்டிற்கு ரூ. 146 செலுத்த வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. அதே போல், வீட்டில் வளர்க்கும் செல்ல பிராணிகளுக்கும் லைசென்ஸ் பெற வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதைத் தவிர சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா, வண்டி போன்ற ஏழைகளின் வாகனங்களுக்கும் வரி செலுத்த வேண்டுமாம். இது ஜனவரி 15-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.



# புத்தகம் அறிமுகம்




நூலின் பெயர் : **ஆஹா**
நூலாசிரியர் : கல்யாணமாலை வி.மோகன்
வெளியீடு : கல்யாணமாலை பப்ளிகேஷன்ஸ்,
8/2, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை - 600 017
விலை : ரூ. 40 பக்கங்கள் : 160

நூலாசிரியர் தமது வாழ்வில் சிறுவயது முதல் சந்தித்த மனிதர்கள், சங்கடங்கள், சந்தோஷங்கள், சுமைகள் இவற்றைத் தமது அனுபவத்தின் வாயிலாகத் தெரிவிக்கிறார். தடைகளைப் படிகளாக்கி இவர் வாழ்க்கையில் ஏறி வந்த விதம், இந்நூலைப் படித்தால் புரியும். திருமணங்களில் ஏற்படும் சங்கடங்கள், பிரச்னைகள்... இவற்றை துறை சார்ந்து இவர் தீர்த்து வைத்த விதம் போன்றவை நல்ல படிப்பினை. உண்மைக் கதைகள்தான் என்றாலும் சுவாரஸ்யத்திற்குப் பஞ்சமில்லை.

நூலின் பெயர் : **திருமணத் திருத்தலங்கள்**
நூலாசிரியர் : மீரா நாகராஜன்
வெளியீடு : கல்யாணமாலை பப்ளிகேஷன்ஸ்
8/2, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை - 17
விலை : ரூ.50 பக்கங்கள் : 144

திருமணப் பிரார்த்தனைத் தலங்கள், திருமணத் தடைகளை நீக்கும் பரிகாரத் தலங்கள், அத்தலங்களில் செய்யப்படும் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைத் தாங்கியுள்ள நூல். நல்லதோர் வழிகாட்டி. புகழ் பெற்ற பதினாறு தலங்களின் முழு விவரங்கள் உள்ளன. இந்தத் தலங்களுக்கு எந்தெந்த நேரங்களில் செல்லலாம், எப்படிச் செல்லலாம் என்று வழிகாட்டும் விதம் சிறப்பு.

நூலின் பெயர் : **மனித நேயம்**
நூலாசிரியர் : கவிஞர் மீ. விஸ்வநாதன்
வெளியீடு : விஷ்வதீபம் பதிப்பகம்
3டி, அக்ஷயா, ராயல் ஸ்பிரிங், 85, முதல் அவன்யூ,
இந்திரா நகர், சென்னை - 20.
விலை : ரூ.35 பக்கங்கள் : 112

பாரதி கலைக்கழகத்தின் கவிமாமணிப் பட்டத்தை சென்ற ஆண்டு பெற்றிருக்கும் கவிஞர் மீ.விஸ்வநாதன், பல்வேறு சூழ்நிலைகளில் தாம் எழுதியவற்றில் 42 கவிதைகளைத் தொகுத்து இந்த நூலாக்கி, பட்டத்திற்குத் தகுந்தவராகத் தம்மை நிறுவியிருக்கிறார். மரபில்

தேர்ந்தவராகக் காட்டுகிறது, நூலின் சில கவிதைகள். வலுவான பாரதத்திற்கும் காமராஜருக்கும் இவர் கட்டியிருக்கும் மரபுக் கவிதைக் கோட்டையில் இவரது க்வியாட்சி தெள்ளெனத் தெரிகிறது. பின்பகுதி புதுக்கவிதையில் ஸ்ரீரமண ஜோதியும் வாக்கு பலிக்கிறதும் ஆரோக்கியமான சிந்தனாவாதியாகக் காட்டுகிறது.

நூலின் பெயர் : **வ்ள்ளலார் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

நூலாசிரியர் : கங்கா ராமமூர்த்தி

வெளியீடு : கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017

விலை : ரூ. 40 பக்கங்கள் : 176

வள்ளலாரின் 180 ஆவது பிறந்தநாள் வெளியீடாக இந்த நூலைக் கொண்டு வந்திருக்கிறார் நூலாசிரியர். வள்ளலாரின் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சிகளை சுவைபடக் கூறியிருக்கிறார். நூலுக்கு அணிந்துரை நல்கியுள்ளவர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள்.

நூலின் பெயர் : **முதல் ரசிகை**

நூலாசிரியர் : கவிஞர் பி.எஸ்.ஜெய்சங்கர்

வெளியீடு : ராசி பதிப்பகம்

10, மத்தியப் பேருந்து நிலைய்ம், வட்டம் - 24, நெய்வேலி - 607 801

விலை : ரூ. 50 பக்கங்கள் : 128

மடக்கி எழுதினால் புதுக்கவிதை என்ற மரபை மாற்றி, புதுக்கவிதையிலும் சந்தத்தைச் சேர்த்த விதம் நல்லதோர் கவிப்பாங்கு. பல கவிதைகளில் திரைப்படப் பாடல் அமைப்பின் தாக்கம் தெரிகிறது. காதலும் காதலின் உறவும் பிரிவும் சிந்தனைகளாய் வெளிப்பட்டிருக்கின்றன.




நூலின் பெயர் : **வியக்க வைத்த வித்தகர்கள்**

நூலாசிரியர் : வல்லிபுரம் சுபாஷ் சந்திரன்

வெளியீடு : ஜயவிஜய பதிப்பகம்

Q2, டார்ன்புள்ஸ் ரோடு 2வது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை-35

விலை : ரூ. 50 பக்கங்கள் : 176

நூலாசிரியர் தமது அனுபவங்கள் வாயிலாக சமூகத்தில் பரவலாக அறியப்பட்ட பதிமூன்று பேரைப் பற்றி இந்த நூலில் எழுதியுள்ளார். காஞ்சி சுவாமிகள் மூவருடனும் தமக்கேற்பட்ட அனுபவங்கள், இவர் வாழ்வில் முன்னேற நண்பர்களும் தாயாரும் எந்த வகையிலெல்லாம் உதவி செய்தனர் என்பன பற்றி விவரித்துள்ள பாங்கு நன்றாக அமைந்துள்ளது.



நூலகம்

# மரணத்தின் மருத்துவர்

சரயு

**நோ**ய்க்கு மருந்துண்டு. மருத்துவமும் உண்டு. ஆனால் மரணத்துக்கு மருத்துவருண்டா என்றால், நிச்சயமாக உண்டு என்கிறார் ஜாக் கெவொர்க்கியன் என்னும் அமெரிக்க டாக்டர்.

விஞ்ஞானமும் மருத்துவமும் அசுர கதியில் முன்னேறிக் கொண்டிருந்தாலும் சில நோய்கள் இன்னமும் மனித ஆளுமைக்கு அடங்காமல் மக்களை வாட்டி வதைக்கின்றன. இதில் முதலாவது புற்று நோய். இந்நோயால் ஏற்படும் ரணமும் சதை வளர்ச்சியும் தாங்க முடியாத வேதனையைத் தருகின்றது. முற்றிய புற்றுநோயிலிருந்து மீள்வது கடினம்! அடுத்தபடியாக 'அஸிமியர்ஸ்' (Alzheimer's) என்னும் நோய் வந்து விட்டால் படிப்படியாகக் கவனக் குறைவு, ஞாபக சக்தியின்மை என்று முற்றி, கடைசியாக மலத்துக்கும் சோற்றுக்கும் வேறுபாடு அறியாமல் மனிதன் சமைந்திருக்கும் நிலை ஏற்பட்டு விடும். அதேபோல் சிறுநீரகக் கோளாறில் எத்தனை தடவை ரத்த சுத்திகரிப்பு செய்து கொண்டாலும் குணமாகாத வதை பாட்டில் நோயாளி துவண்டு விடுவார். மற்றொன்று படிப்படியாக மூளையும் முதுகுத் தண்டும் தாக்கப்படும் 'மல்டிபின் ஸ்கெலரோசிஸ்' என்னும் நோய்.

இம்மாதிரியான தீரா நோயால் சிலர் தன்னை பீடித்துள்ள நோயின் கடுமை தெரிந்து, தன்னிலை உணர்ந்து உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தானே தற்கொலை செய்து கொள்வதற்குத் தேவையான உடல் வலுவோ மனத்திடமோ இல்லாதவர்களுக்கு மருத்துவரின் உதவி தேவைப்படுகிறது. அந்த உதவியை டாக்டர் ஜாக் கெவொர்க்கியன் அளிக்க முன்வந்தார்.

இவர் அமெரிக்காவில் மிக்சிகன் மாநிலத்திலுள்ள டெட்ராயிட் நகரைச் சேர்ந்தவர். அடிப்படையில் ஒரு நோய்கூறு மருத்துவர் (Pathologist). வயது 74. மருந்தும் மருத்துவமும் தோற்றுவிட்ட நோயாளிகளுக்கு மரணம்தான் தீர்வாக அமைய முடியும் என்றும், அதற்கு மருத்துவர்கள் உதவ வேண்டும் என்பதும் இவருடைய அசைக்க

முடியாத கருத்து. ஆகவே 1990-லிருந்து தீரா நோயாளிகள் தங்களை மாய்த்துக் கொள்ள இவர் உதவி செய்ய ஆரம்பித்தார். இதை 'உதவியுடன் கூடிய தற்கொலை' (assisted suicide) என்று குறிப்பிட்டார்கள். கருணைக் கொலை என்றுகூட இதைச் சொல்வதுண்டு. இதை ஒரு புனிதப் பணியாக கருதி அவர் செய்து வந்தார்.

தீரா நோயாளிகள் வாழ்க்கையின் கடைசி கணங்களில் அவதியால் துடிக்காமல் இறக்க இவர் இரண்டு முறைகளைக் கையாண்டார். முதலாவது 'கார்பன் மோனாக்ஸைடு' என்ற விஷ வாயு நிரம்பிய பையில் நோயாளிகள் தாங்களே முகத்தைப் புதைத்துக் கொண்டால் சில நிமிடங்களில் அவர்கள் இறப்பது நிச்சயம். மற்றொன்று அவர் உருவாக்கிய 'மெர்சிட்ரன்' என்ற மெஷினில் உள்ள பொத்தானை அழுத்தினால் தனித்தனி பாட்டில்களில் இருக்கும் உப்புநீர், தூக்க மருந்து, 'பொடாசியம் க்ளோரைடு' திரவங்கள் ஒன்றாகக் கலந்து நோயாளியின் உடலில் பாய்ந்து விடும். இரண்டு நிமிடங்களில் உயிர் பிரிந்து விடும். இந்த உபகரணங்களை அவரே சப்ளை செய்து அவற்றை உபயோகிப்பதற்கு பயிற்சியும் அளித்தார். கடைசி நிமிடத்தில் நோயாளிகள் தாங்களே தான் அவற்றை தங்கள் மீது செலுத்திக் கொள்ள வேண்டும்.



1990 ஜூன் மாதம் ஜேனட் அட்கின்ஸ் என்ற 54 வயது பெண்மணி 'அல்சிமியர்ஸ்' நோயால் கடுமையாகத் தாக்கப்பட்டு தவித்த பொழுது, டாக்டர் கெவொர்க்கியனின் உதவியை நாடி தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

தொலைக்காட்சியில் இந்தச் செய்தி வெளியான பொழுது மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பல நோயாளிகள் டாக்டர் கெவொர்க்கியனுடன் தொடர்பு கொண்டார்கள். மரணத்துக்கு தேதி குறித்து விடப்பட்டவர்கள், நடக்க முடியாத, பார்வை இழந்து, ஒவ்வொரு அங்க அசைவுகளுக்கும் பிறர் உதவியை நாடுபவர்கள், தற்கொலை முயற்சியை மேற்கொண்டு தோற்றுப் போனவர்கள், கண்ணியமாக இறக்க விரும்பியவர் என ஏராளமானவர்கள் இதில் அடக்கம்.



ஜேனட் அட்கின்ஸின் மரணத்துக்காக டாக்டர் கெவொர்க்கியன் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. ஆனால் மிக்சிகன் மாநிலத்தில் தற்கொலைக்கு உதவுவது சட்ட ரீதியான குற்றமில்லை ஆதலால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் அவர் 'மெர்சிட்ரான்' மெஷினை மீண்டும் உபயோகிக்கக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டது.

1991 அக்டோபரில் மர்ஜோரி வான்ஸ், ஷெர்ரி மில்லர் என்ற நோயாளிகள் டாக்டர் கெவொர்க்கியனின் உதவியுடன் 'கார்பன் மோனாக்ஸைடு' உள்ளுக்கிழுத்து மரணமடைந்த பொழுது அவர் மீண்டும் சர்ச்சைக்கு உள்ளானார். பத்திரிகைகள் அவரைக் கடுமையாகத் தாக்கி விமர்சனம் செய்தன. அமெரிக்க மருத்துவ சமூகமும் வெகுண்டு எழுந்தது. உயிரைக் காப்பதுதான் மருத்துவ தர்மமென்றும், அதைப் போக்கடிக்க மருத்துவர்கள் துணை போகக்கூடாதென்றும், அப்படி தற்கொலை செய்து கொண்டவர்கள் சொர்க்கத்துக்குப் போக முடியாதென்றும், டாக்டர் கெவொர்க்கியன் வக்ர புத்தி உடையவனென்றும் கூறி அவருடைய மருத்துவ லைசென்ஸை ரத்து செய்தது.

மறுபடியும் அவர்மீது வழக்கு போடப்பட்டாலும் சட்டம் வலுவாக இல்லாததால் செல்லுபடியாகவில்லை.

1992 நவம்பரில் தற்கொலைக்கு உதவுவது குற்றம் என்று ஒரு தற்காலிக சட்டம் மிக்சிகனில் கொண்டு வரப்பட்டது. அதற்குள் எட்டு தீரா நோயாளிகள் டாக்டர் கெவொர்க்கியனின் உதவியால் தாங்களே மரணத்தை தேடிக் கொண்டார்கள்.

மற்ற மாநிலங்களிலுள்ள நோயாளிகளிடமிருந்தும் அவருக்கு தொடர்ந்து அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன.

இடையிடையே மீண்டும் வழக்குகள், அவருக்கு சிறை வாசம்... சட்டத்திலுள்ள ஓட்டைகளாலோ அல்லது சாட்சியம் போதாததாலோ அவர் விடுவிக்கப்பட்டார். ஒருசமயம் அவர் சிறையிலிருந்த பொழுது தன்னை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டதால் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். அவருடைய நலம் விரும்பிகள் அவருக்காக ஜாமீன் கொடுத்தார்கள்.

டாக்டர் கெவொர்க்கியன் மீண்டும் இந்தக் 'கொலைப் பணி'யைச் செய்தால் அவரைக் கைது செய்து விட வேண்டுமென்று அமெரிக்கக் காவல்துறை அவருடைய நடவடிக்கைகளை கண்காணிக்க ஆரம்பித்தது. அவர்களிடமிருந்து தப்பவும், அதேசமயம் தன் பணியையும் தொடர்ந்து செய்வதற்காகவும் டாக்டர் கெவொர்க்கியன் நோயாளிகளுடன் ரகசியமாகத் தொடர்பு கொண்டார். அவர்கள் வீட்டுக்கு

வெளியே உள்ள பூங்கா போன்ற பொதுஇடங்களில் உயிரை மாய்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். விஷயம் அறிந்து போலீஸ் வருவதற்குள் அவர்தான் தங்கியிருக்கும் ஹோட்டல் அறையைக் காலி செய்து விடுவார். இந்தப் பணியில் அவருக்கு உதவியாக இருந்தவர்கள் அவருடைய சகோதரி மார்கரெட் ஜானஸ‶ம், ஜாஃப்ரே ஃபிஜர் மற்றும் மைக்கேல் ஸ்வாட்ஸ் என்ற வழக்கறிஞர்களும், ஜார்ஜஸ் ரெடிங் என்ற மனநல மருத்துவரும், நீல்நிகால் என்ற மருந்து சப்ளையரும் மேலும் சில நண்பர்களும்தான்.

கடந்த 13 ஆண்டுகளில் டாக்டர் கெவொர்க்கியன் 130 தீவிர நோயாளிகள் தாங்களே உயிரை முடித்துக் கொள்ள உதவி செய்துள்ளார். அதற்காக பத்திரிகைகள் அவரை ஏசின. நக்கலாக 'டாக்டர் மரணம்' என்று அவரை அழைத்தன. மருத்துவ சமூகத்திலும் பெரும்பான்மையோர் அவருடைய செயலை ஆதரிக்கவில்லை. அவர்மீது தொடர்ந்து கொலை வழக்குகள் பதிவு செய்த வண்ணமாக இருந்தது. ஏனென்றால் சட்டப்படி மனிதனின் உயிர்மீது அரசுக்குத்தான் உரிமை உள்ளது. அதை அவன் தானே தன் விருப்பப்படி முடித்துக் கொள்ளக்கூடாது.

ஆனால் டாக்டர் கெவொர்க்கியன் இதை ஒரு சமூக சேவையாகத் தான் செய்வதாக சொல்கிறார். இதற்காக அவர் பணம் பெற்றுக் கொள்ள மாட்டார். அவர் திருமணமாகாதவர். மிகவும் எளிமையாக ஒரு சிறிய இடத்தில் ஆடம்பர வசதிகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தார். எந்த ஒரு நோயாளியும் இறந்துபோக உதவி கேட்டால் உடனே இசைந்து விட மாட்டார். முதலில் நோயாளியுடன் விரிவாகப் பேசி, அவருடைய பழைய மருந்து சீட்டுகளைப் பார்த்து, அவற்றைக் கொடுத்த டாக்டர்களையும் விசாரித்து, நோயாளியின் உறவுகளிடமும் கலந்தாலோசித்து, கடைசியாக நோயாளி மனம் மாறுவதற்குக் கூட அவகாசம் அளித்த பிறகே அவர் உதவிக்கரம் நீட்டுவார்.

அவருடைய வாதம் என்னவென்றால், தற்கொலைக்கு உதவுவது இன்று கிளம்பிய புது பிரச்னை அல்ல. பண்டைய காலத்தில் கிரேக்க மருத்துவ பிதா ஹிப்போகிரேடஸே அதற்கான மருந்துகளைத் தயாரித்தார். புராதன

### ஒரு நாவல் படமாகிறது

பிரெஞ்சு இலக்கியம் கண்ட பேராசான்களில் விக்டர் ஹியூகோ முதன்மையானவர். ''ஏழை படும் பாடு'' என்ற நாவல் உலகத்திலுள்ள முக்கியமான மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழில் கவியோகி சுத்தானந்தபாரதியார் இந்த நாவலை மொழியாக்கம் செய்துள்ளார். 1949-ஆம் ஆண்டில் இந்த நாவல் தமிழில் திரைப்படமாக்கப்பட்டது.



# மார்ச்

மார்ஸ்மொனாத்

''மார்ஸ்'' செவ்வாய் கிரகத்தின் ஆங்கிலப்பெயர் - இதிலிருந்துதான் ஆங்கிலக் காலக்கணக்கின் மூன்றாவது மாதத்திற்கு மார்ச் என்று பெயர் வந்தது.

| மார்ச் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞா | தி | செ | பு | வி | வெ | சனி |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

ஹாலந்து நாட்டு டச்சுக்காரர்கள் இந்த மார்ச் மாதத்தை ''லென்ட் மாண்ட்'' (Lentmaand) என்று அழைக்கின்றனர். ஐரோப்பாவின் அந்த நாளைய ''சாக்ஸோனிய'' (SAXONS) இனத்தவர் மாதங்களை ''மொனாத்'' (MONATH) என்றனர். இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் டச்சுக்காரர்கள். இந்த மாதத்தை ''லென்ஸ்டென் மொனாத்'' (Lencton Monath) என்கின்றனர்.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் ''பிரபலவிரதம்'' எனப்படும் ''தி கிரேட் ஃபாஸ்ட்'' 36 நாட்கள் மார்ச் மாதமாக அனுசரிக்கப்பட்டதாம். இந்த நாட்கள் நீட்டிப்பு 7-ம் நூற்றாண்டு வரை நில்வி வந்தது.

ஆங்கிலோ சாக்ஸோனியர்கள் ''ஹிரெத் - மொனாத்'' (Hreth Monath) என்றனர். இந்த மாதத்தில் காற்று அதிக வேகமாக வீசுமாம். ''ரஃப்மந்த்'' (Rough - Month) முரட்டுமாதம் என்றும், ''பாயிஸ்டரஸ் மந்த்'' (Boisterous Month) மிகமிக பயங்கரமாதம் என்றும் அழைத்தனராம். ''ஹிலிட் - மொனாத்'' (Hlyd - Monath) பலவிதமான மாறுபட்ட தட்பவெப்ப காலநிலை நிலவும் மாதம்.

பிரெஞ்சு நாட்டில் காலெண்டர் சீர்திருத்தம் மேற்கொண்டு பதிப்பித்ததில் ''வெண்டோஸ் மந்த்'' (Ventose Month) எனப் பெயரிடப்பட்டது. வெண்டோஸ் (Wind) காற்று மிகுதியாக வீசும் என்கின்றனர்.

மார்ச் மாதத்தின் கடைசி மூன்று நாட்கள் ஏப்ரல் மாதத்தினின்று கடன் வாங்கிச் சேர்க்கப்பட்டது.

ஸ்காட்லாந்து நாட்டில் அனுசரிக்கப்படும் காலண்டர்களில் மார்ச் மாதம் ஏப்ரலிடம் கடன் வாங்கியதைப் போலவே பிப்ருவரி மாதமும் ஜனவரியிலிருந்து கடன் வாங்கிச் சேர்க்கப்பட்டதாம்.

**விஜயகீதா**

நன்றி : BREWER'S DICTIONARY OF PHRASE AND FABLE

## வாசகர் எண்ணங்கள்... கடித மஞ்சரி

பத்மநாபனுக்கு சமர்ப்பணம் கட்டுரையில் காணும் ஒ.கே. சொல் பிறப்பில் பல செய்திகள் உள்ளன. அவற்றுள் அனுமதி வழங்கும் ஆணைகளில் ஒப்புதல் ஒப்பமிட்ட ஒ.கே. என்பாரின் பெயர் சம்மதம் குறிக்கும் சொல்லாக உருப்பெற்றதாகக் கருதப்படுகிறது. கண்ணியம் குறைவாகத் தொனிப்பதாக இங்கிலாந்து கருதியதால் அச் சொல் பழைய ஆங்கில மரபு அகராதிகளில் காணப்படுவதில்லை...

*- எஸ். கோபால், சென்னை - 18*

அமெரிக்க பயண அனுபவங்களின் சிகரமாக நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டு களித்தது போன்று இருந்தது பயணக் கட்டுரை.

*- சாமி, திருவண்ணாமலை*

நீரிழிவு நோய் 3500 ஆண்டுகளுக்கு முன்பே அறியப்பட்ட ஒன்று எனக்கூறி, அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய விரிவான கட்டுரை மூலம் கட்டிப் போட்டு விட்டார் ஜெயானந்தன்.

*- குவளை எழில், விருகம்பாக்கம்*

இப்படியும் இருந்தது நம்நாடு - நெஞ்சை சிலிக்க வைத்தது. கட்டுரை நடை நன்றாக இருந்தது.

*தஞ்சை என்.ஜே. கந்தமாறன்*

நம்நாட்டுப் புராதன பல்கலைக் கழகங்கள் கட்டுரையில் நாளந்தா பகைவரால் சிதைக்கப்பட்ட போது தீயிடப்பட்ட நூல்நிலையம் முழுமையாக எரிந்துமுடிய ஆறு மாதங்கள் பிடித்ததாம் - இந்த வரியைப் படித்த போது நாட்டின் கல்விச் செல்வத்தைச் சிதைக்கிறோமே என்று தீ கூட கால தாமதம் செய்திருக்கிறது.. அதை மனிதனால் புரிந்து கொள்ள (முடி வில்லை என்ற ஆதங்கம் எழுந்தது

*அய்யாறு வாசுதேவ*

கவனியுங்கள் கைப்பற்றுங்க என்று ஸ்வாமி எழுதிய நம்பிக்கை தொடர் வாழ்வியல் கருத்துக்களை எளிய முறையில் விளங்கச் செய்யு படி அமைந்திருந்தது. வேடன் பு கதையில் வலை என்பது வாழ்க்கை புறாக்களே சுகங்கள் என்று கூறி ருந்தது சிந்திக்க வைக்கும் வரிகள்

*- எஸ். பொன்னுசாமி, உடுமலை*

நீரிழிவு நோய் தற்போது பல யும் ஆட்டிப் படைத்து வருகிறது இத்தருணத்தில் அந்நோய் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்திய மரு துவ மஞ்சரி பாராட்டுக்குரியது.

*- டி.பூபதிராவ், காஞ்சிபுர*

கவனமுடன் செய்யும் எந்த செயலுக்கும் அமோக வெற்றி கிடைக்கும் என்ற நல்ல கருத்தை நம்பிக்கைத் தொடர் புல படுத்தியது!

*- கார்க்கோ, உடுமலைப்பேட்டை*

ராமன் பாதம் பட்டதும் உயிர்த்து எழுந்த அகலிகை போன்று ராமானந்தர் கால் பட்டதும் சீடரா மாறினார் கபீர்தாசர். ராமலிங்க ஜோதியில் கலந்தார், கபீர் மலரா மாறினார். நல்ல ஒற்றுமை!

*-புலவர் ந.ஞானசேகரன், திருலோக்கி*

புகழ் பெற்ற இயக்குநர் அகிரா குரோசவாவின் ஜப்பான் சினி கதையை எடுத்துக் காட்டி மகிழ்வித்து விட்டீர்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு மொப்பசானின் கதை மஞ்சரியில் வந்தது.

*- ஆடுதுறை கோ.ராமதா*

80 Edited and Published by R.Narayanaswamy for and on behalf of the Kalaimagal Office, No.1, Sanskrit College Street, Mylapore, Chennai - 600 004. Ph. 24983099.24983799 An
Printed at Rajam Offset Printers, 1.Portugese Church Street, 9th Lane, Chennai - 600 00
Managing Editor : S.Lakshmanan


ஹோட்டல் அகாடெமி
கலைமகளுடன்
இணைந்து நடத்தும்

**மகளிருக்கான சமையல் போட்டி**

- கடலை மாவால் தயார் செய்யப்படும் இனிப்புவகைப் பதார்த்தங்களைப் பற்றி சமையல் குறிப்பு அனுப்புங்கள். ஒருவர் எத்தனை குறிப்பு வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- தேர்வு செய்யப்படும் சமையல் குறிப்பு எழுதியவரை ஹோட்டல் அகாடெமி சென்னை தி.நகருக்கு அழைத்து அவரைக் கொண்டு அவ்இனிப்பு வகையைச் செய்யச் சொல்லும். நடுவர்கள் தீர்ப்பின்படி 15 சமையல் குறிப்புகள் தேர்வு செய்யப்படும். கலைமகளில் வெளியிடப்படும். பரிசுகள் வழங்கப்படும்.
- பரிசுகள் சென்னையில் நடைபெறும் விழாவில் ஹோட்டல் அகாடமியினால் வழங்கப்படும். புதுமையான முறையில் கேட்டரிங் கல்லூரியை நடத்திவரும் ஹோட்டல் அகாடெமி பல புதுமையான சமையல் குறிப்புக்களை எதிர்பார்க்கிறது. ஏற்கனவே கலைமகளுடன் இணைந்து ஹோட்டல் அகாடெமியினர் சமையல் குறிப்புப் போட்டியை நடத்தியுள்ளனர். உங்கள் குறிப்புகள் கலைமகளுக்கு மார்ச் 15-ஆம் தேதிக்குள் வந்து சேரவேண்டும்.

சமையல் குறிப்பு ☐ ஆசிரியர் கலைமகள் ☐
சமஸ்கிருத கல்லூரி சாலை ☐ மயிலாப்பூர் ☐ சென்னை - 600 004.

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER REG
NO. 1105/57, POSTAL REGN.NO. TN/PMG(CCR)/549/03-05 & WPP NO. 342




சந்தோஷப் பொழுதுகள் எதுவானாலும்

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
PURE GHEE SWEETS

பாண்டி பஜார், சென்னை PH: 2 43 12345

அடையார், அண்ணா நகர், மயிலாப்பூர், அசோக் நகர்

கோவை பொள்ளாச்சி மேட்டுப்பாளையம் திருப்பூர் ஈரோடு
சேலம் கரூர் திருச்சி மதுரை பெங்களூர் ஹைதராபாத்

